இலவச வெளியீடு: GERMANY , ENGLAND ஆனி. June 2014

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

மணி 64

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A.



Orientalische Textilien & Schmuck

24ம் ஆண்டுநிறைவை முன்னிட்டு 01.04.2014 முதல் தொடர் மலிவு விற்பனை!

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகைமாளிகை

Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836


# நரேந்திரமோடியும் இலங்கைத் தமிழர்களும்!

## அட! ஆண்கள் இல்லாத உலகமா?

யேர்மன் புத்தகத்தில்....

## மறுபிறவி

உள்ளே சீடி
யோகசுவாமிகள்
நற்சிந்தனைப் பாடல்கள்
(குறிப்பிட்ட அளவே உண்டு)





## சீனாவில் சிரிப்புப் பயிற்சி!


T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288 விபரம் பக்கம் 14

ஆதவன் தொலைக் காட்சியின் யேர்மனி முகவர்
ATHAVAN TV
கனீன் எலக்ரோனிக்ஸ்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740 விபரம் பக்கம் 05

Gopara Gnanam
Jewellery Shop
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
மேலதிக விபரம் 8ம் பக்கம்

Ceylon Imbiss Page.32
Tel:0231 7252859

Lucky Fly page.17
0234 239 90 32 Mobile:0179 14 84 892

StaR - Impex
Tel.: 0231/8602696



டோட்முண்ட் நகரில்

மாபெரும் ராஜமுத்திரை

Mr.P.Sritharan,
Proprietor

S.K.Silks & Gold Paraadise

மாபெரும் அதிரடி மலிவு விற்பனை!

31.05.2014 முதல் 7.06.2014 வரை

SUPER SAVE
FOR ONE WEEK ONLY

பல வகையான சாறிகள்!
பலவிதமான பஞ்சாபிகள்!!
யாவும் 50 % விலைக் கழிவில்

என்றும் புதியது அழகின் இரகசியம் அது.

Adler str 33 - 44137 Dortmund Tel:0231 9501 647



S.K.S

மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்




Tel.: 0201/236925
Fax: 0201/236928

இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மங்கல வைபவகங்களுக்கு ஏற்ற மணவறைகள் மற்றும் சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும் நாடுங்கள்...

Ria MONEY TRANSFER இதோ!!! துரித பண மாற்றுச் சேவை!

APIRAAMI ENTERPRISE
Pferdemarkt 9
45127 ESSEN



வட்டிகளின் சுமைகள் இனிமேல் உங்களுக்கு வேண்டாம்!

நீங்கள் 50.000€ வை 1.20வீத வட்டிக்கு எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

அதாவது 1000€ வுக்கு மாத வட்டி 1€ ஆகும்

மேலும் விரிவான விவரங்களுக்கு இலவசமாக எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்!



cash2help
Tel: 030-311 704 33
info@cash2help.de


# நம்பமுடியாத உண்மைகள்!

மாதங்கி

### காயம் ஆற கட்டெறும்பைக் கடிக்கவிடு!



இராணுவத்தினர் உடலில் ஏற்படும் காயங்களுக்கு இயற்கைத் தையல் (natural sutures) போடும் இந்த எறும்புகள். எறும்புகள் காயம் உள்ள இடத்தில் கடிப்பதினால் அவ்விடத்தில் எறும்புகளின் பலமான தாடையில் இருந்து வரம் சுரப்பிகள் உடல்காயங்களை ஓட்டவைக்கின்றது. அப்படி என்றால் -அட ராசவே கட்டெறும்பு என்னைக் கடிக்குது- என்ற பாடல் பெண்ணின் மனக்காயத்திற்கு தையல் போடுகிறதா?



'man-made'

புரோக்கோலி (broccoli is ) மனிதனால் ( 'man-made' ) உருவாக்கப்பட்ட தாவரம். இது பலவகையான முட்டைக் கோஸ் (cabbage crops) களில் இருந்து உருவாக்கப் பட்டதாம்.

ஆனால் இத்தாவரம் நீண்ட ஆண்டுகளுக்கு முற்பட்டது என்கிறது உலகம். அப்பொழுதே இந்தக் கலப்படம் ஆரம்பித்துவிட்டதா?




உலக கைத்துப்பாக்கி சுடும்போட்டியில் வென்ற யப்பானியர், அப்போட்டியில் கலந்துகொள்வதற்கு முதல் ஒரு மாதம் வரை உண்மைத் துப்பாக்கியை என்றுமே கையில் தோட்டதே இல்லையாம். ஆனால் அவர் உலகமே அதிசயிக்கும் வண்ணம் உலகப் போட்டியில் வென்றுவிட்டார்.

**வாழ்நாள் சாதனை!** எட்டுத் தேனீக்கள் வாழ்நாள் முழுவதும் சேர்த்த தேனின் அளவு ஒரு தேக்கரண்டியே! தேன் இனிக்கிறது. அதனுடைய உழைப்பை திருடிய மனதிற்கோ தேள் கொட்டியதுபோல் உள்ளது.

**மயிரில் கைவைக்கும் அரசு!** வட கொரியாவில் தலை முடி வெட்டுவதற்கும், அங்கு அரச அங்கிகாரம் பெற்ற 28 விதமான ஸ்ரைல்களை மட்டுமே, வெட்ட மக்கள்



வற்புறுத்தப்படுவர். மயிரில் கைவைப்பது என்றாலும் மன்னர் தலையசைக்க வேண்டுமோ!

### பலம்பொருந்திய மொழியாக யேர்மன் மொழி!




அமெரிக்காவில் இரண்டாவது பலம்பொருந்திய மொழியாக யேர்மன் மொழி இருந்துள்ளது. அங்கு பாடசாலைகளிலும், உள்ளுர் ஆட்சி நிர்வாகத் திலும், பத்தரிகைகளிலும் யேர்மன் மொழியே பெரும் ஆதிக்கம் செலுத்தியது. உலக யுத்தம் (WWI.) பின் யாவும் தலைகீழாக மாறிவிட் டது. விரோதியின் மொழியை தூக்கி எறிந்துவிட்டனர்.

### நிலவில் காலடி வைத்த மனிதர் நிலவுக்கே பிறந்தவர்!

நிலவில் முதல் கால் பதித்தவர் நீல் ஆம்ஸ்ரோங். இரண்டாவதாக நில வில் கால் பதித்தவர். Buzz Aldrin 1969. இவர் தாயாரின் பெயர் என்ன தெரியுமா? நிலவு. ஆம் moon! (full name is Marion Moon) அப்படி என்றால் அவர் நிலவுக்குப் பிறந்தவர். நிலவில் கால் அடிவைப்பதற்கு முன்பே நிலவைக் காலால் உதைத் தவர்.


Buzz Aldrin's mother's maiden name was Moon.

### கடவுச் சீட்டு இன்றிக் கடக்கவல்லவர்.



கடவுச் சீட்டு (passports ) இன்றி பயணிக்கக் கூடியவர் யார் தெரியுமா? ஆம் இங்கிலந்து மகராணிதான் (Queen Elizabeth) இங்கிலந்து கடவுச்சீட்டு அனைத்திலும் ராணி முத்திரை உண்டு. எனவே நான் ராணி என்று சொல்லிவிட்டு பயணிக்கவேண்டியது தான்.

**உங்கள் சப்பாத்து** வியர்வையால் துர்நாற்றம் வீசுகிறதா? ஒரு தேயிலை எடுத்து அதனுள் போட்டுவிடுங்கள் துர்நாற்றம் அதனால் உறுஞ்சப்பெற்று உடன் நீங்கிவிடும்.

**நம்பமுடியாத உண்மைகள் ஆனால் அலசிப்பார்க்கவும்.**




Wilhelm Str.09
33602 Bielefeld

Bielefeld நகரில்.... 3 in one

Lakshmi Jewellery &Silks

பழைய பவுனுக்கு புதிய பவுண் மாற்றிக் கொடுக்கப்படும்!

தங்கள் மனங்கவர் டிசைன்களில் தங்க ஆபரணத் தெரிவுகளுக்கும், வண்ண வண்ண நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கும் நினைவில் நிற்க வேண்டிய ஸ்தாபனம்Lakshmi Jewellery &Silk

Asia super markt

பலசரக்குப் பொருட்களையும் எம்மிடம் மலிவாகப்பெற்று பயன் பெறுங்கள்

திங்கள்கிழமை முதல் சனிக்கிழமை வரை காலை 9.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை

Tel:0521 4283 510


தொலைபேசி: Ruban 0179 72 35 729
http://www.lakshmi-jewellerysilks.de



## வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 213


ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

*Chief Editor:*
**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**



**Brinker Höhe.13**
**58507 Lüdenscheid**
**Germany**
**Tel: 02351/45 88 62**
**0157 88 77 31 56**

e-mail: vettimaniy@hotmail.com
Company No: 8876276



"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது






Vettimaniy Ltd
Bank: NatWest
Account number: 71836721
Sort code: 60-15-29
BIC NWBKGB2L
IBAN :
GB39 NWBK 6015 2971 8367 21


# நரேந்திரமோடியும் இலங்கைத் தமிழர்களும்!

இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் என்பது வெறுமனே ஒரு அரசியல் நகர்வு. மாறாக கொள்கை ரீதியாகவும் செயற்பாட்டு முறையிலும் மாற்றங்கள் ஏற்படாது.

தி.மு.காவுக்கு எந்த ஆசனங்களும் கிடைக்கவில்லை என்பது கவலையும் வெட்கமும்தான். ஆனால் மறுபுறத்தில் ஜெயலலிதாவுக்கு மத்தியில் பேரம்பேச முடியாமல் போனமை கருணாநிதிக்கு அரசியல் ரீதியில் ஒரு சிறிய ஆறுதல்.

**-அ.நிக்ஸன்-**



இந்திய தேர்தலில் பாரதீய ஜனதாக்கட்சி வெற்றி பெற்றுள்ளது. நரேந்திரமோடி பிரதமராக பதவியேற றுள்ளார் ப.ஜ.க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை தூர விலத்தி வைப்பார் என்றுதான் பலரும் எதிர்ப்பார்த்தனர். ஆனால் அதற்கு மாறாக பதவியேற்பில் அவர் பங்குபற்றி விட்டார். இருந்தாலும் அதனை இரு இராஜதந்திர முறை என்று எடுத்துக் கொள்ள வேண்டும். அடுத்தகட்ட நகர்வுகளை வைத்துக் கொண்டே நரேந்திரமோடி பற்றிய விமர்சனங்களை முன்வைக்க வேண்டும் அந்த அடிப்படையில் அவரின் வெற்றி இலங்கை தொடர்பான இந்திய நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுமா என்பது பிரதான கேள்வியாகும். ஆனாலும் நரேந்திரமோடியால் இலங்கைத் தமிழர்களுக்கு ஏதேனும் விடிவு கிடைக்கும் என்றும் பலர் நம்புகின்றனர். ஆட்சி மாற்றங்கள் ஏற்படும்போது இவ்வாறான நம்பிக்கைகள் வந்து போவது இயல்பானதுதான்.

### பிராந்திய நலன் கருதிய செயற்பாடு

இந்தியாவை பொறுத்தவரை அதன் வெளியுறவுக் கொள்கை என்பது எழுதப்பட்ட மாற்றமடையாத ஒன்று. காலத்தின் தேவைக்கு ஏற்ப சில மாற்றங்கள் செய்யப்படும். அத்துடன் பிராந்திய நலன் கருதி சில விட்டுக்கொடுப்புகளுக்கும் இந்திய வெளியுறவுக் கொள்கையில் இடமுண்டு. ஆனால் எந்த கட்சி ஆட்சி அமைத்தாலும் இந்திய வெளியுறவுக் கொள்ளை என்பதில் மாற்றம் செய்ய முடியாது. அது இந்திய கொள்கை வகுப்பாளர்கள், இந்திய தேசிய நலன்கருதி தீர்மானம் எடுப்பவர்களின் கைகளில்தான் உள்ளது. ஆகவே பாரதீய ஜனதா கட்சி ஆட்சியமைத்தாலும் இந்திய வெளியுறவுக் கொள்கையில் மாற்றங்களை எடுத்தவுடன் செய்ய முடியாது என்பது வெளிப்படையானது.

பாரதீய ஜனதா கட்சி 1990 ஆம் ஆண்டு ஆட்சியமைத்தது வி.பி.சிங்க பிரதமராக பதவிேற்றார். பின்னர் வாஜ்பாய் தலைமையிலும் பா.ஜ.க ஆட்சி அமைத்தது. ஆனால் இலங்கைத் தமிழர்களுக்காக அப்போது எதுவும் செய்ய முடியவில்லை. ஜேர்ச் பெர்ணான்டோஸ் பாதுகாப்பு அமைச்சராக இருந்த காலத்தில் புலிகளுக்கு சார்பான ஒரு நிலைப்பாட்டை முன்வைத்திருந்தார். ஆனால் அவர் அங்கம் வகித்த பா.ஜ.கா அரசாங்கத்தினால் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்ற ஒரு அரசியல் தீர்வை முன்வைக்க முடியாவில்லை. புலிகள் மீதான தடையைக் கூட நீக்க முடியவில்லை.

### பொய்யான நம்பிக்கைகள்

ஆக கட்சி அரசியல் ஊடாக இலங்கைத் தமிழர்களுக்கா குரல்கொடுத்து இந்தியா எங்கும் பேசலாம் என்ற ஒரு சுதந்திரத்தை தவிர யார் ஆட்சியமைத்தாலும் இந்தியாவின் எழுதப்பட்ட வெளியுறவுக் கொள்கைளை தாண்டி இலங்கைத் தமிழர் விடயத்தில் அரசியல் தீர்வை முன்வைக்கவோ அல்லது உதவிகூட செய்யவோ முடியாது என்பதற்கு இது ஒரு சிறிய உதாரணம். ஆகவே நரேந்திரமோடி தலைமையில் பா.ஜ.க ஆட்சி ஆட்சிக்கு வந்துவிட்டது எல்லாம் சரியாகி விடும் என்ற நம்பிக்கைகள் ஊட்டப்படுவது மற்றுமொரு ஏமாற்று முயற்சி.

வேண்டுமானால் மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்துக்கு சிறிய அளவில் சில நெருக்குதல்கள் ஏற்படலாம். ஆனாலும் இரு நாட்டு இராஜதந்திர உறவின் அடிப் படையில் அவ்வாறான நெருக்குதல்கள் கூட விலகு வதற்கான வாய்ப்புகள்தான் அதிகம் உள்ளன. இந்தியாவைப் பொறுத்தவரை கட்சி அரசியல் செயற் பாடுகளை மையப் புள்ளியாக வைத்துக் கொண்டு வெளியுறவுக் கொள்கையை தீர்மானிக்கும் பண்பு கிடையாது. கட்சிக் கொள்கைக்கு ஏற்ப வெளியுறவுக் கொள்கையை வகுக்கும் பண்பு இலங்கை அரசாங் கத்திடம் மாத்திரமே உண்டு. (ஏனெனில் அது சிறிய நாடு என்பதுடன் பிராந்தியத்தில் அதன் முக்கியத்துவம் குறைவு என்பதனால் இலங்கை வெளியுறவுக் கொள்கையில் சர்வதேச நாடுகள் பெரியளவு கவனம் செலுத்துவது இல்லை. ஆனால் போர் நடைபெற்ற காலத்தில் புலிகளை அழிப்பதற்கான அல்லது தமிழ் மக்களின் அரசியல் முக்கியத்துவத்தை குறைப்பதற்கு ஏற்ற முறையில் அனைத்து நாடுகளுடனும் உறவை பேணுகின்ற ஒரு இராஜதந்திர முறையை முன்னாள் ஜனாதிபதி அமரர் ஜே.ஆர் ஜயவர்த்தன உருவாக்கி கொடுத்தார்.)

### தமிழ் நாட்டு அரசியல்

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை பா.ஜ.கவின் வெற்றி பேரம் பேசும் சக்தியை இல்லாமல் செய்துள்ளது. ஜெயலிதா தலைமையிலான அ.தி.மு.க 37 ஆசனங்களை பெற்றபோதும் அந்த ஆசனங்களை கொண்டு மத்தியில் எதுவும் செய்யமுடியாத நிலைதான் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் நரேந்திரமோடி அரசாங்கத்திடம் அறுதிப் பொரும்பான்மை உள்ளது. இந்த நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து மத்தியில் உள்ள அ.தி.மு.க உறுப்பினர்கள் 37 பேரும் எதைச் சாதிக்கப் போகின்றனர் என்பது இங்கு மற்றுமொரு கேள்வியாகும். இந்த கேள்வியில் கலைஞர் கருணாநிதிக்கு சிறியளவிலான மகிழ்ச்சி உண்டு. தி.மு.காவுக்கு எந்த ஆசனங்களும் கிடைக்கவில்லை என்பது கவலையும் வெட்கமும்தான். ஆனால் மறுபுறத்தில் ஜெயலலிதாவுக்கு மத்தியில் பேரம்பேச முடியாமல் போனமை கருணாநிதிக்கு அரசியல் ரீதியில் ஒரு சிறிய ஆறுதல்.

தொடர்ச்சி 29ம் பக்கம்




# கணினிமுன் கண்மூடித் தியானம் செய்யுங்கள்!







செய்யும் தொழிலே தெய்வம். தியனம் செய்யுங்கள் மன அழுத்தம் நீங்கம்! என்றோ ஞானிகள் சொன்னதை இன்று விஞ்ஞானிகள் சொல் கிறார்கள். கம்ப்யூட்டர் வேலை மன அழுத்தத்தை தருதா? அப்ப தியானம் செய்யுங்கள்.

இன்றைய நவீன உலகில் மன அழுத்தத்திற்கு ஆளாகாத மனிதர்களே இல்லை எனலாம். அதிலும் மணிக் கணக்கில் கணினி முன் வேலை செய்பவர்கள் பற்றி கேட்கவே வேண்டாம். இந்த மன அழுத்தத்தை போக்க என்ன வழி இருக்கிறது என்று யோசிக்க ஆரம்பித்தவுடன், நினைவில் வரும் முதல் யோசனை தியானம் செய்வது.

ஏனெனில் மன அழுத்தத்தை குறைக்க தியானமும் ஒரு கருவியாக பயன்படுகிறது. தியானம் மன அழுத்தத்தை எதிர்த்து போரிடுகிறது. இது தவிர, உடல் நலத்தை ஆதரிக்கிறது மற்றும் நாள்பட்ட வலிகளை தாங்குவதற்கு சக்தியைத் தருகிறது.

மேலும் தியானத்தால் நல்ல தூக்கம், மகழ்ச்சி, அமைதியான மனநிலை ஏற்படுகிறது. கணினியில் வேலை செய்யும் போது, சிறிது நேரம் கண்களை மூடிக் கொண்டு பிடித்த விதமாக தியானம் செய்வதே கணினி தியானம் எனப்படுகிறது.

இதை செய்வதற்கான சில வழிமுறைகளைக் காண்போமா!!! கம்ப்யூட்டர் வேலை மன அழுத்தத்தை தருதா? அப்ப தியானம் செய்யுங்க...

கணினிக்கு முன் அமர்ந்து கொண்டு ஆழமான, சுத்தமான சுவாசத்தை இழுத்து, மெதுவாக வெளியே விடவும். வேலை செய்யும் போது இவ்வாறு செய்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

கணினியில் வேலை செய்து கொண்டிருக்கும் போது, சுவாசம் தாறுமாறாக இருப்பதாக உணர்ந் தால், உடனே வேலை செய்வதை ஒரு நிமிடம் நிறுத்தி விடவும். கண்களை மூடிக்கொண்டு மூச்சை நன்றாக மூக்கு வழியே இழுக்கவும். முதலில் நுரையீரலில் காற்றை நிரப்பிய பின், கீழே கொண்டு செல்லவும்.

பின் மேல் நெஞ்சுக் கூடு விரிவதையும், பின்பு நெஞ்சுக் கூட்டின் கீழ் பகுதி விரிவதையும் உணர வேண்டும். பின்பு மெதுவாக உதட்டின் வழியே சுவாசத்தை வெளியே விட வேண்டும். இவ்வாறு சில நிமிடங்கள் செய்த பின் நீங்கள் மிகவும் புத்துணர்ச்சியுடன் காணப் படுவீர்கள்.

தியானத்தால் செய்யப்படும் இந்த மூச்சுப் பயிற்சி எங்கு வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டு மானாலும் செய்யப்படும் ஒரு எளிய பயிற்சியாகும்.

கணினி முன் அமர்ந்து கொண்டு இவ்வகை தியான முறைகளை எளிதாக செய்யலாம். இதற்கு மூளை பலத்தை உபயோகிக்க வேண்டும். மனத்தால் செய்யும் தியானத்தில், நீங்கள் செய்யும் வேலையையே கையில் எடுத்துக் கொள்ள வேண்டும்.



அதாவது இன்று இந்த வேலையை முடித்து விடுவேன் என்று அடிக்கடி மனதில் உறுதியோடு கூறிக் கொள்ள வேண்டும். இப்படி அடிக்கடி நினைக்கும் போது, மற்ற தேவை யில்லாத சிந்தனைகள் மனதை விட்டு நீங்கிவிடும். மனம் வெற்றிடமாகிவிடும். அதில் வேலையைத் தவிர வேறு எந்த சிந்தனையும் இருக்காது. மேலும் தொடங்கிய வேலைகளை எளிதாக குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்து விடலாம்.

அலுவலகத்தில் வேலை செய்பவர களையும் சேர்த்துக் கொண்டு அனைவரும் ஒரே நேரத்தில், ஒரே மாதிரி, நாங்கள் இந்த வேலையை செய்து முடிப்போம் என்று மனதாலோ அல்லது வார்த்தைகளாலோ கூற வேண்டும். இவ்வாறு கூறும் போது அங்கு ஒரு அசாத்திய அமைதி நிலவும்.

## Computer Meditation

இதனால் அலைபாய்ந்து கொண்டிருக்கும் மனம் ஓரளவு அமைதி அடையும்.

கம்ப்யூட்டர் முன் அமர்ந்து வேலை செய்யும் போது, மன அழுத்தம் அதிகரித்தால் சில வார்த் தைகளை மனதிற்குள் சொல்ல, மனம் அமைதி பெரும். உதாரணத்திற்கு, வேலைக்கிடையே “ஓம் சாந்தி, ஓம் சாந்தி“ என்ற வார்த்தைகளை சிறிது நேரம் கூறலாம்.

பிடித்த கடவுள் அல்லது பிடித்த மகான்களின் படங்களை வேலை செய்யும் அறையில் வைத்துக்கொண்டோ அல்லது அவர்களை மனதில் நினைத்துக் கொண்டோ “எனக்கு அமைதியும் நிம்மதியும் வேண்டும்.

அதற்கு உங்களது வழிகாட்டுதல் தேவை“ என்று மனமுருக பிரார்த்தனை செய்யலாம். இதனால் மன அழுத்தம் குறைந்து, சில நிமிடங்களில் மனம் அமைதியடைந்து விடும்.

5 நிமிட தியானத்தை, 10 நிமிடமாக மாற்றலாம். இந்த தாமதம் மன அமைதியை மேலும் அதிகரிக்கும். இதனால் தியனத்தின் இறுதி கட்டத்தில் சொல்ல முடியாத இன்பத்தை அனுபவிக்கலாம். மேலும் மனம் மகிழ்ச்சி அடைவதை நன்கு உணரலாம்.

GAAYATREE PARTY SERVICE
உங்கள் விருப்பம்போல் இலங்கை இந்தியா சீனா மலேசியா நாட்டு உணவுகள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் சுத்தமாகவும் சுவை ஆறாது தயாரித்து விருப்பம்போல் பரிமாறுகின்றோம்.
கொத்துரொட்டி
புரியாணி
நூடில்
தந்தூரிச்சிக்கன்
இறால் சம்பல்
இறால் கறி
இன்னும் பல சுவையான உணவுகளும் உண்டு இவை அனைத்தும் வெளிநாட்டு மக்களுக்கும் ஏற்ற வகையில் பரிமாறக் காத்திருக்கின்றோம்.
e.mail:gaayatree-cs@live.de

TeL:07021 99 39 363
Mobile:0152 17 50 77 40
73230 Kirchheim-Unter-Teck
Stuttgart
Gaayatree Party Service





Photo Studio Shankar-Photography
& Prisanthi Make-Up Artist
நீங்கள் எல்லோரும் அழகானவர்களே!
உங்கள் அழகுக் கோணங்களைத் தெரிவுசெய்து
மெருகூட்டி உங்கள் வனப்பை மாறாத
அழகுப்பரிசாகத் தருகின்றோம்.
திருமணம் மற்றும் உங்கள் சிறப்பு வைபவங்கள்
அனைத்தையும் சிறப்பான ஒப்பனைகளுடன்
படமாக்கித் தருகின்றோம்!

YouTube
Find us on: facebook
mobil: 004915772464643
Shankar-Photography.com
Foto Studio & Make-Up
Hauptstrasse 22
Wuppertal-Germany
Tel:+ 49(0)202 -393 52 610
www.prishankar.de
ஐரோப்பா தழுவிய சேவை!

# விபத்துக்கள் இவருக்கோ வியப்புக்கள்!

## உலகத்திலேயே துர்அதிஷ்டமான அதிஷ்டக்காரன்!

**சிவஜெனனி அரவிந்தன்**

Frane Selak சேலக் ஒரு பாடல் ஆசிரியர். இவர் 1931ம் ஆண்டில் கிரோசியா நாட்டில் பிறந்தார். ஒரு நாள் 1962 ஆம் ஆண்டு சரயேவோவில் இருந்து புகைவண்டியில் பிரயாணம் செய்யும் போது தண்டவாத்தில் ஏதோ குறைபாடு வந்து அந்த புகைவண்டி பெரிய ஒரு ஆற்றுக்குள் விழுந்து விட்டது. மற்ற சக பிரையானிகள் ஆற்றுக்குள் மூழ்கி இறந்தார்கள், ஆனால் இவர் மட்டும் ஒரு கை உடை பட்ட நிலையில் வேறோரு குறைபாடும் இல்லாமல் நீந்தி வந்து உயிர் பிழைத்தார்.

இவரை 1962ம் ஆண்டில் இருந்து 40 வருடங்களாக கெட்டகாலம் துரத்த தொடங்கிற்று. இந்த விபத்து நடந்து சற்று வருடங்களுக்குப்பின் பிரேன் நியாக்காவிற்க்கு ஒரு சிறிய விமானத்தில் பயணம் செய்தபோது அந்த விமானத்தின் என்ஜின் இரண்டும் இயங்காமல் போக, விமானத்திற்குள் இருக்கும் காற்று அமுக்கம் குறைந்து இருந்த நிலையில் விமானத்தின் கதவொன்று திறபட பிரேன் சேலக்கை காற்று அமுக்கம் விமானத்திற்கு வெளியே தள்ளி கீழே விழுத்திற்று. பரசுட் ஒன்றும் இல்லாத நிலையில் இவர் பூமியை நோக்கி விழுந்தார். விழுந்தது எங்கே தெரியுமா? வைக்கோலின் மீது. பெரிதளவில் ஒரு காயமும் ஏற்பட வில்லை இவருக்கு.
ஆனால் இவர் வந்த விமானத்தில் இருந்த மீதி 19 பேரும் விமானம் மலை மீது மோதியாதால் உயிர் இழந்தனர்.

இது நடந்து இரண்டு வருடங்களுக்குப் பின் இவர் ஒரு பேருந்தில் பிரயாணம் செய்தார். அது பாதை முழுவதும் பனிக்கட்டிகள் இருந்தமையால், பேருந்து வழுக்கி ஒரு பள்ளத்தாக்குக்குள் விழுந்தது. இந்த விபத்தில் 4 பயணிகள் உயிர் இழந்தனர். ஆனால் பிரேன் உயிர் தப்பினார்.

சரி பொதுப்போக்கு வரத்தில் தான் இப்படி எல்லாம் நடக்கிறது என்று எண்ணிய, பிரேன் இதன் பின்னர் காரில் பிரயாணம் செய்யத் தொடங்கினார்.
ஆனால் 1970ம் ஆண்டு இவரது கார் என்ஜின் வெடித்து எரியத் தொடங்கிற்று. இவர் காரில் இருந்து வெளியே குதித்து உயிர் தப்பினார்.

1973யில் பெற்றோலில் நெருப்பு பிடித்து காருக்குள் எரியத்தொடங்கியது, அதில் இவரது தலை முடியும், சற்று எரிந்து விட்டது, வேறு ஒன்றும் பெரிதாக நடக்கவிலலை.

1995ல் ஒரு பேருந்து இவர் மேல் மோதிய பின்னரும் உயிர் தப்பினார். அதன் பின்னர் அடுத்த ஆண்டு ஒரு அவதானமில்லாத ஒரு பேருந்து ஓட்டுபவர் பிரேனின் கார் வருவது தெரியாமல் மோதப் போகப் பிரேன் காரை மறு பக்கம் திருப்ப மறுபடியும் ஒரு 300அடி மலையில் இருந்து கார் கீழே விழ்ந்தது.

பிரேன் அப்போ எங்கு தெரியுமா? அவர் காரின் யன்னல் வழியே குதித்து ஒரு மரத்தின் கொப்பில் தாவிக்கொண்டு இருந்து, மறுபடியும் உயிர் தப்பினார். இதற்கு பின்னர் ஒரு அசம்பாவிதமும் நடக்கவில்லை.

வாழ்வில் ஒருதடவையேனும் ஐக் பொட் எடுக்காதவர். எடுத்த முதல் தடவையிலேயே தனது 72ஆவது வயதில் அதாவது 2003ல் 1மில்லியன் டொல்லர்களை லொட்டரி ஐக் பொட்டின் மூலம் வென்றார். துரதிசட்க்காரனாக இருந்தவா அதிஷ்ட்டக் காரனாக மாறிவிட்டார். இப் பணத்தை இவர் உறவினர்களுக்கும், நன்பர்களுக்கும் செலவு செய்தார்.

இந்தக் கதையினை கேள்விப்பட்ட U.S சில் இருக்கும் David Ransom டெவிட் ரன்சம் இதை ஒரு 3நிமிட cartoon படமாக youtube மூலம் வெளியிட்டார். ஆனாலும் இந்த படத்ததை பார்த்த பிரேனுக்கு பெரிதும் பிடிக்கவில்லை. தன்னை சித்தரிக்கும் போது தனக்கு மீசை வைத்துவிட்டார்களாம் அது மட்டுமின்றி இவரது விபத்துக்களை மாறி மாறி பிழையாக கூறியிருக் கிறார்களாம் என்று குற்றம் சாட்டியுள்ளர்.







**விமானம் நொருங்குவதற்கு ஒரு நொடிக்கு முன் அதிஷ்ட தேவதை அழைத்துச் சென்றது!**










பிரேன் இதற்கு டெவிட் சொன்னது என்னவென்றால் பிரேன் தனக்கு எல்லாவற்றையும் சரி படுத்த உதவி புரிவார் என்றால் அவர் சந்தோசமாக அந்த படத்தை விடியோவை மாற்றி அமைப்பார் என்பதேயாகும்.

இவருக்கு ஐக் பொட் மூலம் கிடைத்த அதிஷ்டத்தை விட ஆண்டவன் ஒவ்வொரு விபத்தின்போதும் கொடுத்த அதிஷ்டமே வியப்புக்குரியது!

Kaneen electronics
15 வது ஆண்டில்..
ATHAVAN TV
ஆதவன் தொலைக் காட்சியின் யேர்மனி முகவர்
ஆதவன் தொலைக்காட்சியில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெறவேண்டுமா! மற்றும் உங்கள் கலைநிகழ்ச்சிகள் பெருவிழாக்கள் திருவிழாக்கள் ஆதவனில் ஒளிபரப்பவேண்டுமா! எம்மை நாடுங்கள். எமது துல்லியமான ஒளிப்பதி, ஒலிப்பதி உங்கள் நிகழ்ச்சிகளை மெருகூட்டும்.
மற்றும் சகல sat,Receiver,Camera-Alam கருவிகள் கொள்வனவு செய்வதற்கும் பொருத்துவதற்கும் நாடவும்!
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal
www.kaneenelectronics.de

திருக்கணித ஜோதிடம்
ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிராரர்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450









சிவகாமி மணவறைச் சோடினை
யோகன், யோகி:
02823/6838
Handy: 152 138 22 350

# அடம்பிடிக்கும் யானைக்கும் தாய்மொழி பிடிக்கும்!



## தாய் மொழியில் பேசுவதன் முக்கியத்துவம்

ரோம் நகரில் கி.பி.1427 இல் ஒரு சர்க்கஸ் கம்பெனி செயல்பட்டுவந்தது.அந்த சர்க்கஸ் கம்பெனியின் சிறப்பு யானைதான்! அந்த யானையின் பாகன் அந்த கம்பெனியிலேயே தங்கியிருந்து,யானைக்குப் பயிற்சி கொடுக்கிறான்.குட்டியாக இருந்த யானை மிகுந்த உற்சாகத்துடன் பாகன் கற்றுக் கொடுத்ததை சரியாகச் செய்து பார்வையாளர்களைப் பரவசப்படுத்துகிறது.மூன்று கால்களில் நிற்பது,முக்காலியில் ஏறுவது, சைக்கிள் ஓட்டுவது என அந்த யானை செய்யும் சாகசங்களால் சர்க்கஸீக்கு வரும் கூட்டம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

நாட்கள் நகர்கின்றன்ஒருநாள் அந்த யானைப்பாகன் இறந்துவிடுகிறான்.அதில் இருந்து அந்த யானை சரிவர சாப்பிடுவது இல்லைஅதன் கண்களில் இருந்து சாரை சாரையாக கண்ணீர் மட்டும் வழிந்து கொண்டே இருக்கிறது.அதன் உடல் சில நாட்களிலேயே மெலிந்து சோர்ந்து போனதுசர்க்கஸ் முதலாளி கால்நடை மருத்துவர்களை அழைத்து வந்து காட்டுகிறார்.அவர்கள் மருந்து,மாத்திரைகளை கொடுக்கிறார்கள்.ஆனாலும்,அதன் உடல்நிலையில் எந்த சிறு முன்னேற்றமும் ஏற்படவில்லைஅப்போது அங்கு வந்த வழிப்போக்கன் சர்க்கஸ் முதலாளியிடம், 'யானையை நான் குணப்படுத்தட்டுமா?' என்று கேட்கிறான்.அவருக்கு ஒரு வாய்ப்பு கொடுத்துதான் பார்ப்போமே என முடிவு செய்கிறார்.

அந்த வழிப்போக்கன் யானையின் அருகில் சென்று,அதன் காதருகே நின்று யானையிடம் ஏதோ சொன்னான்.யானையின் கண்களில் உற்சாகம் தெரியத் துவங்கியது.உடனே அது எழுந்து போய் சாப்பாடு வைக்கப்பட்ட இடத்திற்குச் சென்று சாப்பிட்டது.சர்க்கஸ் முதலாளி,அந்த நபரிடம் சென்று, " நீங்கள் அதன் காதருகே எதையோ சொன்னதும் சாப்பிட்டதே! அப்படி என்னதான் சொன்னீர்கள்?" என்று கேட்டார்.அந்த வழிப்போக்கன், "இந்த யானை இந்தியாவில் இருந்து வந்துள்ளது.யானைப்பாகன் இந்தியில் பேசி அதை பராமரித்து வந்தான்.பாகன் இல்லாததால் இந்த யானைக்கு அவன் பேசிய மொழியை கேட்காமல் வருத்தப்பட்டது.நானும் இந்தியாவில் இருந்து வருகிறேன்.அதனால் யானைக்கு அந்த மொழியில், 'அட முட்டாள் யானையே இப்படி சாப்பிடாமல் கிடந்தால் உடல் மெலிந்து செத்துவிடுவாய்' என்று சொன்னேன்' அவ்வளவுதான்" என்றான்.

ஒரு யானைக்குக் கூட அதைப்பழக்கியவனின் மொழி என்பது முக்கியமாக இருக்கிறது.ஆனால்,தமிழ்நாட்டில் மட்டுமே ஆங்கிலத்தில் பேசினால் மட்டுமே மரியாதை என்ற அடிமைப்புத்தி பரவிவிட்டது.மரபும்,தொன்மையும் கொண்ட தமிழ் மொழியின் பெருமைகளை நாமே புரிந்து கொள்ளவில்லை

உலகத்திலேயே எந்த நாட்டிலும் தாய்மொழியைத் தெரியாமல் எந்த துறையிலும் முன்னேற முடியாது. ஆனால், இங்கே மட்டும் தான் அது நடக்கிறது. இங்கே தாய்மொழியைக் கற்றுக்கொள்ளாமலேயே எந்தத் துறையிலும் உயர் கல்வியைக் கற்றுவிட முடியும்.ஆனால்,அது வாழ்க்கைச் சார்ந்ததாக இருக்குமா? என்பது கேள்விக்குறியே.நாம் அனைவருமே வாழ்க்கையை அர்த்தப்படுத்திக்கொள்ள விரும்புகிறோம். அதற்கு நமது தாய்மொழியின் பெருமையும், அதன் தொன்மையையும் தெரிந்திருப்பது அவசியம்.

இது தமிழகத்திற்கு மட்டுமல்ல இலங்கைக்கும் பொருந்தும். அங்கும் ஆரம்பக்கல்வியை ஆங்கிலத்திலேயே ஆரம்பிக்கும் மோகம் பிறந்துள்ளது. ஆங்கிலம்தேவைதான். ஆனால் தமிழ்தெரியவில்லை என்றால் தாய் மொழியும் இல்லை தமிழனும் இல்லை.

நன்றி: ஜுனியர் விகடன்.



# காதோடு காதாக!



**கலைக்கதிர் கதிர் துரைசிங்கம்**

### குந்தியிருக்கும் நாய்!




பொன்னர்: ஒரு தகவல் சொல்கிளேன் கவனமாகக்கேளும். கடைசியில் கேள்வி ஒன்று கேட்பேன். கிரமபோனைக் (gramo phone) 19ம் நூற்றாண்டின் இறுதியில் தோமல் அல்வா எடிசன் (Thomas Alva Edison) கண்டுபிடித்தார்.
ஒலிப்பதிவு செய்து மீளக்கேட்கக்கூடிய தட்டையும் கண்டுபிடித்துச் சாதனை படைத்தார்.

1959 ஆண்டில் இருந்து இசைத்துறையில் உயர் சாதனை படைத்தவர்களுக்கு தங்கமுலாமிட்ட ஒரு சிறிய கிராமபோனைச் செய்து -கிறாமி விருது- (Grammy Award) என அமெரிக்காவில் வழங்கிவருகிறார்கள்.

கிராமபோனில் இருந்து வரும் குரலை ஒரு நாய் கேட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்த ஓவியர் (artist, Francis Barraud). அதனைப் படமாக வரைந்து அந்த ஓவியத்திற்கு His Master's vaice என்று பெயரிட்டார். அவர் தனது ஓவியக் கண்காட்சி ஒன்றினை இங்கிலாந்தில் மேற்கொள்ள அவர் முயன்றபோதும் அது வெற்றி அளிக்கவில்லை. ஆனால் அவரது இந்த ஓவியத்தை விற்பனை ரீதியாக கிராமபோன் தட்டு (Record) தயாரிப்பு நிறுவனம் ஒன்று கிராமபோன் முன் குந்தியிருந்து நாய் குரல் கேட்கும் அந்த ஓவியத்தையும், அந்தப் பெயரையும் விலைகொடுத்து வாங்கி தங்கள் கொம்பனிக்கு HMV என்று பெயரிட்டு அந்தப்படத்தையும் தமது நிறுவனத் தின் இலட்சைனையாகக் கொண்டார்கள்.
**இப்போ கேள்விக்கு வருவோம்.**
கிரமபோனுக்கு முன் குந்தியிருந்து குரலைக் கேட்டுக்கொண்டு இருக்கம் நாய்! ஆண் நாயா? இல்லைப் பெண் நாயா?
கனகர்: இப்போ மனிசரையே ஆணோ! பெண்ணோ!! என்று கண்டுபிடிக்க மலசலகூடம் (ஆண்களுக்கு பெண்களுக்கு போட்) வரை போகவேண்டியிருக்கு. நீ குந்தியிருக்கும் நாயைக் காட்டி ஆணோ! பொண்ணோ!! என்று என்னைக் கேட்டால் நான் எங்கை போறது?
பொன்னர்: நீ எங்கையும் போகவேண்டாம். குந்தியிருக்கும் நாய் குந்தியே இருக்கட்டும். கொஞ்சம் சிந்தித்துப்பாரும். His Master's vaice என்றால் ஆண் நாயின் (His) எஜமான்னுடைய குரல் என்பது புரியவில்லையா!

### ஏழுபிறவி

சிவன் சந்நிதியில் கணவன் மனைவி பிரார்த்தனை செய்துகொண்டு இருக்கிறார்கள். மனைவி: நீ இறைவனிடம் என்ன வேண்டிப்பிரார்த்தனை செய்தாய். கணவன்: ஏழு பிறவியிலும் நீயே எனக்கு மனைவியாக அமையவேண்டும் என்று கடவுளை வேண்டினேன். அது சரி நீ என்ன வேண்டி வணங்கினாய் என்று சொல்லேன்.
மனைவி: ஏழுபிறவி என்று ஒன்று இருக்குமென்றால், இப்பிறப்பே ஏழாவதாக இருக்கவேண்டும் என்று இறைவனிடம் மன்றாடிப் பிரார்த்தித்தேன். என்றாள்.

### நல்ல நேரம்

குமார்: ஐயா கல்யாணம் கட்டினதில் இருந்து கஷ்டமும் துன்பமும்தான். சந்தோஷம் என்றது இல்லாமல் போச்சு. நீங்கள் எத்தனை கல்யாணம் நடத்தின அனுபசாலி, எனக்கு இப்படி ஒரு நிலைவரும் என்று ஏன் சொல்லவில்லை.
ஐயர்: ஊரிலும் சரி வெளிநாட்டிலும் சரி எங்கட கடமையைச் நாங்கள் ஒழுங்காகத்தான் செய்து கொண்டு வாறோம். தமிழில் விளங்காவிட்டால் என்று, ஆங்கிலத்திலும், கேட்காவிட்டால் என்று ஒலிவாங்கியிலும், விளக்கமாகச் சொல் வதில் நாங்கள் கவனமாகத்தான் இருக்கின்றோம். ஆனால் நாங்கள் சொல்வதை யார் கவனமாய் கேட்கினம்.
குமார்: எங்கை எப்ப! என்ன சொன்னீர்கள்?

ஐயர்: நீர் மணவறைக்கு வந்தில் இருந்து, நல்லநேரம் முடியப்போகுது! நல்ல நேரம் முடியப்போகுது ( Good time is going to end) என்று எத்தனை தரம் சொன்னனான். நான் சொன்னதைக் கேளாமல் கவனிக்காமல் நீர் உம்முடைய எண்ணப்படி தாலியைக் கட்டிப்போட்டு என்னை இப்ப கேட்டால்!!

## உங்கள் நாடு ஆனால்...



நியூசிலாந்திலிருந்து சுற்றுலாப் பயணியாக இலங்கை வந்திருக்கும் இவரது பெயர் ஷெரின்.
நடு மதியம் 2.00க்கு வேலை முடித்து திரும்பும் போது வீதியோரங்களில் குப்பைகளைப் பொறுக்கிக் கொண்டிருந்த இவரை கண்டதும் மனதுக்குள் அலாரம் ஒன்று அடித்துக் கொண்டது.

பலர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க அவர் அருகே சென்றேன். காரணத்தை அறிய....

அவரது பதில் என்னை சிந்திக்க வைத்தது.
**’இது உங்களது நாடு மட்டுமல்ல எனது உலகமுமாகும்.’**
........சிந்திப்போமா....





**Balas Apartment**
Holiday Home in Colombo and Jaffna for Rent
அழகான அமைதியான சூழலில் யாழ்பாணத்திலும்
கொழும்பிலும் அமைந்துள்ள வீடுகள்
உங்கள் விடுமுறையைக் கழிக்க அனைத்து வசதிகளுடனும்
AC மற்றும் சமையல் அறை- பாத்திரங்கள்
தேவைப்படின் சமைப்பதற்கு ஆளும் வழங்கப்படும்.
12 பேர் ஒன்றாக நிற்கக்கூடிய வீடு. முழுவிடாகவோ
தனி அறைகளாகவோ பதிவு செய்யலாம்.



Contact us: *Raj* Mobile Phone No: 0094777667002
Land Phone No: 0094112624547
மேலதிகவிபரம் அறிய தொடர்பு கொள்ளவும்.
Web சைடிலும் பார்வையிடலாம்.
www.balasapartmants.com balasapartments@yahoo.com

**Nirubagini Magendiran LL.M.**
Vereidigte Dolmetscherin und Übersetzerin
Tamil- Deutsch
Deutsch- Tamil
மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்
Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com



# உருகுவே நாட்டின் ஜனாதிபதியே!
# உலகிலேயே வறிய ஜனாதிபதி!

ராஜி





எளிமை என்னும் செல்வம்!



## THE POOREST PRESIDENT IN THE WORLD

அரசியலை வியாபாரமாக கருதும் சுரண்டல் முதலைகளின் மத்தியில் உருகுவேயின் ஜனாதிபதியான ஜோஸ் முஜாரிகா ஒரு வைரம்! உலகத் தலைவர்கள் மத்தியில் இவர் ஒரு ”மக்களின் மனிதர்”. இவருக்கு Presidente MAS pobre" (”வறிய ஜனாதிபதி”) என்ற செல்லப் பேரும் உண்டு காரணம், அவரது சம்பளத்தின் 90 சதவீதத்தை மக்களுக்காகவே கொடுத்து, வெரும் 1,250 டாலர்களில் தன் வாழ்க்கையை நடத்துகிறார்!

77 வயதான இவர் சமீபத்தில் ஸ்பெயினின் செய்தித்தாளான El Mundo விற்கு அளித்த பேட்டியில், ” எனக்கு இந்த தொகை போதும். இது எனக்கு போத வேண்டும். ஏனென்றால் இதுகூட இல்லாமல் வாழும் பலர் இங்கு உள்ளனர் ”, என்றாராம்!

இவரது மனைவி ஒரு செனட்டர்.. இவரும் தனது சம்பளத்திலிருந்து ஒரு பகுதியை நன்கொடையாக கொடுக்கிறார். கணவன்-மனைவி இருவரும் வாழ்வது ஒரு சாதாரண பண்ணை வீட்டில்! முஜாரிகாவின் மிக பெரிய சொத்து $ 1,945 மதிப்புள்ள அவரது 1987 வருடத்திய வோக்ஸ்வாகன் பீட்டில் கார் தான்!

முஜிக்காவிற்கு எந்த வங்கியிலும் கணக்கு இல்லை! கடன் இல்லை! அவர் பெரிதும் மதிப்பது அவரது நாய் Manuelaவின் தோழமை யை தான். இவர் வாங்கும் வருட சம்பளம் UK, US, Canada-வில் பிற அரசியல் தலைர்கள் வாங்கும் சம்பளத்தின் கால்வாசிக் கும் கீழே!

Suarez y Reyes என்னும் ஜனாதிபதி மாளிகையிலும் இவர் வசிப்பதில்லை. அவர் அம்மாளிகையை மிகவும் குளிரான நாட்களில் வீடற்ற குடும்பங்களுக்கு தங்குமிடமாக அனுமதித்துவிட்டார்.

முஜிக்கா சமீபத்தில் CEFIR (பிராந்திய ஒருங்கிணைப்பு பயிற்சி மையம்) நடத்திய “மெர்கோசுர் சவால்கள்” (தெற்கு பொது சந்தை) என்ற ஒரு விரிவுரையில் கலந்து கொண்டார். காயம்பட்ட அவருடைய மூக்கைப்பற்றி கேட்ட போது “கடுமையான புயல் காற்று காரணமாக சேதமடைந்த பக்கத்து வீட்டுக்காரனுடைய கூரையை சரி செய்யபோது ஏற்பட்டது”, என்று கூறினாராம்! பக்கத்து வீட்டுக்காரன் யாரென்றே தெரியாமல் வாழும் நம்மிடையே இப்படியும் ஒரு ஜனாதிபதி!

உருகுவே, தென் அமெரிக்காவின் இரண்டாவது மிக சிறிய நாடாகும். எனினும், அது அர்ஜென்டீனா, சிலிக்கு அடுத்தபடியாக $15,656 தனிநபர் ஜிடிபியுடன் கண்டத்தின் மூன்றாவது மிக வளர்ந்த நாடாக திகழ்கிறது.

சமீப ஆண்டுகளில், பல ஐரோப்பிய நாடுகளில் நிதி நெருக்கடி இருந்த போதிலும், உருகுவே பின்னடைதலை தவிர்க்க முடிந்ததோடல்லாமல் வளர்ச்சி வீதத்தையும் தக்க வைத்து கொண்டுள்ளது. முஜிக்கா 2010 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து, மிக குறைந்த ஊழல் நடக்கும் நாடாகவும் உருகுவே ஆகிவிட்டது.

உதை பந்தாட்ட உலகக்கிணப் போட்டி முதல் நடந்த நாடும் உருகுவேதான்.1930

உங்களுக்கு இப்போது கண்முன்னே நம் அரசியல்வாதிகளும் அவர்களது சொகுசு கார் மற்றும் பங்களாவும் வந்துபோகிறதா?! இதை தவிற கோடிக்கணக்கில் ஊழல்கள் வேறு! நாட்டை வறுமையாக்கிவிட்டு இவர்கள் பணக் காரர்களாக நடமாடும் அழகே அழகு!

அரசியல் தலைவர் இப்படியும் வாழலாம் என்ற இந்த ஒப்பற்ற வாழ்க்கை பாடத்தை படித்து நடப்போர் யாரேனும் உண்டா இங்கே?!!

-






# அட ஆண்கள் இல்லாத உலகமா?

## எதிர்காலத்தில் ஆண்கள் இனம் அழிந்துபோகுமாம் அதிர்ச்சி தரும் விஞ்ஞானம்!





அழிந்து வரும் 'ஒய்' குரோமோசோம்!. ஆண்களின் ஆயுள் குறைய காரணமாம்!!

எங்கே மனதன் யாரும் இல்லையோ அங்கே எனக்கோர் இடம் கேட்பேன்! எங்கே! நிம்மதி! எங்கே நிம்மதி!! அங்கே எனக்கோர் இடம் வேண்டும் என்ற பாடல் பல ஆண்டுகளுக்குமுன்னமே ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

நிம்மதியைத் தொலைப்பற்கு ஆசைதான் காரணமாக இருந்தாலும். அதனை விட்டு பெண்களே காரணம் என ஒரு போடு போட்டனர். ஆண்கள்! பெண்கள் இல்லாத உலகம் வேண்டும் என சலித்தவண்ணம் ஆண்கள் புறப்பட்டனார்.

ஆனால் இன்று வரும் செய்திகள் ஆண்கள் இல்லாத ஒரு உலகம் உருவாகப்போகிறது என அதிர்ச்சித் தகவலைத் தந்துள்ளது. இதோ அதன் விளக்கம். சும்மா விண்ணானம் அல்ல இது விஞ்ஞான விளக்கம். இது பற்றி 2 வருடங்களுக்கு முன் ஒரு கட்டுரையை, வெற்றிமணியில் கனக்ஸ் அவர்கள் எழுதியிருந்தது வாசகர்கள் அறிந்ததே! உலகில் பல உயிரினங்கள் அழிந்து வரும் நிலையில், மனிதகுலத்தில் ஆண்கள் அழிவைநோக்கி நகர்கிறார்களா?

ஆண்களின் ரத்த செல்களில் ஒய் குரோமோசோமின் அளவு நாளுக்கு நாள் குறைவதனாலேயே ஆணின் ஆயுள் குறைவதாகவும், அவர்களை கேன்சர் உள்ளிட்ட நோய் தாக்குவதாகவும் சமீபத்திய ஆய்வு ஒன்றில் கண்ட றியப்பட்டுள்ளது. ஆண்களுக்கு "ஒய் குரோமோசோம்" செக்ஸ் உறவுக்கு மட்டுமல்ல, அவர்களின் ஆயுளுக்கும் முக்கிய காரணியாக உள்ளது என்றும் அந்த ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பெண்களை விட ஆண்களுக்கு ஆயுள் குறைவு என்பது அனைவரும் அறிந்த ஒன்று. தற்போது ஆண்களில் ஆயுள் எதனால் குறைகிறது என்பதை பிரிட்டனில் உப்சலா பல்கலைக் கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

குரேமோசோம்கள் உயிரினங்கள் அனைத்தும் செல் எனப்படும் நுண்ணிய பகுதியால் ஆக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செல்லினுள்ளும் 46 குரோ மோசம்கள் உள்ளன. இந்த குரோமோசோமிற்குள் மனித வம்ச பரம்பரைச் செய்திகளை உள்ளடக்கிய வளை போன்ற நுண்ணிய துணுக்குகளான நியூக்ளிக் அமிலங்கள் அதாவது டி. என். ஏ. (D.N.A.) (டி ஆக்ஸிரிபோ நியூக்ளிக் ஆசிட்) உள்ளன.

ரத்த மாதிரி சோதனை உலக அளவிலான ஆராய்ச்சியார்கள் குழு ஒன்று வயது முதிர்ந்த ஆண்கள் 1600 பேரின் ரத்த மாதிரியை எடுத்து சோதனை செய்தனர்.

ஒய் குரோமோசோம் ஆய்வில் பங்கேற்ற அனைவருக்கும் ரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களில் ஒய் குரோமோசோம் குறைவாக உள்ளது தெரியவந்துள்ளது. இதனாலேயே ஆணின் ஆயுள் குறைகிறது என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அழிந்து வரும் ஆண் இனம் ஆண்களின் 'ஒய்" குரோமோசோம் பாதிக்கப்பட்டு வருவதன் காரணமாக எதிர்காலத்தில் ஆண்குலமே அழிந்துபோகும் என்று அதிர்ச்சியூட்டுகிறார்கள் விஞ்ஞானிகள்.

நிரந்தர அழிவிற்கு காரணம் ஆண் குரோமோசோம் எனப்படும் 'ஒய்" குரோமோசோம்களுக்குள் உள்ளேயே உள்ள அழியும் தன்மையால் ஆண்கள் நிரந்தர அழிவை நோக்கிச் சரிந்து கொண்டிருக்கிறார்கள் என்கிறார் ஆஸ்திரேலியாவின் முன்னணி பெண் விஞ்ஞானிகளில் ஒருவரான பேராசிரியை கிரேவ்ஸ்

எக்ஸ் குரோமோசோம் பெண் குரோமோசோமான 'எக்ஸ்" குரோமோசோமிலும், ஆண் குரோமோசோமான 'ஒய்" குரோமோசோமிலும் உள்ள ஜீன்களின் எண்ணிக்கையை ஆதாரமாகச் சுட்டிக் காட்டிகிறார் இந்த விஞ்ஞானி. எக்ஸ் குரோமோசோமில் சுமார் 1000 ஆரோக்கியமான ஜீன்கள் உள்ளன.

மிகப்பலவீனமானது... பெண்களிடம் இரண்டு 'எக்ஸ்" குரோமோசோம்கள் இருக்கின்றன. ஆண்களிடம் இருப்பது ஓர் ஒற்றை எக்ஸ் குரோமோசோமும், 'பலவீனமான" ஒரு 'ஒய்" குரோமோசோமும்தான்.

குறைந்து வரும் ஜீன்கள் இன்றைய ஆணிடம் உள்ள 'ஒய்" குரோமோசோமில் சுமார் 100 ஜீன்கள்தான் உள்ளன. ஆண்களும் 'ஒய்" குரோமோசோமில் பெண்களைப் போல ஆயிரத்துக்கும் அதிகமான ஜீன்களைக் கொண்டிருந் தார்கள்தான். ஆனால் லட்சக்கணக்கான ஆண்டுகளில் ஆண்களிடம் ஜீன்களின் என்னிக்கை படிப்படியாக குறைந்து தற்போது இந்த நிலையில் நிற்கிறது.

அழிவிற்கு காரணம் பெண்களின் எக்ஸ் குரோமோசோம் ஜோடியாக உள்ளதால் அதனால் பழுதுகளைச் சரிசெய்துகொள்ள முடிகிறது. ஆனால் ஜோடியில்லாத ஆணின் 'எக்ஸ்" குரோமோசோம் பழுதுகள், குறைகளை சரிசெய்யத் தவித்து கடைசியில் அழிகிறது.

குப்பைதானாம் ஆண்களின் ஒய் குரோமோசோமில் தற்போது எஞ்சியுள்ள ஜீன்களும் 'குப்பைகள்" தான் என்கிறார், பேராசிரியை கிரேவ்ஸ். "இது ஒரு மோசமான சூழ்நிலை. பரிமாண விபத்து. ஆண்கள் பரிதாபத்துக்கு உரியவர்கள்!" என்றும் அனுதாபம் காட்டுகிறார் ஆராய்சியாளர் கிரேவ்ஸ்.

பீதி அடையத் தேவையில்லை... ஆனால் ராபின் லாவல் பாட்ஜ் போன்ற வேறு சில விஞ்ஞானிகள், ஆண்கள் அப்படியொன்றும் பீதியடையத்தேவையில்லை என்று தெம்பூட்டுகிறார்கள்.

50 லட்சம் ஆண்டுகள் ஆம், ஆண் குழந்தைக்குக் காரணமான 'ஒய்" குரோமோசோம் முற்றிலுமாக அழிந்து போவது என்றாலும் 50 லட்சம் ஆண்டுகள் ஆகுமாம். அப்பாடா...என்று யாரோ நிம்மதி பெருமூச்சு விடுவது காதில் கேட்கிறதே?



**அட!டா!!**
**அப்படி என்றால்**
**நாம்**
**அர்த்த இராத்திரியிலும்**
**வோக்கிங்**
**போகலாம்!**





# அரச ஊழியர்களுக்குச் சீனாவில் சிரிப்புப் பயிற்சி!

சிரிப்பு அருமருந்து. இன்று உலகில் அருகிப்போகும் மருந்து இந்தச் சிரிப்புத்தான். மனம்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப்போகும் என்பது உண்மைதான். எனவே நோய்க்கு நாம் வைத்தியசாலை சென்றால் அங்கு எமக்கு உதவும் நேஸ் எம்முடன் விறைச்ச மூஞ்சியாகப் பழகினால் எங்கள் நோய் எப்படிப்போகும். அதற்கு அவர்கள் எப்படி வேலை செய்யும்போது சிரிக்கமுடியும் என்று கேட்கலாம். முடியும்! வேலை செய்யும் போதும், படிக்கும் போதும், பாயும் போதும், உறங்கும்போதும் காதலை வெளிப்படுத்த முடியும் என்றால்! சிரிப்பு ஏன் முடியாது. நேஸ் எமக்கு பணிவிடை செய்யம்போது இரு கைகள் போதாது. சிலசமயம் வாயிலும் ஒரு துணியைக் கௌவிக்கொண்டு, அல்லது ஒரு காகிதத்தை, குச்சியைப் பிடித்துக்கொண்டு பணிவிடைசெய்ய நேரிடலாம். அந்த தருணத்தில் கூட நோயாளியுடன் சிரிப்பைப் பரிமாறவேண்டும் என்கிறது சீனா.

அதனால் அங்கு வைத்தியசாலைகளில் வேலை செய்யும் நேஸ்களுக்கு வாயில் குச்சியைக் கொடுத்து சிரிப்பு பயிற்சி அளித்துவருகின்றனர். இவர்களுக்கு மட்டுமன்றி பொதுச்சேவையில் ஈடுபட்டுவருபவரும் சீன சுங்கப் போலீஸ் அதிகாரிகளும் தங்கள் பற்கள் நடுவே ஒரு ஜோடி குச்சிகள் வைத்து புன்னகை பயிற்சி செய்துபழகினர். இதன் மூலம் அவர்களது திறன் மேம்படுத்தப்படுகின்றது. மக்கள் சேவைக்கு அறிவும் புன்னகைதவழும் முகமும் முதல்தேவையாக உள்ளது. இந்தச் செய்திக்கு சீனமக்கள் பலதரப்பட்ட கருத்தினை முன்வைத்துள்ளார்கள். சிலர் இது அவசியம் தேவை!மக்கள் மனதிலும் அரசபணிகளில் உள்ளவர் திறனிலம் பாரிய மாற்றத்தைக் கொண்டுவரும் என ஒரு சாராரும். சிலர் காரசாரமாக அரச பணியாளர்கள் சுங்கப்பகுதியினர் யாரும் சிரித்ததை தாம் வாழ்வில்காண வில்லை என்றும் தங்கள் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

## ஹாலிவுட் படத்தில் தமிழ்ப் பாடல்!




எல்லாப் புகழும் இறைவனுக்கே... - இந்த தமிழ் வாக்கியத்தை உலகமே உற்று நோக்கிக் கொண்டிருந்த ஆஸ்கர் விருது விழா மேடையில் உச்சரித்து தமிழினத்தையே பெருமைப் படுத்தியவர் ஏ ஆர் ரஹ்மான். இப்போது இன்னும் ஒரு பெருமையைச் செய்திருக்கிறார்.


விரைவில் வரவிருக்கும் ஒரு ஹாலிவுட் ஆங்கிலப் படத்தில் தனது தமிழ்ப் பாடல் ஒன்றை இணைத்திருக்கிறார். அந்தப் படத்துக்குப் பெயர் மில்லியன் டாலர் ஆம். இந்தப் படத்தின் ஒரு காட்சிக்கு, தான் 15 ஆண்டுகளுக்கு முன் இசையமைத்த என் சுவாசக் காற்றே படப் பாடலைப் பயன்படுத்தியுள்ளார். திறக்காத கூட்டுக்குள்ளே பிறக்காத பிள்ளைபோலே... என ஆரம்பிக்கும் பாடல் அது. உன்னிகிருஷ்ணன் - சித்ரா குரல்களில் ஒலிக்கிறது. இது குறித்து ஏ ஆர் ரஹ்மான் கூறுகையில், "இந்தப் படக்குழுவினர் இந்தியப் படங்களுக்கு நான் அமைத்த இசை, பாடல்களைத் தேடிக் கொண்டிருந்த போது, இந்தப் பாடலைக் கேட்டிருக்கிறார்கள். பாடல் வரிகள் புரியா விட்டாலும், படத்தில் வரும் ஒரு சூழலுக்கு இந்த இசை பொருத்தமாக இருந்ததால் பயன்படுத்த விரும்பினர். ஆனால் படத்தில் வரும் சூழலுக்கேற்பவே பாடல் வரிகளும் அமைந்ததால், அந்த தமிழ்ப் பாடலை அப்படியே எந்த மாற்றமும் செய்யாமல் பயன்படுத்தியுள்ளோம். படத்தில் பார்த்தபோது இன்னும் சிறப்பாக இருந்தது," என்றார்.




# ஆண்களை அதிகம் தாக்கும் புரோஸ்டேட் புற்றுநோயை தடுக்கும் சில வழிகள்!!!




புரோஸ்டேட் புற்றுநோய் வயதான ஆண்களுக்கு வரும் நோயாக கருதப்படுகிறது. ஆனால் தற்போது குறைந்த வயதுள்ள ஆண்களுக்கும் குறிப்பாக அமெரிக்கர்களிடம் அதிகமாக காணப்படும் நோயாக இது உள்ளது. இந்த நோய் முதிர்ச்சி அடையாமல் இருந்தால் சரிசெய்து விடலாம் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். இந்த நோயால் தாக்கப்பட்டவர்கள் மிகுந்த வேதனையை அனுபவிப்பதாக கூறுவார்கள். ஆண்கள் அவசியம் படிக்க வேண்டியவை: இதெல்லாம் சாப்பிட்டா "புரோஸ்டேட் புற்றுநோய்" வருவதற்கான சான்ஸ் அதிகரிக்கலாம்...! இந்த வகை புற்றுநோய் உள்ளவர்களுக்கு கொடுக்கப்படும் சிகிச்சையால் வரும் விறைப்பு செயலின்மை, கட்டுப்பாட்டை இழப்பது ஆகியவை பின்விளைவுகளாக வருகின்றன. அதுமட்டுமல்லாமல் புற்றுநோயின் எண்ணம் எப்போதும் மனதை சிதைய செய்து விடும். ஆனால் ஆண்கள் முன்பே அவர்களின் உடல் ஆரோக்கியத்தையும், புரோஸ்டேட் நலத்தையும் கருத்தில் கொண்டால் இந்த புற்றுநோயை தவிர்க்க முடியும். இன்று முதல் ஆண்கள் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டிய புரோஸ்டேட் புற்றுநோயை தடுக்கும் சில வழிகள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.



புரோஸ்டேட் புற்றுநோயை அறிய பரிசோதனை செய்தல் புரோஸ்டேட் புற்றுநோயை தடுக்கும் வகையில் அவ்வப்போது புரோஸ்டேட் ஸ்பெசிபிக் ஆன்டிஜென் பரிசோதனை செய்து கொள்ளலாம். இந்த காரியம் இன்னும் விவாதத்தில் தான் உள்ளது. ஆனால் ஆண்களும் அவர்களது உடலில் உள்ள குறைகளையும் வரப் போகும் அபாயங்களையும் தெரிந்து கொள்ளும் உரிமை உள்ளது என்றும் கருத்து நிலவுகின்றது. PSA மற்றும் னுசுந (டிஜிட்டல் ரெக்டல் எக்ஸாமிநேசன்) ஆகியவை எந்த வயதுடைய ஆணாக இருந்தாலும் அவர்களது உடலை பரிசோதிக்கும் சோதனைகளாகும். இதை பயன்படுத்தி, ஆண்களின் உறுப்புகளில் ஏதேனும் பிரச்சனை உள்ளதா என்பதை ஆராய்ந்து தெரிந்து கொள்ள முடியும்.

புற்றுநோயை கொல்லும் உணவுகளை உண்பது

புரோஸ்டேட் புற்றுநோயை தடுப்பதற்கு நாம் இயற்கை உணவுகளை உண்ணலாம்.

புற்றுநோயை கொல்லும் உணவுகள் என்றும் இவற்றை சொல்லலாம். இத்தகைய காய்கறிகளை நாம் எளிய முறையில் தினசரி உணவுகளில் சேர்த்து கொள்ள முடியும். உதாரணமாக ப்ராக்கோலி, காலி.்.ப்ளவர், கேல் மற்றும் முட்டைகோஸ் ஆகியவை புற்றுநோயை எதிர்க்கும் சக்தி கொண்ட காய்கறிகள் என்று பல ஆய்வுகளில் நிருபணமாகியுள்ளன. இந்த காய்கறிகளில் உள்ள க்ளுக்கோசைநோலேட் புற்றுநோயை எதிர்த்துப் போராட உதவுகின்றது. கந்தகம் நிரம்பிய கொண்ட இப்பொருள் உடைந்து பைட்டோ நியூட்ரியன்ட்ஸாக மாறி புற்றுநோயை தடுக்கின்றது.



நல்ல ஊட்டச்சத்து உள்ள உணவுகளை உணவில் இயற்கையான முறையில் சேர்த்துக் கொள்வது புரோஸ்டேட் ஆரோக்கியத்தை காத்துக் கொள்ளும். இதனால் பினைன் புரோஸ்டாடிக் ஹைப்பர்பிளாசியா என்று கூறப்படும் பெரிய புரோஸ்டேட் மற்றும் புரொஸ்டாடிஸ் ஆகியவை ஆண்களுக்கு புரோஸ்டேட் புற்றுநோயை உண்டாக்கும் வாய்ப்புகள் உள்ளன. இந்த வகை நோயிற்கான அறிகுறிகள் வரும் வரை காத்திருக்க வேண்டாம். இவை வரும் முன் தடுப்பதே சிறந்ததாகும்.

புரோஸ்டேட் புற்றுநோயை தூண்டும் உணவுகளை தவிர்ப்பது இறைச்சியை அடுப்பில் வைத்து சமைப்பதற்கு முன்பு இந்த உணவு புரோஸ்டேட் புற்றுநோயை தூண்டுமா என்று சற்று எண்ணிப் பாருங்கள்.

எத்தகைய உணவுகளை உண்டால் இப்புற்று நோய் தடுக்கப்படுகின்றதோ, அதே போன்ற வேறு சில உணவு வகைகளால் இப்புற்றுநோய் வரவும் செய்கின்றது. எத்தகைய உணவுகள் புரோஸ்டேட் புற்றுநோயை தூண்டுகின்றன என்பதை உணர்ந்து கொள்ளுவதே இந்த நோயை தடுக்கும் சிறந்த வழியாகும். அனைத்து வகை உணவுகளிலும், குறிப்பாக சிவப்பு இறைச்சி மற்றும் பதப்படுத்தப் பட்ட இறைச்சி ஆகியவற்றில் புற்றுநோய் உண் டாக்கும் பொருட்கள் அதிகம் உள்ளன.





கிரீன் டீ கிரீன் டீ அருந்தும் ஆண்களுக்கு புரோஸ்டேட் புற்றுநோய் வரும் வாய்ப்புகள் மிகவும் குறைவு. இதனால் அவர்கள் ஆரோக் கியமான வாழ்வை வாழ முடிகிறது. தினசரி கிரீன் டீயை அருந்துவது புரோஸ்டேட் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. இது மிகச் சுலபமான பாதுகாப்பு வழிமுறையாகும். எந்த ஒரு உணவின் போதும், குளிர்ந்த பானமாகவும், மென்மையாகவும் கிரீன் டீயை பயன்படுத்தலாம்.



இரசாயன மற்றும் நச்சுப் பொருட்களை தவிர்ப்பது எவை நமது கண் எதிரே மறைவாய் உள்ளதோ அது எங்கும் நமக்கும் தீங்கு விளைவிக்கக் கூடியவையாக உள்ளன. இரசாயன பொருட்களும் அப்படித் தான். நமது கண் எதிரே இல்லா விட்டாலும், அதன் நச்சுத்தன்மை மாறுவது கிடையாது.

தொடர்சி 22ம் பக்கம்





உங்கள் அனைத்து
இல்லக் கொண்டாட்டங்களுக்கும்
100 இருக்கைகளுடன்
நீங்கள் விரும்பும்
சோடனைகளுடன்

every Sunday
from 17.00-22.00
Vegetarian
all you can eat Buffet
10 vegetarain Currys
Rice,Salad,Soup,Samosa,
Desserts and and...
only 9,90 €

Om Namaste
Indisches Restaurant

உங்கள் விருப்பம்போல் இலங்கை
இந்திய உணவுகளை சுவையாக
தயாரித்து அனைத்தையும் இந்நாட்டு
மக்களுக்கும் ஏற்ற வகையில்
பரிமாறக் காத்திருக்கின்றோம்.

Offnungszeit: 11.00 -24.00

all you can eat Buffet
daily from 11.00-22.00
only 6,-€

www.om-namaste@.com
e.mail: om-namaste@.de
facebook:om namaste

-கொத்துரொட்டி
-புரியாணி
-மசாலாத்தோசை
-பேப்பர் தோசை
-சிற்றுண்டிகள்
-Original Naan Pizza
இன்னும் இன்னும் இன்னும்
ஒரு முறை விஜயம்
செய்து பாருங்கள்!

உடன் தொடர்பு
கொள்ளங்கள்!
Brückstr 33
44135 Dortmund
0231 33 48 52 82



# காத்திருப்பு

## உஷா.கனகரட்டணம்

இன்று வழக்கத்தை விடவும் வாகன நெரிசல் அதிகமாகத் தான் இருக்கிறது.. ஊர்ந்து சென்று கொண்டிருந்த வாகன வரிசையில் காத்திருந்தபடி நேரத்தை ஒருமுறை பார்த்துக் கொணடாள் சந்தியா. சற்று முன்னர் புறப்பட்டிருந்தால் இந்த நெரிசலைத் தவிர்த்திருக்கலாம். அந்த வழக் கறிஞர் வரவே முக்கால் மணிநேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. அவர் பேசிய தென்னவோ பத்தே நிமிடங்கள் தான். நான் செய்ய வேண்டிய தெல்லாம் செய்துவிட்டேன். அனுப்ப வேண்டிய பத்திரங்கள் எல்லாமே அனுப்பியாகிவிட்டது, இனி அவர்களிடமிருந்து பதில் வரும் வரை காத்திருக்க வேண்டியது தான். வேறு வழி இல்லை.

இது தான் அவரது பதில். கடந்த நான்கு மாதங்களாக அவர் சொல்லும் அதே பதில் தான். இன்றாவது ஏதாவது புதிதாகச் சொல்வாரோ என்ற நப்பாசையில் தான் வந்து இத்தனை நேரம் காத்திருந்தாள். பத்திரிகையிலும் தொலைக் காட்சியிலும் வாரம் ஒரு முறையாவது தவறாமல் தலையைக் காட்டும் பிரபல வழக்கறிஞர் என்பதால் தான் அவரிடம் போனாள், இந்த நாட்டில் சூரியனைக் கூட அவ்வப்போது கண்டு கொள்ளலாம், அவரை மட்டும் பார்க்கவே கிடைப் பதில்லை. அனேகமாக அவரது செயலாளருடன் தான் கொடுக்கல் வாங்கல் செய்திப் பரிமாற்றங்கள் எல்லாமே. சலிப்பாக இருந்த்து. எப்போது அவரிடம் போய் வந்தாலும் அன்றைய தினம் பூராவும் எரிச்சல் எரிச்சலாக இருக்கும். தொட்டதுக் கெல்லாம் அழுகையாய் வரும். இப்போது வெறும் சலிப்பாக மட்டுமே இருந்த்து. இந்தக் காத்திருப்பு எத்தனை காலத்திற்கு? கழிகின்ற ஒவ்வொரு நாட்களும் போராட்டமாய்... வேலை விட்டால், நாட்காட்டியும் தொலைபேசியுமாய், எப்போது நமக்கு விடியும்? தனிமையில் இந்த அவஸ்தை இன்னும் எவ்வளவு காலத்திற்கு-?

போக்குவரத்து சமிக்ஞை சிவப்பிற்கு மாற, காரை நிறுத்திவிட்டு மீண்டும் ஒரு முறை நேரத்தைப் பார்த்துக் கொணடாள். பாடசாலையிலிருந்து வெளியேறும் குழந்தைகள் பாதையைக் கடந்து கொண்டிருந்தன. அதில் இரண்டு சுட்டிகள் பாதையின் நடுவில் சென்று கொண்டிருக்கும் பிரக்ஞையே இல்லாமல் ஒன்றை ஒன்று இடித்துக் கொண்டு விளையாடியபடி சென்று கொண்டிருந்தன. தன் குழந்தைகளும் இப்படித் தான் கவனமின்றிப் பாதையைக் கடக்குமோ..? காரணமில்லாக் குற்ற உணர்வு அவளை ஆக்கிரமித்தது. இப்போ தெல்லாம் இப்படித்தான். எதற்கும், எல்லாவற் றுக்கும் காரணம் தான் தான் எனப் படுகிறது. மன உளைச்சல் உள்ளவர்களுக்கு இது சாதாரணமாக இருக்கும் அறிகுறிகள் தானாம். வாரம் ஒருமுறை தண்டத்திற்கு பணம் அழுவதற்கு உளவியலாளர் சொன்ன விளக்கம் அது.

போக்குவரத்து சமிக்ஞை பச்சைக்கு மாறியதும் அந்தக் குழந்தைகள் இரண்டும் பாதுகாப்பாகப் பாதையைக் கடந்து விட்டார்களா என விழிகள் தேடியது. காலையில் பெரிய பெண் புலம்பித் தீர்த்து விட்டாள். «என்ன கேட்டாலும் அப்பா வரட்டும், இப்ப வேண்டாம் எண்டு சொல்லிறீங்க.. அவர் எப்ப வாறது.. ஸ்கூலில எல்லாப் பிள்ளைகளும் செய்யினம். நான் மட்டும் ஏலாது என்றால் எப்பிடி என்னோட சேருவினம்.. பிறகு நான் தனியத் தான் இருக்க வேண்டி வரும் ஃபரெண்ட்ஸ் இல்லாமல், உங்களை மாதிரி.» கடைசியாகச் சொன்னது கொஞ்சம் அதிகமோ...? அம்மா மனதை வேதனைப்படுத்தி விட்டோமோ என்ற பயம் ஏற்படக் குழந்தையின் குரல் இறங்க, அவளை இதமாகக் கட்டிக் கொண்டாள் சந்தியா.

வேறு என்னதான் செய்ய முடியும்? இந்தக் கலாச்சாரப் பயமுறுத்தல்களுக்குள் தனியனாய், நல்லது கெட்டதைப் பிரித்தறிந்து பெண் குழந்தைகளை வளர்க்க வேண்டுமானால் குறைந்த பட்சம் கொஞ்சம்

நேரமாவது வேண்டாமா? காலுக்கு இறக்கை கட்டிக் கொண்டு வேலை, வேலை என்று திரிபவள் குழந்தைகளுக்கு விரும்பியதைச் செய்ய அனுமதியளித்துவிட்டு எதையும் கவனிக்கா விட்டால்? இதையெல்லாம் குழந்தை பாவம் எப்படிப் புரிந்து கொள்வாள்?
வேணுவுடன் இந்த இயலாமையைப் பகிர்ந்து கொள்ள முடியுமா? அவன் குழந்தைகளுடன் கலகலப்பாக, உற்சாகமாகத் தொலைபேசியில் பேசினாலே பெரிய விஷயம் என்றிருந்தது. என்னமோ தான் தான் உலகத்திலேயே அதிக மாகச் சிரமப்படுவதாக ஒரு எண்ணம் அவனுக்கு. அதை முழுவதுமாக அவன் தப்பு என்றும் சொல்ல முடியாது. ஒரு ஆண், அதிலும் திருமணமானவன்... தனியாக சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு வருடக் கணக்கில் இருப்பது ஊராருக்கும் கூட பார்க்க ஒரு துன்பகரமான நிலமையாகவே தெரிகிறது. «ஏன் தம்பி... உப்பிடித் தனியக் கஷ்ரப்படுகிறாய்... எத்தினை வருஷமாகுது. போனவளுக்கு யோசனை இருக்க வேணும். வண்டு சிண்டுகளாய்ப் போன குழந்தைகள் இப்ப குமர்ப்பிள்ளைகளாய் வளர்ந்திருக்கும்.
ஊரிலயே ஒரு ஆம்பிளை இல்லாத வீட்டிலை குமர்ப்பிள்ளைகளை வைச்சுத் தனியாச் சமாளிக்க முடியேல்லை. அது வெளிநாடு. கதைக்கேக்கை அவளுக்குப் புத்தி சொல்லி உன்னைக் கூப்பிடிற வழியைக் கெதியப் பாக்கச் சொல்லு! என்றெல்லாம் அவனை உசுப்பேற்றி விடவென்று அவனைச் சுற்றிச் சில "பழசுகள்" இருக்கின்றன. அதே வேகத்தில் அவளைத் தொலைபேசியில் அழைத்துப் பொரிந்து தள்ளி விடுவான். என்ன சொல்ல முடியும் அவளால்..? இரவு பகலாக உழைத்து வழக்கறிஞருக்குப் பணத்தைக் கொட்டுவதையும், ஓய்வில்லாமல் உழைப்பதற்கு உடல் ஒத்துழைக் காமல் முதுகு வலியால் அவஸ்தைப் பட்டபடி அதிகாலையிலேயே குளிரில் நடுங்கியபடி வேலைக்குப் போய் வந்து கொண்டு, வீட்டில் தனியாக இருக்கும் வயது வந்த பிள்ளைகளுக்கு வாய்க்கு

உருசியாக சமைத்துக் கொடுக்கவோ, அவர்கள் பாடசாலை விட்டு வீடு வருவதைக் கவனிக்கவோ கூட நேரம் இல்லாமல்... இதை எல்லாம் அவனிடம் சொல்லிப் புரிந்து கொள்ளக் கூடியவனா அவன்?
«கொஞ்சம் இறுக்கிப் பேசு.. சண்டை பிடி! விசா தரும் வரைக்கும் அசைய மாட்டேன் எணடு சொல்லி வாசலிலயே இரு...! என்ன.. நான் சொல்லிறது கேக்குதா..? எப்பவும் மாதிரி அழுது வடியாமல் கொஞ்சம் சிரிச்ச முகமாப் பேசு... என்ன...? கேக்குதா...?» என்னமோ அவளே விசா வேண்டாம் என்று மறுப்பவள் போல அவளிடம் வெறுப்பைக் கக்குவான். அதே ஆக்ரோஷத்தை அவள் வழக்கறிஞரிடம் காட்ட வேண்டுமாம்! தூக்கமின்மை, மன உளைச்சல் என்று பல உடல் உபாதைகளுடன் அன்றே அவள் வேலையில் ஏதாவது காரணம் சொல்லிக் கொண்டு வழக்கறிஞரிடம் போய் வந்து விட வேண்டும். இல்லையேல் மாலையில் தொலைபேசியில் அழைத்து இரவு முழுவதும் அவள் தூங்காமல் அழுகிறாற்போல வார்த்தைகளால் சுட்டு விடுவான்.... ஆறுதலாய் ஓரிரண்டு வார்த்தைகள் பேசவோ.. ஆதங்கத்தில் சாய்ந்தழத் தோள் தரவோ ஆளில்லாத தன் நிலையை எண்ணி சந்தியா வேதனைப்படுவாள்.

«ஏன் நீங்கள் எங்களை வெளியிலை கூட்டிக் கொண்டு போறீங்களில்லை?.. அதுக்கும் அப்பா வர வேணுமா...? அம்மா இங்கே கொஞ்சம் வந்து எங்களோடை இருங்கோவேன்....» வீட்டில் இருக்க ஓரிரு மணிநேரம் கிடைத்தாலும் உடல் உபாதைகளால் கட்டிலில் சாய்ந்திருந்தால் போதும். குழந்தைகள் நச்சரிக்கத் தொடங்கி விடுவார்கள். உள்ளூர வேதனையாக இருக்கும். ஒரு குழந்தைப் பருவம் எவ்வளவு அழகானது. அதற்கான இயல்பான சந்தோஷங்களைக் கூட நான் என் குழந்தைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவில்லையோ...?.

தொடர்ச்சி 23ம் பக்கம்.













# அந்த நாள் ஞாபகம் வந்ததே! நண்பனே! நண்பனே!! நண்பனே!!!

## வெள்ளை மாளிகைக்கு வெளியே பராக் ஒபாமாவின் ஒரு நடைபவனி!

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கடந்த 21ம்திகதி திடீர் என ஒரு பாக்கினூடாக நடந்து சென்று அங்குள்வர்களுடன் அளவளாவிச் சென்றுள்ளார். இச்செயல் மக்களைத் திகைப்பிலும், மகிழ்விலும் ஆழ்த்தியது. இது திடீர் விஜயமாக இருக்கமுடியாது.

ஒன்றுக்கு பலதடவை ஒத்திகைபார்த்து நடத்தப்பட்ட நாடகமாகத்தன்னும் இருக்கலாம். பாதுகாப்பு பிரிவினர் மெய்ப்பாதுகாவலர் அப்பகுதியை அக்குவேறு, ஆணிவேறாக பலநாட்கள் ... இல்லை அந்த நிமிடம்வரை சோதனைக்கு உட்படுத்தியும் இருக்கலாம்.

அது எல்லாம் எப்படி நடந்திருந்தாலும் கூட! மக்களோடு மக்களாக நடை பயிலவேண்டும் என்ற எண்ணம் உயர்வாகவே தெரிகிறது. இது தேர்ந்தெடுத்த இடமாக இருந்தாலும், இது தேர்தல் காலத்து நடையும் அல்ல. பெரிய பொறுப்புக்களில் இருப்பவர்களும் இளமைக்காலத்தில் மக்களோடு மக்களாக தெரிவிலே நடந்தவர்கள்தான்.

அவர்கள் பதவி இன்று அவர்களுக்கு பாதுகாப்பு என்றகோணத்தில் அவர்கள் ஆசைகளைச் சுருக்கிட்டு சிறை வைத்துள்ளது. இதனை உடைத்துக்கொண்டு நடையாகப் புறப்பட்ட ஜனாதிபதியின் செயல் பலரை மகிழ்வித்துள்ளது.

அவரது நடைப்பயண விபரம் இதுதான்.

நம்ம ஊரில் எல்லாம் இதெல்லாம் கனவில் மட்டுமே நடக்கும். ஆனால் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா ஒரு அட்டகாசமான வாக் போய் குடிமக்களுக்கு ஸ்வீட் ஷாக் கொடுத்துள்ளார்.

- வாஷிங்டனில். படு சாவாதன மாக கழற்றி விட்ட கோட்டைத் தூக்க தோளில் போட்டபடி ஹாயாக ஒரு பார்க்குக்குள் புகுந்து சுதந்திரமாக நடமாடிய அவர் அங்கு வந்திருந்த பொதுமக்களுடன் கை குலுக்கியும், ஜாலியாக பேசியும், போட்டோக்களுக்கு போஸ் கொடுத்தும், அவர்களிடம் நலம் விசாரித்தும், அங்கிருந்த பொட்டிக் கடைப் பெண்ணிடம் ஜாலியாக பேசியும், குட்டீஸ் களுக்கு பரிசு கொடுத்தும் கலக்கியுள்ளார்.

ஒபாமாவின் இந்த திடீர் வருகையால் அங்கிருந்தோர் ஆச்சரியப்பட்டுப் போய் விட்டனர்.

வெள்ளை மாளிகையிலிருந்து அருகில் உள்ள உள்துறை அமைச்சகத் திற்குச் சென்ற ஒபாமாக வழியில் உள்ள ஒரு பூங்கா வழியாக செல்ல முடிவெடுத்தார் - அதாவது நடந்தே.

வளமையான ஒரு ஜனாதிபதியின் மரபை மீறி அவர் நடந்து போனார். கூடவே பாதுகாவலர்களும் பாதுகாப்புக்காக வந்தனர். ஆனால் ஒபாமாவை சுதந்திரமாக நடக்க விட்டு, சற்று தொலைவில்.

மக்களுடன் சந்திப்பு நடந்து போகும்போது ஆங்காங்கே உட்கார்ந்திருந்தோர், அரட்டை அடித்தோர், நடந்து போனோர், கடை வியாபாரிகள் என பார்த்துப் பார்த்த ஹாய், ஹலோ என்று கூறியபடி ஜாலியாக பேசினார் ஒபாமா. கை குலுக்கினார், நலம் விசாரித்தார், வியாபாரம் எப்படிப் போகிறது என்று விசாரித்தார். மாணவர்களிடம் படிப்பு எப்படி இருக்கு என்று அக்கறை காட்டினார்.

இந்த நடைக்கு பின்னணியில் ஒரு தமிழ்பாட்டுப்போடுவதாக இருந்தால். அந்த நாள் ஞாபகம் வந்ததே நண்பனே! நண்பனே! நண்பனே!! பாடல் நன்றகவே போடலாம். அற்புதமாகப் பொருந்தும் அல்லவா!



# தமிழர் பண்பாட்டில் கோடை





முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

மனித வாழ்வில் பருவகாலங்கள் பற்றிய அறிவு பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளது.

விஞ்ஞானத்தின் வளர்ச்சி நிலையும் பொறிமுறைகளின் நுட்பமும் பருவ காலங்களின் மாற்றத்தை அறிய இன்று உதவுகின்றன. எனினும் இத்தகைய அறிவுநிலை வளர்ச்சி பெறுவதற்கு முன்னரே தமிழர் வாழ்வியலில் பருவகாலங்களைப் பற்றிய அறிவு விளக்கம் பெற்றிருந்தது. தமிழர் வாழ்வியல் பற்றிய செய்திகளின் பதிவுகளை நோக்கும்போது இதனை நன்குணர முடிகிறது. இயற்கையின் மாற்றமான தோற்றங்களை வாழ்க்கையோடு இயைபுபடுத்தி வாழும் தமிழரது பண்பட்ட வாழ்வியல் இன்றைய இளைய தலைமுறையினர் அறியவேண்டியது.

பூமி தன்னைத் தானே சுற்றுவதால் இரவும் பகலும் உணரப்படுகின்றன. பூமி சூரியனைச் சுற்றுவதால் பருவகாலங்கள் உணரப்படுகின்றன. இந்த மாற்றங்களையெல்லலாம் இயற்கையின் கால மாற்றங்கள் என எண்ணுவதுடன் மட்டும் நின்றுவிடாமல் தமது வாழ்வியலுடனும் தமிழர் இணைத்துக்கொண்டனர். அவற்றைத் தமிழ் மொழியிலே எழுந்த இலக்கியங்களும் இலக்கணங்களும் பதிவுசெய்துள்ளன.

ஓராண்டில் ஆறு பருவங்கள் வகுக்கப்பட்டிருந்தன. கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என அவற்றிற்குப் பெயரிடப்பட்டிருந்தன. பழந்தமிழ் இலக்கணமான தொல்காப்பியம் இதனைப் பதிவுசெய்துள்ளது. இவற்றுள் வேனிற்காலமே தற்போது கோடை காலம் என அழைக்கப்படுகிறது. சூரியன் உச்சிக்கு நேரே வரும் காலம் 'கோடை' எனப்பட்டது. இக்காலம் வெப்பம் அதிகமாக இருக்கும். பகல்வேளை நீண்டதாக இருக்கும். வெப்பம் தரும் சூரியனைக் குறிக்கப் பல சொற்கள் வழக்கிலுள்ளன. கதிரவன், ஞாயிறு, பகலவன், வெய்யோன் என்ற தமிழ்ச் சொற்கள் பயன்பாட்டிலுள்ளன. இவற்றுடன் வடமொழிச் சொற்களான சூரியன், பரிதி, ஆதவன் போன்ற சொற்களும் வழக்கில் இணைந்துள்ளன.

கோடை காலத்தை இயற்கைத் தோற்றமும் உணர்த்திநின்றது. நீர் நிலைகள் வரண்டு விடும். புல், பூண்டுகள் வாடிநிற்கும். வெயில் மிகவும் சூடாக இருக்கும். எனவே இக் கோடை காலத்தை தமிழர் மிகவும் கவனமாக கழிப்பதற்கு பல நடைமுறைகளைக் கையாண்டனர். உடல் நலம் பேணும் வகையில் உணவுப் பழக்கத்தை மேற்கொண்டனர். வெப்பத்தினால் உடல் களைக்க நேரிடும். அதனால் குளிர்மையான இளநீர், நுங்கு போன்றவற்றை அருந்தினர். அக் காலத்தின் விளைபொருட்களான முக்கனிகளை உண்டனர். மா, பலா, வாழை என்னும் முக் கனிகளும், தேனும், நெய்யும் உணவில் சேர்க்கப்பட்டன. இவ்வைந்தும் 'பஞ்சாமிர்தம்' எனச் சிறப்பப் பெயர் பெற்றிருந்தன.

கோடை காலத்தில் வேம்பு, மா, போன்ற மரங்கள் பூக்கும். அத்துடன் பாதிரி என்னும் சிறப்பான மலரும் பூக்கும். வேம்பு நிழல்தரு மரமாக இருப்பதுடன் ஒரு மருத்துவ மரமாகவும் விளங்கியது. வெப்ப காலத்தில் ஏற்படும் நோய்களைத் தீர்க்கும் மருந்தாக வேப்பிலை பயன்படுத்தப்பட்டது. பெரியம்மை, சின்னம்மை, பொக்கிளிப்பான் போன்ற நோய்கள் கோடை காலத்தில் மக்களைப் பீடித்தபோது வேப்பிலைமேல் படுக்கவைத்து குளிர்மையூட்டினர். இலைகளால் ஆடைசெய்து அணிவித்தனர். மஞ்சளையும் வேப்பிலையையும் அரைத்து மருந்தாக பயன்படுத்தினர்.

உடல் வெப்பம் தீரச் சிறப்பான உணவுகள் ஆக்கப்பட்டன. கஞ்சி, கூழ் போன்ற நீரத் தன்மையான உணவுகள் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டன. உழுந்து, பயறு, குரக்கன், எள்ளு, சாமை, தினை போன்ற தானியங்களைப் பயன்படுத்திப் பல சிற்றுண்டி வகைகளைத் தயாரித்தனர். இவற்றைவிட பனையின் வினைபொருள்களான ஒடியலில் பெறப்பட்ட மாவால் கூழ் தயாரிக்கப்பட்டது.

இயற்கையான கோடை காலத்தில் வெப்பம் அதிகரிக்கும்போது அதைத் தீர்ப்பதற்குச் சில வழிபாட்டு நடைமுறைகள் பண்டைத் தமிழரால் பின்பற்றப் பட்டன. அக்காலத்திலே பெறப்படும் விளைபொருட்களை மடைப்பொருளாக்கி வழிபாடு செய்தனர். காய்மடை, பூமடை, பழமடை என மூன்று மடைகள் போடப்பட்டன. இம்மடை போடும் மரபு கோவில் அமைப்புத் தோன்றுவதற்கு முன்னரேயே வழிபாட்டு மரபாக நடைமுறையில் இருந்துள்ளது. இன்றும் அதற்குரிய சான்றாகச் சங்க இலக்கியப் பதிவுகள் உள்ளன. கிராமப்புறங்களிலே கோவில்களுக்கு வெளியே 'வெளிமடை' பரவி வழிபாடு செய்யும் வழக்கம் இன்றும் உள்ளது. இன்னும் வெப்பம் தீரக் குளிர்த்திப் படையல் செய்யும் மரபும் நிலவுகிறது. 'தயிர்ப்பாளயம்' என்னும் சிறப்பான படையல் மடையிடப்பட்டுக் குளிர்த்திப் பாடல்கள் பாடப்படும். பொங்கல் பொங்கி வழிபாடு நடைபெறும்.

இத்தகைய வழபாட்டு வாழ்வியல் மக்களின் மனதில் கோடையின் கொடுமையைத் தீர்க்க உதவின. வெப்பு நோயால் பீடிக்கப்பட்டவர் அந்நோயிலிருந்து தன்னைக் காப்பாற்றினால் சில நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதாகத் தெய்வத்திடம் உறுதிமொழி கூறுவர். அதன்படி நோயிலிருந்து விடுபட்ட பின்னர் தமது நேர்த்தியை நிறைவேற்றக் காவடி, கரகம், பாற்செம்பு என்பவற்றை எடுப்பர். காவடியில் பல்வேறு வகைகள் உள்ளன. செடில்காவடி, பறவைக்காவடி, துலாக்காவடி, தூக்குக்காவடி என அவற்றின் அமைப்பு நிலைக்கேற்பப் பெயர்பெற்றுள்ளன. இவற்றோடு பறை ஒலியும் இணைந்திருந்தது. இன்று இந்த நடைமுறைகளை மூடநம்பிக்கை எனக் கூறுவாரும் உளர். ஆனால் பண்டைக்காலத் தமிழர் இயற்கையின் ஆற்றலுக்குப் பணிந்து வாழும் பண்புடையோராக இருந்தனர். தமது மன உறுதியை நிலைநாட்ட இத்தகைய நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். இன்று பல்வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் இவ் வழிபாட்டு மரபைப் பேணி வருவது குறிப்பிடத்தக்கது. இன்னும் மேலைத்தேயத்தவரும் இந் நடைமுறையிலே பங்குகொள்வதையும் காணமுடிகின்றது.

மேலைநாடுகளில் கோடைகாலத்தைக் கழிப்பதற்காக நீர்நிலைகளை நாடிச் செல்லும் நடைமுறையே உள்ளது. ஆனால் கீழைத்தேயத்தில் குறிப்பாகப் பயிர்ச்செய்கைப் பண்பாடு பேணப்படுவதால் இத்தகைய வழிபாட்டு நடைமுறைகள் பெரிதும் பேணப்பட்டு வருகின்றன. மேலைத்தேயத்தவர் வாழ்வியலில் கோடைகாலம் ஒரு வேறுபட்ட பண்பாட்டையும் தோற்றுவித்துள்ளது. சிறப்பாக ஆடைக்குறைப்பு கோடைகாலப் பண்பாடாக உள்ளது. வெப்பத்தில் உடல் வாடிவிடாமல் நீச்சல் ஆடையுடன் நீர்நிலைகளிலே நீராடல் ஒரு நடைமுறையாக உள்ளது. குளிர்பானம் பருகி மகிழும் காலமாகக் கோடை விளங்குகிறது. பகலவனின் கதிர்கள் உடலிலே படும் வண்ணம் சூரியக் குளியலும் நடைபெறும். செயற்கையான குளிரூட்டிகளும் மின்விசிறிகளும் கோடைகாலத்துச் சிறப்பான வணிகப் பொருள்களாக விளங்குகின்றன.

எனவே தமிழர் வாழ்வியல் பருவத்திற்கேற்ற பண்பாட்டு நடைமுறைகளை நீண்டகால மாகவே பேணிவந்துள்ளது என்பதை நன்கறிய முடிகிறது. கோடைகாலத்துடன் தொடர்பான சொற்கள் தமிழ் மொழிக்கு வளம் சேர்த்துள்ளன. வரண்ட காலத்தையும் வாழ்க்கையில் மகிழ்வாகக் கழிப்பதற்குத் தமிழர் பல நடைமுறைகளை ஏற்படுத்தியுள்ளனர். வெப்பமும் தட்பமும் நாம் எதிர்கொள்ளும் இயற்கையின் இரு நியதிகள். அவற்றோடு மனிதன் இயைபுபட்டு வாழ்வு நடத்தவேண்டும். குறிப்பாகத் தமிழர் வாழ்வியலில் கோடைகாலம், மாரிகாலம் என்ற இரு காலப் பாகுபாடுகளும் மிகத் துல்லியமாகக் கணிக்கப்பட்டதைப் பண்பாட்டு நடைமுறைகளால் நன்கு உணரமுடிகின்றது. இப்பண்பாட்டு வேறுபாடு பற்றிய ஆய்வுகளும் நடைபெற்றுள்ளன.

இன்றைய இளைய தலைமுறையினர் இயற்கையின் மாற்றத்தைக் காண்பதில் அக்கறை அற்றுள்ளனர். பொறிமுறைக் கையாட்சியில் பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளனர். உலகம் முழுவதும் ஒளி தரும் பகலவன் வருகையை உணராதவராயுள்ளனர். அவர்கள் ஒருமுறை கோடைகாலத்தின் வருகையையும் நிறைவையும் காணவேண்டும். அக்காலத்தைக் காண உதவும் பண்பாட்டு நடைமுறைகளிலே பங்கேற்கவேண்டும். உடலும் உளமும் உரம்பெற அவை என்றும் உதவும் என்பதை உணரவேண்டும். கதிரவன் காலத்தை உணர்த்தும் இயற்கையின் கருவியாகத் தொழிற்படுவதை அறியவேண்டும். ஞாயிற்றின் தோற்றமும் பகலவன் ஒளியும் வெய்யோனின் வெம்மையும் உலகெங்கும் நிறைந்திருப்பவை. அவை மனிதன் மகிழ்வோடு வாழ என்றும் துணையானவை.




T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846



## எசன் தமிழ்ப் பாடசாலை
## ஆண்டுவிழாவும் பரிசளிப்பு விழாவும்



யேர்மன் நாட்டில் எசன் மாநகரத்தில் 26 வருடங்களாக இயங்கி வரும் தமிழ் மொழிச்சேவை கலாசார மன்றம் எசன் தமிழ்ப் பாடசாலையின் 2014ம் ஆண்டிற்கான பேச்சுத்திறன் மற்றும் சித்திரப்போட்டிகள் கடந்த 17.05.2014 சனிக்கிழமையன்று காலை 9மணி முதல் பிற்பகல் 6மணிவரை சிறப்பாக நடைபெற்று, பரிசுகளும் வழங்கப்பெற்றன.

## யேர்மனி வூப்பெற்றால் -நவதுர்க்கா அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழா. 17.05.2014




## தமிழர் கல்வி கலாச்சார அமைப்பு யேர்மனி
### Tamilischer Bildungs- und Kultur Verein e.V. Deutschland

# வன்னி மாணவர் மேம்பாட்டுத் திட்டம்

ஒரு இனம் தனது வரலாற்றுக்கடமைகளை மறந்து வாழ்ந்துவிட முடியாது. முடிந்தவரை கடமைகளைக் கடைப்பிடிக்கவேண்டிய கட்டாயத்தில் அவ்வினம் பல தடைகளையும் தாண்ட வேண்டும் என்பதும் வரலாறு.
அந்த வகையில் போரினால் பாதிக்கப்பட்ட வன்னிமண்ணின் கண்ணீரைத் துடைத்து அங்குள்ள தலைமுறையினை அறிவுடைச்சமூகமாக மாற்றவேண்டிய உன்னத பணிக்கு உறுதுணை தாரீர்!
கவலையை மறந்து கடமையில் துணிந்து வேரைக் காக்கும் விழுதுகளாவோம்.

மேலும் எமது அமைப்பினூடாக இதுவரை அடிப்படை வசதிகள் கிட்டாத மாணவர்களுக்கும் பாடசாலைகளுக்கும் நேரடியாக வழங்கி வருகின்றோம். காலத்துக்குக் காலம் பயனடைவோர் விபரம் கைகொடுப்போர் கைகளில் கையளிக்கப்படும் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களுக்கு இத்தகைய உதவிகள் தேவைப்படுகின்றன. பாடசாலை தொடக்கம் மாணவர்கள் வரை..

**இன்றைய சிறுதுளி**
**நாளைய பெரு வெள்ளம் மேலதிக தொடர்புகளுக்கு.**

Tamilischer Bildungs-
und Kultur Verein e.V. Deutschland

Postfach 101306
47013 Duisburg
Germany

Sparkasse Duisburg
Konto Nr: 200260040
IBAN:De 22350500000200260040
BIC Duisde33xxx

E.mail: tbkvvanni@gmail.com
Forum Vanni




# செவிமடுத்தல் எனும் கலை !

புத்தகக் கடைக்குப் போகும்போது கவனித்துப் பாருங்கள். "சிறந்த பேச்சாளராவது எப்படி ?" எனும் தலைப்பில் நிறைய புத்தகங்கள் உங்களுக்குக் கிடைக்கும். சிறந்த பேச்சாளராக இருப்பது நல்ல விஷயம். மேடைகளில் மட்டுமல்ல, அலுவலகங்களிலும், நண்பர் வட்டாரத்திலும் நமது கருத்துகளையும் வாதங்களையும் எடுத்து வைக்க மிகவும் உதவும்.

அதே போல, "செவிமடுப்பது எப்படி ?" என நூல்கள் இருக்கிறதா என்று பார்த்தால் ஏமாற்றம் தான் மிஞ்சும். பேசுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் பலரும் கேட்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பேசறது கஷ்டம், கேக்கறதுக்கு என்ன கத்துக்க வேண்டியிருக்கு எனும் அலட்சியம் தான் இதன் காரணம்.
குடும்ப வாழ்க்கையைப் பொறுத்தவரையில் காது கொடுப்பது தான் வாழ்க்கையின் வெற்றியையே நிர்ணயிக்கப் போகிறது. வீடுகளில் பேசுவதற்கு யாரும் யாருக்கும் சொல்லித் தரத் தேவையில்லை. பால்ய கால சமாச்சாரங்கள் முதல், நேற்று நடந்த சீரியலின் மகா மட்டமான டுவிஸ்ட் வரை அலசிக் காயப் போடுவதில் பெண்கள் ஆண்களை அனாயசமாக ஓரங்கட்டிவிடுவார்கள். அதே போல ஆண்களும், ஏதோ ஒரு முடிவு எடுக்கும் விஷயம் வந்தால் போதும், அந்த ஏரியாவில் நாலைந்து டாக்டர் பட்டம் வைத்திருப்பவர்களைப் போல பேசித் தள்ளுவார்கள். ஆனால் இருவருமே, கேட்பதற்கு ரொம்பவே தயங்குவார்கள்.

எல்லா விசைக்கும் சமமான எதிர் விசை உண்டு என்பது நியூட்டனின் மூன்றாம் விதி. வாழ்க்கையில் எல்லாவற்றிலும் ஒரு சமநிலை வேண்டும். எவ்வளவு பேசுகிறோமோ, அந்த அளவுக்கு கேட்பதற்கும் தயாராய் இருக்கும் போது தான் அந்த சமநிலை கிடைக்கும்.

" நான் சொல்றதைக் கொஞ்சம் கேக்கறீங்களா ?", " நான் சொன்னது அதில்லை", " ஒழுங்கா கேட்டா தானே புரியும்", " இதுக்குப் பதிலா நான் சுவருக்கிட்டே பேசலாம்" " நான் சொல்ல வரதை கொஞ்சம் முடிக்க விடறியா ", "நான் சொல்றதை எங்கே காது குடுத்து கேக்கறாங்க" இப்படி ஏதோ ஒரு சலிப்புச் சத்தம் இல்லாத வீடு ஏதாச்சும் இருக்கா சொல்லுங்க ? அதென்ன அவ்வளவு கஷ்டமான விஷயமா கேட்பது ! நம்பினா நம்புங்க, பேசறது ஈசி ! கேக்கறது தான் கஷ்டம்.

ஸ்காட் பெக் சொல்லும் வாசகத்துடன் இதை ஆரம்பிப்பது தான் பொருத்தமாக இருக்கும். "உங்களால் ஒருவர் பேசுவதை முழுமையாய்க் கேட்டுக்கொண்டே இன்னொரு வேலையைச் செய்யவே முடியாது" என்கிறார் அவர். கொஞ்சம் வாழ்க்கையை ரீவைண்ட் பண்ணிப் பார்த்தால் எல்லோரும் செய்யும் ஒரு சர்வதேசப் பிழை இது தான். எப்போதுமே ஒருவர் பேசுவதை வெறுமனே கேட்பது என்பது நமக்கு ரொம்ப ரொம்ப கஷ்டம். பேச்சுக்கு இடையே போனை நோண்டுவதோ, பேப்பரைப் புரட்டுவதோ, அங்கே இங்கே நோட்டம் விடுவதோ, டிவியை பார்ப்பதோ, அல்லது என்ன பதில் சொல்லலாம் என யோசிப்பதோ என நமது கவனம் அங்கே இங்கே சுற்றித் திரியும். அதனால் தான் கேட்பது எனும் கலை பலருக்கும் கைவராமல் போய்விடுகிறது.
அலுவலகங்களிலும், "கம்யூனிகேஷன் ஸ்கில்ஸ்" எனும் மென் திறமையை அளவிடுகையில் எவ்வளவு தூரம் தெளிவாகப் பேசுகிறான், எழுதுகிறான் என்று தான் பார்க்கிறார்களே தவிர, எவ்வளவு கூர்மையாக் கவனிக்கிறான் என்பதைக் கவனிப்பதில்லை. அதனால் தான் அந்த கலையில் நாம் ரொம்ப வீக் ஆக இருக்கிறோம். அலுவலகம், இத்யாதி போன்றவையெல்லாம் இருக்கட்டும், நாம் குடும்பத்துக்கு வருவோம்.

முதலாவதாக, செவிமடுப்பது அன்பின் அடையாளம். உங்கள் வாழ்க்கைத் துணை சொல்வதைக் கவனமுடன் கேட்கப் பழக வேண்டும். கேட்பது என்பது நீங்கள் அந்த நபரை அன்பு செய்கிறீர்கள் என்பதன் வெளிப்பாடு என்கிறது உளவியல். யாரை நீங்கள் மதிக்கிறீர்களோ, அன்பு செய்கிறீர்களோ, முக்கியம் எனக் கருதுகிறீர்களோ அவர்களுடைய பேச்சைத் தான் கவனமாகக் கேட்பீர்கள். உங்கள் வாழ்க்கைத் துணையை நீங்கள் நேசிக்கிறீர்கள் என்பதன் அழகிய வெளிப்பாடு நீங்கள் அவர் சொல்வதை முழுக் கவனமுடன் கேட்கிறீர்கள் என்பது தான்.

செவிமடுப்பது மனதையும், உடலையும் ஆரோக்கியமாய் வைத்திருக்கும். பொதுவாக நாம் செய்யும் தவறு ஒரு விஷயத்தைப் பேசுவதை விட அதைத் தவிர்ப்பது நல்லது என நினைப்பது தான். "ஐயோ ஆளவிடு.. அந்த விஷயத்தைப் பற்றிப் பேசாதே" என தப்பிக்கும் மனநிலை ரொம்பவே பொதுவானது. அது தவறு. சொல்லாத வார்த்தை என்பது சுத்தம் செய்யாத அறையைப் போல அழுக்கையும், கவலையையும் உள்ளுக்குள்ளே வைத்திருக்கும். மனம் விட்டுப் பேசும்போதோ மனதின் கவலைகள் வெளியேறும். வெளியில் கொட்டப்பட்ட தண்ணீரில் கொசுக்கள் உருவாவதில்லை. அவை மண்ணுக்குள் நுழைந்து மறையும். கேட்பதற்கு ஒரு அன்னியோன்யக் காது இல்லாவிட்டால் வாய் மௌனமாகும்.

செவிமடுப்பவர்களை வாழ்க்கைத் துணைக்கு மிகப் மிகப் பிடிக்கும். பேசுவதை அன்புடன் கேட்கும் கணவர்களை வெறுக்கும் மனைவிகள் இல்லை. அதே போல தான் கணவன் பேசுவதை அன்புடன் கேட்கும் மனைவியரை விரும்பாத கணவர்களும் இருக்க மாட்டார்கள். நமது எண்ணங்களையெல்லாம் சொல்ல ஒரு துணை இருக்கிறது எனும் பரவசம் உங்கள் குடும்ப உறவை வலுவாக்கும்.

செவிமடுப்பது நம்பிக்கையை வலுவாக்கும். நடந்த விஷயங்களை குடும்பத்தில் தினமும் பகிர்ந்து கொள்ளும் போது தம்பதியருக்கிடையே ஒளிவு மறைவு இல்லாமல் போய்விடுகிறது. நமது வாழ்க்கைத் துணையைப் பற்றி அடுத்தவர்கள் ஏதேனும் சொன்னாலும் அது நமக்கு ஏற்கனவே தெரிந்ததாய் மாறிவிடுகிறது. இது நம்பிக்கையையும், அன்னியோன்யத்தையும் அதிகரிக்கும். இந்த விஷயத்தில் பேசுவது எவ்வளவு முக்கியமோ அதை விட முக்கியம் கேட்பது !

செவிமடுப்பது அன்யோன்யத்தை அதிகரிக்கும். பேசுவது உங்களுக்கு விருப்பம் இல்லாத விஷயமாய் இருந்தாலும் செவிமடுக்கப் பழகும் போது உங்களுடைய வாழ்க்கைத் துணைக்குப் பிடித்த விஷயங்கள் என்ன என்பது உங்களுக்குப் புரியவரும். உங்களுக்குப் பிடித்தமானவையெல்லாம் உங்கள் துணைக்குப் பிடிக்க வேண்டுமென்பதில்லை. அத்தகைய புரிதல்களையும், அடுத்தவருடைய ரசனைகளும் நமது மனம் திறந்த செவிமடுத்தலில் தான் உருவாகும்.

செவிமடுப்பது அனுமானங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும். தம்பதியர் பேசாமலும், கேட்காமலும் இருக்கும் போது உலகம் அவர்களைப் பற்றிப் பேசும். கேள்விகளைக் கேட்கும். அதைத் தவிர்க்க தம்பதியரே மனம் விட்டுப் பேசுவதும், செவிமடுப்பதும் ரொம்ப முக்கியம்.

இப்படித் தொடங்கி இன்னும் ஏகப்பட்ட நல்ல விஷயங்கள் நம்முடைய செவிமடுத்தலில் இருக்கிறது. செவி மடுக்கும் போது கவனமாய் இருக்க வேண்டிய சில விஷயங்களையும் கையோடு சொல்லி விடுகிறேன்.

செவிமடுக்கையில் பேசுபவருடைய வார்த்தைகளை மட்டுமல்லாமல் உடல் மொழியையும் கவனியுங்கள்.

தொடர்ச்சி 17ம் பக்கம்...

யேர்மனியில் Frankfurt நகரில்...
SARAVANAA BHAVAN® சரவணபவன்®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
Kaiserstrasse 66, 60329 Frankfurt am Main (30 Mtrs from Railway Station) Tel : 069 97693374
a synergy of taste and quality across the globe ... every hour ... every day ...
India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.

## குடும்ப வெற்றியின்

.....16ம் பக்கத் தொடர்ச்சி

செவிமடுக்கும் போது பேசுபவருடைய உணர்வு நிலையை உள்வாங்கிக் கொள்வது கேட்டலின் உயர் நிலை. அது தான் பேசுபவரையும், கேட்பவரையும் உணர்வு ரீதியாக இணைக்கும். வேறுபட்ட மனநிலைகளில் கேட்கும் போது அந்த உணர்வு நிலையிலான இணைப்பு உருவாவதில்லை. இதைக் கொஞ்சம் கவனத்தில் கொள்ளுங்கள்.

அதே போல கவனமாகக் கேட்பது போல பலர் நடிப்பதுண்டு. அடிக்கடி புருவத்தை உயர்த்தி, சிரித்து, தலையை ஆட்டி, உச்சுக் கொட்டி ஒரு ஆஸ்கார் விருது வாங்கும் அளவுக்கு நடிப்பார்கள். ஆனால் அவர்களுடைய சிந்தனையெல்லாம் வேறு எங்கோ சுற்றிக் கொண்டிருக்கும். அந்த நடிப்பு எல்லாம் குடும்ப உறவை வலுவாக்காது !

சிலர் பேசுபவர்களைப் பேசவே விடமாட்டார்கள், இடையிடையே புகுந்து கருத்து சொல்லி, பழைய விஷயங்களைச் சொல்லி, முந்திரிக் கொட்டை தனமாக இருப்பார்கள். ரொம்பவே தப்பான விஷயம். செவிமடுப்பது இடையிடையே பேசுவதல்ல. முழுமையாய்க் கேட்பதும், சந்தேகங்களை கேள்வி கேட்டு நிவர்த்தி செய்வதும் தான்.

**முடிவெடுப்பது வேறு, முழுமையாக் கவனிப்பது என்பது வேறு!**

அதே போல கேட்பதுக்கெல்லாம் ஒத்துக் கொள்வது தான் சிறந்த செவிமடுத்தல் என்று அர்த்தமில்லை. முடிவெடுப்பது வேறு, முழுமையாக் கவனிப்பது என்பது வேறு, முழுமையாய் செவிகொடுப்பதே அதைத் தொடர்ந்து வரும் மற்ற விஷயங்களுக்கெல்லாமான ஆதார அடிப்படை.







கேட்கும்போது ஏதோ ஒரு முடிவை மனதில் வைத்துக் கொண்டோ, ஈகோவை தலையில் ஏற்றிக் கொண்டோ கேட்காதீர்கள்.
கேட்கும் போது பொறுமையும், மனக் கட்டுப்பாடும், அமைதியும் கொண்டிருங்கள். நாம் பேசுவதை அடுத்த நபர் முழுமையாய்க் கவனிக்க வேண்டும் என நாம் விரும்புவதைப் போல, அடுத்த நபர் பேசுவதையும் நாம் கவனிக்க வேண்டும் என முடிவெடுப்போம்.

மிக முக்கியமான விஷயம், செவிமடுக்கும் போது அடுத்த நபருடைய உணர்வுகள், அவர்கள் சொல்லும் விஷயம், கருத்து, அவற்றில் கவனம் செலுத்துங்கள். அடுத்த நபர் சொல்லும் வார்த்தைகளில் கவனம் செலுத்த வேண்டாம். வாய் தவறி விழும் வார்த்தையை வைத்துக் கொண்டு, ”என்னப் பாத்து இந்த வார்த்தை சொல்லிட்டாரு” என்பதெல்லாம் குடும்ப உறவை சீர்குலைக்கும்.

**அன்புடன் செவிமடுங்கள், ஆனந்தம் அளியுங்கள்.**

# இன்று இரட்டைவேடம் போடும் நடிகர்கள்!












தமிழ் சினிமாவில் ஹீரோக்கள் இரட்டைவேடம் போடுவது சினிமாவின் தொடக்க காலத்திலிருந்தே நடந்து வருகிறது.




யோகசுவாமிகளது- நற்சிந்தனைகள்
அன்பளிப்பு: வெற்றிமணி. TBB

ஒவ்வொரு 3வது வெற்றிமணிக்குள்ளும் இந்த இடத்தில் யோகசுவாமிகளது நற்சிந்தனைப் பாடல் சீடி உள்ளது.

அபூர்வ சகோரர்கள், நாடோடி மன்னன், நீரும் நெருப்பும், உத்தம புத்திரன், உலகம் சுற்றும் வாலிபன் என காலத்தால் அழிக்க முடியாத இரட்டைவேட காவியங்கள் இருக்கிறது. இது எப்போதாவதுதான் நடக்கும். ஆனால்

சமீபகாலமாக ஹீரோக்களின் இரட்டைவேட மோகம் அதிகரித்திருக்கிறது. தற்போது பிரபல ஹீரோக்கள் நடித்து வரும் படங்கள் இரட்டைவேட படமாகத்தான் இருக்கிறது. அல்லது இரண்டு வேடத்தில்லாவது வருகிற படங்களாத்தான் இருக்கிறது.
ரஜினி

பில்லாவில் தொடங்கியது ரஜியின் இரட்டைவேட பயணம். அதன் பிறகு ஜானி, நெற்றிக்கண், வீரா என அவ்வப்போது இரட்டை வேடங்களில் நடித்தார். சமீபத்தில் எந்திரன் படத்தில் நடித்தார். தற்போது வெளிவர இருக்கும் கோச்சடையானிலும் ரஜினி இரட்டை வேடம்தான். கோச்சடையான் என்ற அப்பாவாகவும், ராணா என்ற மகனாகவும் நடிக்கிறார். அடுத்து நடித்துக் கொண்டிருக்கும் லிங்கா படத்தில் ஊருக்கு உழைக்கும் பெரிய மனுஷன், அடிதடியில் இறங்கும் தாதா என இரட்டை வேடத்தில் நடிக்கிறார்.

கமல்

கமலுக்கு இரட்டை வேடம் ஒன்றும் புதிதில்லை. இன்னும் சொல்லப்போனால் அதிகமாக இரட்டை வேடங்களில் நடித்தவர் கமல்தான். கல்யாணராமன், குரு, கடல் மீன்கள, தூங்காதே தம்பி தூங்காதே, எனக்குள் ஒருவன், ஒரு கைதியின் டயரி, புன்னகை மன்னன், அபூர்வ சகோதரர்கள், இந்தியன் இப்படி நிறைய படங்கள் அவர் கேரியரில் உண்டு. சமீபகாலமாக இரட்டை வேடத்தில் நடித்திராத கமல் தற்போது நடித்து

வரும் உத்தம வில்லன் படத்தில் இரண்டு வேடத்தில் நடிக்கிறார். ஒருவர் 19ம் நூற்றாண்டில் வரும் தெருக்கூத்து கலைஞர். இன்னொருவர் நிகழ்கால சினிமா நடிகர்.
அஜீத்

வாலி, சிட்டிசன், வில்லன், அட்டகாசம், பில்லா-2, அசல் படங்களில் அஜீத் இரட்டை வேடத்தில் நடித்துள்ளார். தற்போது அவர் கவுதம் மேனன் இயக்கும் படத்திலும் இரட்டை வேடம் என்கிறார்கள். ஆனால் அதனை முறைப்படி அறிவிக்கவில்லை. ரகசியமாக வைத்திருப்பதாக கூறப்படுகிறது.

விஜய்

விஜய் தன் கேரியரில் இரட்டை வேடங்களில் அதிகம் நடித்ததில்லை. அழகிய தமிழ் மகன் படத்தில் நடித்திருந்தார். சில படங்களில் இரண்டு கெட்அப்களில் நடித்திருக்கிறார். தற்போது ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் நடித்து வரும் கத்தி படத்தில் இரட்டை வேடம். செய்யாத குற்றத்திற்காக சிறையில் இருக்கும் அண்ணனாகவும், அவரைக் காப்பாற்றும் தம்பியா கவும் நடித்து வருகிறார்.

தொடர்ச்சி 19ம் பக்கம்



# வடபகுதியில் இராணுவ ஆட்சேர்ப்பு! நடனம்! சங்கீதம்!! வெற்றிடம் உண்டாம்!!!







வடபகுதியில் இராணுவ ஆட்சேர்ப்பு உண்மைதானாம்! அறிவித்தலில் மரவேலைப் பயிற்சி, நடன ஆசிரியர் சங்கீத ஆசிரியர் என பல வெற்றிடங்கள் இருப்பதாக அறிவித்தில் உள்ளது. இராணுவத்திற்கு ஏன் நடனம், சங்கீத ஆசிரியர் அவர்களுக்கு ஏன் என்பது புரியவில்லை.

இதற்கான அறிவித்தலை யாழ்.மாவட்ட இராணுவத்தின் ஊடக இணைப்பாளர் மல்லவராட்சி அண்மையில் வெளியிட்டார். படைத்தலைமையகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள சிவில் அலுவலகத்தில் இடம் பெற்றது. அதன்போதே குறித்த அறிவித்தலையும் உத்தியோக பூர்வமாக தெரிவித்தார்.





## யாழ்ப்பாணத்தில் நடமாடும் நூலகம்

சிங்கப்பூர் அரசாங்கத்தின் ஏற்பாட்டில் Singapore International Foundation இன் நிதியுதவியுடன் வழங்கப்பட்ட பேருந்தில் அமைக்கப்பட்ட நடமாடும் நூலகம் அண்மையில் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் சண்முகம் அவர்களால் உத்தியோக பூர்வமாக யாழ் நூலகத்திடம் கையளிக்கப்பட்டது.







## யாழ்ப்பாணத்தில் வெற்றிமணி கல்விச் சேவை!

வெற்றிமணி கல்விப் பணி மையத்தில் இலவசமாக கல்வி பயிலும் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு குரும்பசிட்டியைச் சேர்ந்த லோகேஸ்வரன் நிதுஷா, லோகேஸ்வரன் மிதுஷன், மதுஷன் ஆகியோர் காலணிகளை அன்பளிப்பு செய்வதை படங்களில் காணலாம். வெளிநாடுகளில் இருந்து மட்டுமல்ல உள்நாட்டிலும் கல்விப்பணியின் மகத்துவம் அறிந்து உதவிவருகின்றார்கள். கல்விக்குச் செய்யும் உதவி காலத்தால் அழியாதது.


திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது
விழா ஒழுங்கமைப்பு K S இல் நிச்சயிக்கப்படுகிறது!

அழைப்பிதழ்கள் அன்பளிப்பு பொருட்கள் மணவறை
பலூன் அலங்காரம் மண்டப அலங்காரம், ஐயர் ஒழுங்கு,
மங்களவாத்திய ஒழுங்கு பூமாலை ஒழுங்கு,
மணமகள் அலங்காரம் புகைப்படம் வீடியோ,

ஒளி ,ஒலி அமைப்பு DJ
கேக் வகைகள் சிற்றுண்டி
சைவ, அசைவ உணவு.
குளிர்பானங்கள்

KS Services













தொடர்புகளுக்கு:
Tel. 0049 21025300247
Mobil. 004917610247194
Mobil. 00491722192035
E-Mail. info@ksservices.de
Web. www.ksservices.de

KS Services
Berliner Str. 49- 40880 Ratingen

வாகன ஒழுங்கு தங்குமிட வசதி.
ஐரோப்பா தழுவியசேவை.
இன்னும் பல சேவைகள்

உங்களின் எண்ணங்கள்
எங்களின் கை வண்ணங்களில்




# முற்பிறப்பில் தன்னைக் கொன்றவனைக் காட்டிய மூன்று வயதுக் குழந்தை!

## மறுஜென்மம்!

மயிலையூரான்

சிறுவன், தன்னை புதைத்த இடத்தை மக்களுக்கு நேரில் சென்று காட்டியுள்ளான்.

அங்கிருந்த மக்களிடம் இது தொடர்பாக விசாரித்த போது அச்சிறுவன் குறிப்பிட்ட மனிதன் அங்கு வசித்து வந்ததும், கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல் போனதும் உறுதி செய்யப் பட்டது.



### யேர்மனியின் பிரபல மறுபிறப்பு ஆய்வாளர் டிரட்ஸ் ஹார்டோவின் புத்தகத்தில் திடுக்கிடும் தகவல்கள்!

டமாஸ்கஸ்: சிரியாவில் மூன்று வயது சிறுவன் ஒருவன் தன்னை முற்பிறவியில் கொலை செய்தவனைக் காட்டிக் கொடுத்த சம்பவம் பெரும் பரபரப்பை உண்டாக்கியுள்ளது.

சிரியாவில் உள்ள கோலன் ஹைட்ஸ் பகுதியை சேர்ந்த 3 வயது ஆண் குழந்தை பிறக்கும் போதே தலையில் சிறிய கோடு போன்ற அடையாளத்துடன் பிறந்ததாகக் கூறப்படுகிறது.
அவ்வாறு பிறக்கும் குழந்தைகள் தங்களது முற்பிறவியை நினைவில் கொண்டிருப்பார்கள் என்பது ட்ருஸ் தனி இனக்குழுவின் நம்பிக்கையாம். அதை உண்மையென்று நிரூபிக்கும் விதமாக அந்த சிறுவன் பேசும் வயதை எட்டியவுடன் தனது முற்பிறவி ரகசியங்களை கூறியுள்ளான்.

அதன்படி, முற்பிறவியில் தன்னுடைய பெயர் மற்றும் தான் வசித்த இடத்தைப் பற்றியும் அச்சிறுவன் தெரிவித்துள்ளான். மேலும், முற்பிறவியில் ஒருவன் தன்னை கோடாரியால் வெட்டிக் கொன்றதாக அதிர்ச்சித் தகவலைக் கூறிய அதனைத் தொடர்ந்து சிறுவன் காட்டிய இடத்தில் தோண்டிப் பார்த்துள்ளனர். அங்கே ஒரு ஆணின் மண்டை ஓடு மற்றும் கோடாரியும் கண்டெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தன்னைக் கொலை செய்தவனையும் நேரில் அடையாளம் காட்டியுள்ளான் அச்சிறுவன். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் செய்த கொலை குறித்து ஆதாரத்துடன் சிக்கியதால் கொலைகாரன் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டான்.

அதன் தொடர்ச்சியாக கைது செய்யப் பட்ட அக்கொலைக்காரன் சிறையில் அடைக்கப் பட்டான். இந்த சம்பவங்களை ஜெர்மனி நாட்டு தெரப்பிஸ்ட் ஆன டிரட்ஸ் ஹார்டோவிடம் (Trutz Hardo, one of Germany's leading regression therapists.) சாட்சி ஒருவர் தெரிவித்துள்ளார். ஹார்டோ இதை ஒரு புத்தகமாக எழுதியுள்ளார். அதில் சிறார்கள் குறித்தும் அவர்களின் மறு பிறப்பு குறித்தும் அவர் விளக்கியுள்ளார். இதுகுறித்து ஹார்டோ கூறுகையில், டாக்டர் எலி லாஸ், இதுகுறித்து தனது மரணத்திற்கு முன்பு என்னிடம் கூறினார் என்று குறிப்பிட்டுள்ளார். இதனை படித்தவர்களில் சிலர் இது கட்டுக்கதை என்றும், சிலர் நடந்திருக்க வாய்ப்புள்ளதாகவும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# இன்று இரட்டை............

17ம் பக்கத் தொடர்ச்சி



சூர்யாவுக்கும் இரட்டை வேடம் புதிதல்ல. பேரழகன், வேல், வாரணம் ஆயிரம், 7ம் அறிவு, மாற்றான் படங்களில் இரட்டை வேடத்தில் நடித்தார். அதிலும் குறிப்பாக மாற்றான் படத்தில் ஒட்டிப்பிறந்த இரட்டையர்களாகவே நடித்தார். தற்போது லிங்குசாமி இயக்கத்தில் நடித்து வரும் அஞ்சான் படத்தில் சாப்ட்வேர் என்ஜினீயர், அண்டர்கிரவுண்ட் தாதா என்ற இரண்டு வேடங்களில் நடித்து வருகிறார்.
சரத்குமார்
கமலுக்கு அடுத்தபடியாக அதிக இரட்டை வேடங்களில் நடித்திருப்பவர் சரத்குமார் நாட்டாமை, நம்ம அண்ணாச்சி, அய்யா, சூரிய வம்சம், அரசு, வைத்தீஸ்வரன், 1977 உள்பட பல படங்களில் நடித்திருக்கிறார். அவர் நடித்து பாதியில் நிற்கும் விடியல் படத்திலும் இரட்டை வேடம்தான். இப்போது ஏ.வெங்கடேஷ் இயக்கத்தில் நடிக்க இருக்கும் சண்டமாருதம் படத்திலும் வில்லன், ஹீரோ என் இரண்டு வேடங்களில் நடிக்கிறார்.
வடிவேலு
வடிவேலு ஹீரோவாக அறிமுகமான இம்சை அரசன் 23ம் புலிகேசி படத்திலேயே இரட்டை வேடத்தில் நடித்தார். அதன் பிறகு வெளிவந்த இந்திரலோகத்தில் நான் அழகப்பன் படத்திலும், சமீபத்தில் வெளிவந்த தெனாலிராமன் படத்திலும் இரட்டை வேடத்தில் நடித்தார். அடுத்தும் அவர் யுவராஜ் தயாளன் இயக்கத்தில் நடிக்க இருக்கும் படத்திலும் இரட்டை வேடம்தான். 18ம் நூற்றாண்டு மனிதனாகவும், இன்றையகால மனிதனாகவும் நடிக்கிறார்.



எல்லாகட்டத்திலும் ஹீரோக்கள் இரட்டை வேடத்தில் நடித்திருந்தாலும் ஒரே நேரத்தில் எல்லா ஹீரோக்களும் இரட்டை வேடத்தில் நடிப்பது இதுதான் முதல் முறை. சரி சரி இரட்டைவேடம்.படத்தில் பாதிநேரம் வரும் நாயகர்கள் இனி முக்கால் நேரம் வருவார்கள். அப்படி என்றால் கொடுத்த பணத்திற்கு வேலை வாங்குகிறார்களா?


Akchaya Digital Photography& Decoration

Weddings,Puberty ceremony.Reception,Birthday,Aranketam,Registration

உங்கள் திருமணநாள் பிறந்தநாள்,மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும் மண்டபம் மணவறை சோடினை,நாதஸ்வரம் பூமாலைகள் கேக் சிற்றுண்டி குடிபானங்கள் உணவுவகைகள்,மேக்கப் வாகன ஒழுங்கு மற்றும் ஐயர், அனைத்து தேவைகளையும் செய்து தருகின்றோம்.

Contakt:E.Akilan. 02641 91 68 98 Mobi: 0163 39 40 474








# அடுத்தவர் மீது குறை காணும் முன்...



அந்த இளம் தம்பதி புதிதாக ஒரு இடத்திற்குக் குடி போனார்கள்.

அதிகாலை காபி குடித்தபடி ஜன்னல் வழியே இருவரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். பக்கத்து வீட்டுப் பெண்மணி துவைத்து விட்டு துணிகளை உலர்த்திக் கொண்டிருந்தாள்.

பார்த்துக் கொண்டே இருந்த மனைவி சொன்னாள். "அந்தம்மாவிற்குத் துவைக்கவே தெரியவில்லை போல் இருக்கிறது. துணியில் அழுக்கே போக வில்லை பாருங்கள்"

கணவனும் பார்த்தான். ஆனால் பதில் எதுவும் சொல்லவில்லை. தினமும் அவர்கள் எழுந்து காபி குடிக்கும் நேரமும், பக்கத்து வீட்டுப் பெண்மணி துவைக்கும் நேரமும் ஒன்றாகவே இருந்ததால் மனைவி தினமும் அடுத்த வீட்டு சலவை சரியில்லாதது பற்றி தினமும் சொல்லிக் கொண டேயிருந்தாள்.

திடீர் என்று ஒரு நாள் பக்கத்து வீட்டுப் பெண்மணி துவைத்து உலர வைத்த போது பளிச்சென்று சுத்தமாக உலர்வதைப் பார்த்த மனைவி சொன்னாள். "அப்பாடா. இப்போது அந்தம்மாள் துவைக்கக் கற்றுக் கொண்டு விட்டாளா இல்லை நல்ல சோப்பை பயன்படுத்த ஆரம்பித்து விட்டாளா என்று தெரியவில்லை... இன்று தான் துணிகள் பளிச்சென்று சுத்தமாக இருக்கின்றன.."

கணவன் அமைதியாகச் சொன்னான். "இன்றைக்கு அதிகாலையில் தான் நான் நம் வீட்டு ஜன்னல் கண்ணாடிகளைச் சுத்தம் செய்தேன்"

இப்படித்தான் பல முறை நடக்கின்றன. நம் வீட்டுக் கண்ணாடி சுத்தமில்லாத போது அடுத்தவர் வீட்டுத் துணிகள் அழுக்குப் படிந்தே காட்சி அளிக்கின்றன. ஆனால் நாம் நம் வீட்டுக் கண்ணாடியை சந்தேகிப்பதே இல்லை.

ஒருவேளை அடுத்தவரிடம் உண்மையாகவே குறைகள் இருந்தாலும் கூட அவை உடனடியாக நம்மால் கவனிக்கப்படுகின்றன. அதற்கு ஏதாவது நியாயமான காரணம் இருக்கலாம் என்று கூட நம்மால் யோசிக்க முடிவதில்லை. நம் குறை களுக்கோ காரணங்கள் மட்டும் தான் வலுவாக வைத்திருக்கிறோம். அந்தக் காரணங்கள் இல்லா விட்டால் நாம் பத்தரை மாற்றுத் தங்கம் தான்.

'சோ'வின் யாருக்கும் வெட்கமில்லை படத்தில் ஒரு அழகான பாடல் உண்டு.

"சுட்டும் விரலால் எதிரியைக்
காட்டி குற்றம் கூறுகையில்
மற்றும் மூன்று விரல்கள்
உங்கள் மார்பினைக் காட்டுமடா.
மூடர்களே பிறர் குற்றத்தை
மறந்து முதுகைப் பாருங்கள்
முதுகில் இருக்கு ஆயிரம்
அழுக்கு, அதனைக் கழுவுங்கள்"

திருவள்ளுவரும்
அழகாகச் சொல்வார்.
"ஏதிலார் குற்றம் போல்
தன்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும்
உயிர்க்கு"

அடுத்தவர் குறைகளைக் காண்பதில் உள்ள ஆர்வத்தை நாம் நம் குறைகளைக் காண்பதிலும் வைத்துக் கொண்டால் இந்த உலகில் தீமை இருக்க முடியுமா? அடுத்தவர்கள் குறைகளைக் காண்பதில் தான் நமக்கு எத்தனை அக்கறை? எத்தனை வேகம்? அந்த நேரத்தில் தான் நம் கவனிப்பு எத்தனை கூர்மை பெற்று விடுகிறது. ஆனால் நம் விஷயம் என்று வரும் போது அதெல்லாம் காணாமல் போய் விடுகிறது. குறை கூறுபவர்கள் நோக்கத்தில் குறை காண ஆரம்பித்து விடுகிறோம்.

இப்படிப்பட்ட சுபாவம் நம்மிடம் இருக்கும் வரை நாம் குறைகளை நீக்கிக் கொள் ளவோ, திருந்தவோ வாய்ப்பே இல்லை.

அடுத்தவர் திருந்தி பெரிதாக நமக்கு எதுவும் ஆகப் போவதில்லை. மாறாக குறைகளை நீக்கிக் கொண்டு நாம் திருந்தினால் நம் வாழ்க்கையில் அடையும் பயன்கள் ஏராளமானவை.

மேலும் நாம் நம் குறைகளை நீக்கிக் கொண்டு சிறப்பாக வாழும் போது அடுத்தவர்கள் நம்மைப் பார்த்து மாற உத்வேகத்தை ஏற்படுத்தும் வண்ணம் நல்ல உதாரணமாகவும் இருப்பதால், குறையுள்ள மற்றவர்களும் நல்வழிக்கு மாற வாய்ப்புண்டு.

எனவே விமரிசனம் தவிர்த்து நல்ல உதாரணமாக இருந்து வழிகாட்டுவோம்.!

- என்.கணேசன்


ஸ்ரீ துர்க்கா மகேஷ்வரி ஜோதிட நிலையம்
Sri Thurkka Astrology Temple of success



உலகப் புகழ்பெற்ற
பண்டித் ராம்தேவ் சாஸ்திரிகள்



Elisabeth Str.102 - 45139 Essen



தலைமுறை தலைமுறையாக ஜோதிடக்கலையில் பாண்டித்தியம் பெற்ற பண்டித் ராம்தேவ் சாஸ்திரிகளின் துல்லியமனாகணிப்பில் உங்கள் கடந்த கால நிகழ்கால எதிர்கால பலாபலன்களை கைரேகை சாதகம் குறிப்பு மற்றும் எண்சோதிட முறையில் வியாபாரம் - எதிரிகள் - உடல்நிலை வேலை குழந்தையின்மை திருமணம் - மற்றும் விவாகரத்து வழக்குகள் யாவிற்கும் ஜோதிடக்கணிப்பின் மூலம் ஆலோசனை தீர்வுகள் உடன் நாடுங்கள்.

மந்திரம், தந்திரம், காத்துக்கறுப்பு, பீடைபிசாசு என்ன இருந்தாலும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும்.உங்கள் விபரங்கள் இரகசியம் பேணப்படும்.

பேசும் மொழிகள் - ஆங்கிலம் கிந்தி மற்றும் தமிழ்

கிழமை 7 நாட்களும் 09.00 முதல் 20.00 மணி வரை வரலாம்



Tel: 0152 18 671 505 / 0152 18 731 405

KAILAS
Fisch- Feinkost

டோட்மூண்ட் நகரில்
கடல் உணவுக்கு
ஓர் கடை
கைலாஸ்

Offnungszeiten:
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 9.00 முதல்
மாலை 20.00 மணி வரை

Tel:0231 137 433 95

Handy:0163 47 60 857,0163 47 60 237

web.kailas-fisch.de

email:info@kailas-fisch.de

Adler Str.05
44137 Dortmund

ஒவ்வொரு வியாழக்கிழமையும்
இலங்கை இந்திய மீன்கள்
உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்!
தரமான ஆட்டு இறைச்சி
எம்மிடம் கிடைக்கும்!


துரித பணமாற்றுச் சேவை

அதிகூடிய பெறுமதியில் தாயகத்தில்
பணம் பெற எம்மை நாடுங்கள்!




NSB National Savings Bank HNB Bank of Ceylon BOC Instant Cash

இலங்கையில் மேற்படி வங்கிகளில் பணம் பெறலாம்
இங்கு வளங்கும் பணத்திற்கு



பசுமையான
உடன் மரக்கறி
வகைகளுக்கும்
எம்மை நாடுங்கள்

# ஒரு கோவிலும் ஒரு கேள்வியும்



## பூகம்பம் வந்தாலும் கோயிலுக்கு எந்த பாதிப்பும் நேராது!

### இரா.சம்மந்தன் கனடா

உலகின் பாரம்பரியச் சின்னமும் இந்தியாவின் பெருமையுமான தஞ்சைப் பெரிய கோயில் முழுக்க முழுக்க மணல் மீது கட்டப்பட்டுள்ளது என்கின்றன சமீபத்திய ஆய்வுகள். 2010-ம் ஆண்டு நடந்த பெரிய கோயிலின் ஆயிரமாவது ஆண்டு விழாவின் போது கருவறையில் ,ருந்து சுமார் 100 அடி தொலைவில் ஆழ்துளைக் கிணறு தோண்டப பட்டது.

மூன்று நாட்கள் தொடர்ந்து துளையிட்டதில் சுமார் மூன்றுலாரி அளவுக்கு மணல் வந்தது. பின்னர் ,துகுறித்துதகவல் அறிந்த கோயில் கட்டிடக் கலை நிபுணர்கள்,தற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் அப்பணி நிறுத்தப்பட்டது.இதுகுறித்து கோயில் கட்டிடக் கலைஞரும் ஆய்வாளருமான பெருந்தச்சன் தென்னன் மெய்ம்மன் 'தி இந்து'விடம் கூறியதாவது பெரிய கோயில் வடிவமைப்பையும் அதன் தரைப் பகுதியையும் சில ஆண்டுகளுக்கு முன்பே ஆய்வு செய்தோம்.
அதில் கோயிலின் அஸ்திவாரம் மரபுவழி கட்டுமானமான ஆற்று மணல் படுகை யைக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது. அதாவது, தரையின் மேற்பகுதியில் ,ருக்கும் கல்லால் ஆன கோயில் கட்டுமானத்தை விட இரு மடங்கு சுமை கீழே இருக்க வேண்டும்.

அதன்படி இயற்கையாக அங்கிருந்த சுக்கான் பாறையை தொட்டியாக வெட்டி அதில் பரு மணலை நிறைத்து அதன் மீது கோயிலைக் கட்டியிருக்கிறார்கள். கருங்கல் தொட்டி, மணல் விலகாமல் இருக்க உதவும். அதேசமயம், மணல் இயல்பாக அசைந்துகொடுக்கும் தன்மை உடையது. பூமித் தகடுகளின் எதிர்பாராத அசைவுகளின்போது மணலின் அசைந்து கொடுக்கும் தன்மையால் மேற்பகுதியில் இருக்கும் கட்டுமானம் விலகாது. அதாவது, பூகம்பம் வந்தாலும் கோயிலுக்கு எந்த பாதிப்பும் நேராது. தஞ்சை பெரிய கோயிலின் ஒரு கன அடி கல்லின் எடை 70 கிலோ. தோராயமாக கோயிலின் எடை ஒரு லட்சம் டன். அதனை ஒப்பிடும்போது அஸ்திவாரமாக சுமார் ஒரு கோடி கன அடி பருமணலை கல்தொட்டியில் நிரப்பியிருக்க வேண்டும் என்று தெரிகிறது. இதன்மூலம் பூமித் தகடுகளின் அசைவின்போது மணல் அஸ்திவாரம் தன்னைத்தானே சமப்படுத்திக்கொள்ளும். இன்னும் எளிமையாக விளக்க வேண்டும் எனில் தலையாட்டி பொம்மையின் தொழில்நுட்பத்துக்கு ஒப்பானது. அசையுமே தவிர விழாது.

தலையாட்டி பொம்மைகளின் பூர்வீகமும் தஞ்சாவூர் என்பதை இங்கு கவனிக்க வேண்டும். இயல்பிலேயே கருங்கல் கட்டுமானங்களுக்கு மணல் அஸ்திவாரமே பொருத்தமானது.

அதனால்தான் பெரும்பாலான கடல் கட்டுமானங்களில் கருங்கற்களும் ஆற்று மணலும் ,டம்பெறுகின்றன. 2010-ம் ஆண்டு கோயிலுக்குள் ஆழ்துளைக் கிணறு தோண்டியபோது அஸ்திவாரம் மணல் என்பதாலேயே அங்கு சத்தம் வரவில்லை. அங்கு வெளியேறிய மணலில் மண் மற்றும் பாறைத்துகள் எதுவும் இல்லை. 350 அடி ஆழத்துக்கு கீழே தோண்டிய பிறகுதான் களிமண் வெளியேறியுள்ளது.

இந்த மணல் தஞ்சாவூர் முகத்துவாரப் பகுதிக்கான மணல் அல்ல. தஞ்சாவூர் பகுதியில் இருப்பது சமதளத்தில் ஓடும் காவிரி ஆற்றுப் பகுதியின் குறுமணல். ஆனால், கோயிலின் அடியில் கிடைத்தது,

அதைவிட மூன்று மடங்கு பெரிய பருமணல். இது மலைகளில் பாய்ந்தோடும் காட்டாறுகளில் படியும் மணல். மேற்குத் தொடர்ச்சி மலைகளின் காட்டாற்றுப் படுகைகளில் இருந்து இந்த மணலைக் கொண்டுவந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.
இவ்வாறு பெருந்தச்சன் தென்னன் மெய்ம்மன் கூறினார்.

கோவில் கட்டுமானத்தில் சுடு செங்கல் இல்லை. மரம் இல்லை. சொறிகல் என்ற பூராங்கல் இல்லை. மொத்தமும் கருங்கல். நீலம் ஓடிய, சிவப்பு படர்ந்த கருங்கல். உயர்ந்த கிரானைட். இரண்டு கோபுரங்கள் தாண்டி, விமானம் முழுவதும் கண்களில் ஏந்திய அந்தக் கோவிலின் நீளமும், அகலமும், உயரமும் பார்க்கும்போது, வெறும் வண்டல் மண் நிறைந்த அந்தப் பகுதிக்கு இத்தனை கற்கள் எங்கிருந்து வந்தன, எதில் ஏற்றி, இறக்கினர், எப்படி இழுத்து வந்தனர், எத்தனை பேர், எத்தனை நாள், எவர் திட்டம், என்ன கணக்கு. இந்தக் கருங்கற்களை செதுக்க என்ன உளி, என்ன வகை இரும்பு, எது நெம்பி தூக்கியது, கயிறு உண்டா, கப்பிகள் எத்தனை, இரும்பு உண்டெனில், பழுக்கக் காய்ச்சி உரமேற்றும் உத்தி (Heat Treatment) தெரிந்திருக்க வேண்டுமே.

இரும்பை சூடாக்கி எதில் முக்கினர். தண்ணீரிலா, எண்ணெயிலா. நெருப்பில் கனிந்த ,ரும்பை எண்ணெயில் முக்கும் கலை, (oilquenching) ஆயிரம் வருடங்களுக்கு முன்பே உண்டா. எத்தனை பேருக்கு எவ்வளவு சாப்பாடு. அரிசி, காய்கறி எங்கிருந்து. சமையல் பாத்திரம் எத்தனை. படுத்துறங்க எங்கு வசதி. மறைவு வசதிகளுக்கு நீர்த்துறை எது.

மனிதருக்கு உதவியாய், யானைகள், மாடுகள், குதிரைகள், கழுதைகள் உண்டெனில்,அதற்கு உணவும், அவற்றைப் பழக்கி உபயோகப்படுத்துவோரும் எத்தனை பேர். அத்தனை பேரும் ஆண்கள் தானா. கோவில் கட்டுவதில் பெண்களுக்கும் பங்குண்டா. தரை பெருக்கி, மண் சுமந்து, பளு தூக்கு வோருக்கு மோர் கொடுத்து விசிறிவிட்டு, இரவு ஆட்டம் ஆடி, நாடகம் போட்டு, பாட்டு பாடி, அவர்களும் தங்கள்பங்கை வழங்கியி இருப்பரோ.

இத்தனை நடவடிக்கையில், உழைப்பாளிகளுக்கு காயம் படாதிருந்திருக்குமா. ஆமெனில், என்ன வைத்தியம். எத்தனை பேருக்கு எவ்வளவு வைத்தியர். இத்தனை செலவுக்கும், கணக்கு வழக்கென்ன, பணப்பரிமாற்றம் எப்படி. பொன்னா, வெள்ளியா,செப்புக்காசா. ஒரு காசுக்கு எத்தனை வாழைப் பழம். என்னவித பொருளா தாரம். உணவுக்கு எண்ணெய், நெய், பால், பருப்பு, மாமிசம், உப்பு, துணிமணி, வாசனை அணிகலன்கள் இருந்திருக் குமா. பாதுகாப்பு வீரர்கள் உண்டா.

வேலை ஆட்களுக்குள் பிரச்னை யெனில், பஞ்சாயத்து உண்டா. என்ன வகை சட்டம். எவர் நீதிபதி இவையெல்லாம் யாராலும் முழமையான விடை சொல்ல முடியாத கேள்விகளாகவே இன்றும் இருக்கின்றன.

அப்படியே என்றும் இருக்கும் என்பது மட்டும் நிச்சயமானது! இந்தத் தகவல்களை வலைத் தளங்களில் இருந்து நான் தொகுக்க முற்பட்டபோது எங்கள் முன்னோரை எண்ணி வியப்பு ஏற்படவில்லை!
மாறாக மிகுந்த பயவுணர்வே ஏற்படுகின்றது!
நன்றி.தமிழர் தகவல் கனடா.



## ஆண்களை அதிகம்
11ம் பக்கத் தொடர்ச்சி



சுற்றுச்சூழலால் பரவும் புற்றுநோயை மிகவும் குறைத்து எடை போட்டிருக்கின்றோம்". இவற்றை குறைத்து மதிப்பிடக் கூடாது, எனினும், இத்தகைய நச்சு கலந்த இரசாயனத்தை கண்டறிந்து அவற்றிலிருந்து நம்மை காத்துக் கொள்வது நமது கையில் தான் உள்ளது. இத்தகைய இரசாயனங்களில் புரோஸ்டேட் புற்றுநோயை தூண்டும் நச்சுப்பொருட்கள் உள்ளன.

ஒமேகா-3 உள்ள மீன் வகைகள் வாரத்திற்கு ஒரு முறையாவது ஒமேகா-3 உள்ள மீன் வகையை உண்பது புரோஸ்டேட் புற்றுநோயை தடுக்கும். காலிபோர்னியா பல்கலைகழகத்தின் ஆராய்ச்சி முடிவுகளின் படி கருப்பான மற்றும் கொழுப்பு மிக்க ஒமேகா-3 உள்ள மீன் வகைகளை வாரத்திற்கு ஒரு முறையாவது உண்டவர்களுக்கு புரோஸ்டேட் புற்றுநோயை 63 சதவிகிதம் வராமல் தடுக்கப்பட்டுள்ளது என்று தெரிய வந்துள்ளது. ஐகோசாபின்டானாய்க் அமிலம் (EPA) மற்றும் டோகோசா எக்சானிக் அமிலம் ஆகியவற்றைக் கொண்ட இத்தகைய மீன்கள் புரோஸ்டேட் புற்றுநோயை தடுக்க பெருமளவில் உதவுகின்றன என்று ஆராய்ச்சியில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தியானம் செய்வது தியானம் செய்வதால் எப்படி புரோஸ்டேட் புற்றுநோயை தடுக்க முடியும் என்று தவறாக எண்ணக்கூடாது. உங்கள் மனதின் சக்தியை குறைவாக மதிப்பிடாதீர்கள். அதற்கு உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை பெருமளவில் பாதிக்கக்கூடிய சக்தி உள்ளது. உங்களுக்கு தெரிந்த வரையில் தியானம் செய்வது உடலையும், மனதையும் அழுத்தத்திலிருந்து விடுவித்து இளைப்பாற செய்யும் என்று தான் நினைத்திருப்பீர்கள். ஆனால் இவை அதனினும் மேலான காரியங்களை செய்யக்கூடிய வீரியம் மிக்கவையாகும். பல்வேறு ஆராய்ச்சியாளர்களும் அதீதமான மன அழுத்தம் புற்று நோயைத் தூண்டும் சக்தி கொண்டுள்ளது. அது நோய் எதிர்ப்புச் சக்தியை குறைத்து புற்றுநோயிற்கான திசுப் பெருக்கத்தை அதிகரிக்கச் செய்கின்றது.

உடற்பயிற்சிகள் எடை குறைப்பது மற்றும் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துவது ஆகிய நற்பண்புகளை கொண்ட உடற்பயிற்சி புரோஸ்டேட் புற்று நோயையும் தடுப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது. புரோஸ்டேட் ஆரோக்கியத்தை காத்துக் கொள்ள உடற்பயிற்சி உறுதுணையாக உள்ளது. சான் பிரான்சிஸ்கோவில் உள்ள காலிபோர்னியா பல்கலைகழகத்தின் ஆராய்ச்சியின் படி, மிகுதியான உடற்பயிற்சியை மேற்கொள்ளுவது புரோஸ்டேட் புற்றுநோயை தடுப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது. இதற்கான ஆய்வுகளில் உடல் சுறுசுறுப்பாக இருக்கும் போது, புரோஸ்டேட் புற்று நோயை 19 சதவிகிதம் தடுக்க முடியும் என்று தெரிவித்துள்ளது. இதர நிபுணர்களும் உடற்பயிற்சி புற்றுநோயை தடுப்பதில் பெரும் பங்கு வகிப்பதாக தெரிவித்துள்ளனர்.









கடுகுமணி 9




# கடவுள் வருவாரா?

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

“கடவுள் எங்களிடம் வருவாரா?” என்று ஒருவர் கேட்டார். “அவர் வருவார். எங்களுக்குத் தேவை ஏற்படும்போது ஏதோ வடிவில் வருவார்.” என்று நம்பிக்கையுடன் மற்றவர் சொன்னார்.

இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது மழை பெய்தது. “கடவுள் வருவாரா?” என்று கேட்டவருக்கு மிக அவசரமான வேலை. மழையோ ஓய்வதாயில்லை.

இந்த வேளை இருவருக்கும் தெரிந்த ஒருவர் அங்கு குடையுடன வந்தார்.

அவரிடம் “கடவுள் வருவாரா?” என்று கேட்டவருடைய அவசர வேலை பற்றிக் கூறப்பட்டது. வந்தவர் சொன்னார்: “என்னிடம் இன்னொரு குடை இருக்கிறது. அதைப் பிடித்துக்கொண்டு நீங்கள் போகவேண்டிய இடத்துக்குப் போங்கள்” என்று குடையைக் கொடுத்தபோது “நீங்கள் கடவுள்போல வந்தீர்கள்” என்று “கடவுள் வருவாரா?” என்று கேட்டவர் சொன்னார்.

கணவனை இழந்த ஒரு தாய். அவளும் பிள்ளைகளும் உணவில்லாமல் துன்பப்பட்டனர். இளைய மகன் “அம்மா பசிக்குதம்மா” என்று கூறிச் சுருண்டு போய்க் கிடந்தான். இளைய மகள் வயிற்றைப் பிடித்தபடி தாய் முகத்தைப் பார்த்தாள். மூத்தமகள் “என்னம்மா செய்யலாம்” என்று ஏங்கினாள். தாயோ “பிள்ளை! இனிக் கடவுள்தான் எங்களுக்குச் சாப்பாடு தரவேண்டும்” என்று கூறிவிட்டு நிலத்திலே சாய்ந்தாள்.

அந்த வேளை யாரோ ஒருவர் அங்கு வந்தார். அவர் நிலையை உணர்ந்து தன்னிடமிருந்த உணவில் ஒரு பகுதியை கொடுத்தார். அவரைப் பார்த்து அந்தத் தாய் “ஐயா நீங்கள் கடவுள்போல வந்துள்ளீர்கள.” என்று கூறினாள்.

சென்ற நூற்றாண்டின் சிறந்த தமிழ்க் கவிஞன் பாரதி இக்கட்டான வேளையில் கடவுள் எப்படி வந்து எங்களைக் காப்பாற்றுவார் என்பதை தன்னுடைய கண்ணன் பாட்டிலே,

“மழைக்குககுடை பசிநேரத்து உணவு வாழ்வினுக்கு எங்கள் கண்ணன்” என்று பாடினான்.

---

காத்திருப்பு 12ம் பக்கத் தொடர்ச்சி




மாற்றங்களே இல்லாமல் நாட்கள் வருடங்களாகி விட்டன. இன்னும் எத்தனை காலம்...? மனசு கனத்தது. காத்திருப்பதென்பது அவளுக்குப் புதிதா என்ன..!

அப்பா அவளை வெளியே அழைத்துச் செல்வதற்காக பஸ் தரிப்பில் தனக்காகக் காத்திருக்கச் சொல்வார். வேலை முடிந்து களைப்புடன் விரையும் ஜனக்கூட்டத்திற்குள் கம்பீரமாகத் தனித்துத் தெரியும் அப்பாவின் உருவம்... அந்த நடை.. இவற்றைத் தேடி அவள் விழிகள் பரபரப்புடன் அலைபாயும் போது அவளுக்கு வயது ஏழு. அப்போது தான் அவள் முதன் முதலாகக் காத்திருக்கப் பழகியிருக்க வேண்டும். அப்பாவும் இவளும் ஒரு பக்கம். . அம்மா இன்னொரு பக்கம் ஊரில். இனக்கல வரங்களால் ஏற்பட்ட பிரிவு. அப்போ தெல்லாம் எப்போது பாடசாலை விடுமுறை வரும், அம்மாவிடம் போகலாம். என்று நாட்களை எண்ணி ஏங்குவதே அவளுக்கு வழக்கமாக இருந்தது. அந்தப் பிஞ்சு வயதிலேயே காத்திருப்பதன் வலியை உணர வேண்டிய கட்டாயம்.

அப்போதெல்லாம் அவள் கொஞ்சம் முகம் மாறினால் கூட அவளை உற்சாகப்படுத்தும் நோக்கில், சந்தியாக்குஞ்சு.. அம்மாவிடம் ஊருக்குப்போக எத்தனை நாள் இருக்கு.....? .என்று அப்பா கேட்க, ஓடோடிப் போய் அவள் நாட்காட்டியைக் கொண்டு வருவாள். இது வழக்கமாக நிகழ்வது தான். அதனால் இருவருக்குமே நாட்கணக்கு தெரிந்தே இருந்தது. இருந்தாலும் காத்திருக்கும் காலங்களை இப்படித் தானே கொண்டாட முடிகிறது.

அதன் பின் பரீட்சைகள்.. விடுமுறைகள்... பயணங்கள்.. திருமணத்திற்காக... தாயாக, குழந்தைகளுக்காக... வெளி நாடு வருவதற்காக... வதிவிட உரிமைக்காக... என்று எது எதற்கோ காத்திருந்தாகிவிட்டது.

இப்போது ......

கணவன் வரும் வரை காத்திருக்கிறாள். காத்திருப்பது என்பது இப்படி எல்லாருக்குமே பொதுவானதொன்று தானா...? இல்லையேல் தனக்கு மட்டும் தான் இப்படியா..?. அசுர வேகத்தில் சுழலும் இன்றைய உலகத்தில் காத் திருப்பதும், காத்திருக்க வேண்டியிருப்பதும் சாத்தியமற்றதொன்றாகவே தெரிகிறது.

காதலர்கள் தம் காதலுக்காக வாழ்நாள் பூராவும் காத்திருக்கத் தயார் என்கிறார்களே... காத்தி ருந்தே காலம் போய் விட்டால் வாழ்வது எப் போது..? காத்திருக்க வேண்டிய அப்படி அவசியம் வந்து விட்டது..? ஆண்களுக்கும், பெண் களுக்கும் உலகத்தில் அப்படி என்ன பஞ்சம் வந்துவிட்டதா என்ன...!

ஒரு காதலுக் காகக் காத் திருக்கும் காலத்தில் இரண்டு தலைமுறையைக் கண்டு விடலாமே.!

ஒரு விஷயத்திற்காக காத்திருக்கும் போது நம்மை அறியாமலேயே அதன் முக்கியத்துவம் அதிகரிக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக அந்த எண்ணங்களே மனதை ஆக்கிரமித்துக் கொண்டு வேறு சிந்தனைகளுக்கே இடம் கொடுக்காமல் மூளையை மழுங்கடித்து விடுகிறது. வாழ்வின் திரும்பப் பெற முடியாத அத்தியாயங்களை அனாயாசமாய்க் கடந்து போகச் செய்கிறது.

இதோ அவளது குழந்தைகள் கண் சிமிட்டும் நேரத்திற்குள் வளர்ந்து நிற்கப் போகின்றன. அவர்களுக்குத் தாயாக, தந்தையாக மட்டுமன்றி, பாட்டியாய், தாத்தாவாய், மாமன்களாய், அத்தைகளாய்... எல்லா உறவுகளுமாய் அவள் மட்டுமே இருந்தாக வேண்டியிருக்கிறது. வேணு வந்தாலும் அவளது சுமைகள் குறையுமா என்பது சந்தேகம் தான். அவன் வரும் போது பார்த்துக் கொள்ளலாம். காத்திருக்கும் காலத்தை அவள் வீணடிக்கப் போவதில்லை. இனிமேலும் குழந்தை களை ஏங்க விடாமல் கவனம் முழுவதையும் அவர்களை சந்தோஷமானதொரு சூழ்நிலையில் வளர்ப்பதிலே செலுத்த வேண்டும், நினைத்துக் கொண்டே நெடுஞ்சாலைக்குள் நுழைய...

ஐ..யோ.... என்ன நடக்கிறது...? பேரிரைச்சல்.. உயரமாய்.. எங்கோ எழுந்து......... விழுமாற்போல்.... உச்சியில் ஏதோ விண்ண்ண்........ நிசப்தம்.

அவள் காத்திராமலே அவளுக்குக் கிடைத்தது- யாருக்காகவும் காத்திராதது- மரணம்.

BCN·TRAVELS
Consulting Network
Travels·Business·Worldwide
Offnungsziten:
Mo-Sa.10.00- 20.00 uhr
கோடைகால விடுமுறைக்குரிய விமானச்சிட்டைகள் முற்பதிவு ஆரம்பமாகிவிட்டது.
இலங்கை, இந்தியா, கனடா உட்பட அனைத்து நாடுகளுக்கும் சலுகை விலையில் விமானச்சீட்டுக்களை பெற்றுத்தருகின்றோம்.
- நம்பிக்கையும் நாணயமும் சலுகையும் ஒரே இடத்தில் -
இந்தியா செல்வதற்கான விசாவினைப் பெறுவதற்குரிய ஒழுங்குகளும் செய்து தரப்படும்
தொடர்புகளுக்கு:
BCN Travels // Consulting Network (TBW) UG // Inh. Rasan Sivalingam // Adler Str. 30, 44137 Dortmund
Tel.: 0231-10876361, 0231-98539416 // Fax: 0231-10876362 // Mobile: 0163-8714369
Öffnungszeiten: Mo-Sa 10:00-20:00 Uhr // Email: bcntravels@hotmail.de, Web: www.bcnugonline.com
எமது இன்னுமொரு சேவை!
நீங்கள் வீடு கட்ட அல்லது வீடு வாங்க முடிவெடுத்து விட்டீர்களா ?
உங்களுடைய காப்புறுதிகள் அனைத்தும் அதி உச்ச நலன்களை தருபவையாகச் செய்துள்ளீர்களா ?
கூடிய கடனா ? அதிகளவு வட்டியா ? அல்லது இரண்டுமா ?
கேள்விகள் உண்டா ?
தொடர்புகளுக்கு: Tel.: 0231-10876361
0231-58988630
Hamm ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழா அன்று (06.07.2014 Sunday) GTV இன் தகவல் மையம் அங்கு அமைக்கப்பட்டிருக்கும்

## அடுப்படி





# புரோக்கோலி மசால் தோசை



**தேவையானப்பொருட்கள்:**

தோசை மாவு - 1 கிண்ணம்
புரோக்கோலி - 1
வெங்காயம் - 1
தக்காளி - 2
பூண்டுப்பற்கள் (சிறிய அளவு) - 3 அல்லது 4
இஞ்சி - ஒரு சிறு துண்டு
சோம்பு - 1 டீஸ்பூன்
சீரகம் - 1 டீஸ்பூன்
முந்திரிப்பருப்பு - 5 அல்லது 6
சாம்பார் பொடி - 2 டீஸ்பூன்
மஞ்சள் தூள் - சிட்டிகை
எண்ணை - 1 டேபிள்ஸ்பூன்
உப்பு - 1 டீஸ்பூன் அல்லது தேவைக்கேற்றவாறு



புரக்கோலி மசாலா

**செய்முறை:**

மசாலா தயாரிக்க:
புரோக்கோலியின் பூவை தனியாக எடுத்து நடுத்தர அளவு துண்டுகளாக நீளவாக்கில் வெட்டிக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் 4 அல்லது 5 கப் தண்ணீரை கொதிக்க வைத்து, சிறிது உப்பைச் சேர்த்து புரோக்கோலி துண்டுகளைப் போட்டு ஓரிரு வினாடிகள் கொதிக்க விட்டு, உடனே எடுத்து தனியாக வைக்கவும்.
வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். இஞ்சி, பூண்டு ஆகியவற்றை பொடியாக நறுக்கிக் கொள்ளவும் அல்லது இடித்துக் கொள்ளவும்.
தக்காளியை கொதிக்கும் நீரில் போட்டு சில நிமிடங்கள் கொதிக்க விட்டு எடுத்து, சற்று ஆறியதும், தோலை உரித்து விட்டு மிக்ஸியில் போட்டு விழுதாக அரைத்துக் கொள்ளவும்.
முந்திரிப்பருப்பை சிறிது தண்ணீர் சேர்த்து விழுதாக அரைத்தெடுக்கவும்.

ஒரு வாணலியை அடுப்பிலேற்றி, எண்ணை விட்டு காய்ந்ததும் சீரகம், சோம்பு ஆகியவற்றைப் போடவும். சீரகம் பொரிந்ததும் இஞ்சி, பூண்டு சேர்த்து சற்று வதக்கி, அதன் பின் வெங்காயத்தையும் சேர்த்து சிவக்க வதக்கவும். பின்னர் அதில் தக்காளி விழுதைச் சேர்த்து, அத்துடன் சாம்பார் பொடி, மஞ்சள் தூள், உப்பு போட்டு கிளறிவிடவும்.



சில வினாடிகள் வரை கிளறி விட்டு அதில் முந்திரி விழுதைச் சேர்த்துக் கிளறவும். பின்னர் அதில் புரக்கோலியைப் போட்டு, சிறிது தண்ணீரைத் தெளித்து, மூடி போட்டு மிதமான தீயில் வேக விடவும். புரக்கோலி வெந்து மசாலா கெட்டியான தும் இறக்கி வைக்கவும்.

**தோசை தயாரிக்க:**
தோசைக்கல்லை அடுப்பிலேற்றி, எண்ணை தடவி, கல் சூடானதும் ஒரு பெரிய கரண்டி தோசை மாவை ஊற்றி மெல்லியதாக பரப்பி விடவும். ஒரு டீஸ்பூன் எண்ணையை தோசையைச் சுற்றி ஊற்றி வேக விடவும். ஒரு புறம் சிவக்க வெந்ததும், தோசையின் நடுவில் ஒரு டேபிள்ஸ்பூன் மசாலாவை வைத்து, தோசையின் இரண்டு முனையையும் மடித்து விட்டு, திருப்பிப் போட்டு சில வினாடிகள் வேக விட்டு எடுக்கவும். சட்னி.்.சாம்பாருடன் பறிமாறவும்.கவனிக்க: இந்த புரக்கோலி மசாலாவை சப்பாத்தி, பூரி போன்றவற்றுடனும் சேர்த்து சாப்பிடலாம்.

## நெத்தலி சீனிச்சம்பல்

**தேவையான பொருட்கள்**
தலை நீக்கிய காய்ந்த சிறிய நெத்தலி- 200கிராம் பெரும் வெங்காயம்-2 செத்தல் மிளகாய் (நொறுக்கியது) 1 மேசைக் கரண்டி நல்லெண்ணெய் வதக்க போதுமானது முக்கிய குறிப்பு உப்பு தேவைப்படாது விரும்பினால் சேர்க்கவும்

**செய்யும் முறை**
ஒரு பாத்திரத்தில் நெத்தலிக்கு அளவான தண்ணீர் விட்டு ஒரு கொதி வந்ததும் பிரட்டி வடித்து ஆறியபின் மண்போக நன்றாக கழுவி வடிந்ததும் ஒரு கிச்சன் பேப்பரில் *(kitchen paper)* இல் ஒரு பத்து நிமிடம் பரவிவிடவும்.
வெங்காயத்தை மெல்லியதாக நீளமாக வெட்ட வும், தக்காளியையும் உள் சதையுடன் உள்ள விதையையும் நீக்கிய பின், மெல்லியதாக நீளமாக வெட்டியபின், ஒரு அகன்ற பாத்திரத்தில் போதுமான எண்ணெய் விட்டு மெல்லிய தீயில் லேசாக நெத்தலியை போட்டு வதக்கவும், சிறிது வதங்கியதும், வெங்காயம், இஞ்சி, பூண்டு விழுது, நொறுக்கிய மிளகாய் எல்லாவற்றையும் சேர்த்து பிரட்டி பொரிய விடவும். வெங்காயம் வதங்கி வந்ததும் கடைசியாக தயிரையும் சேர்த்து பிரட்டி தயிர் வாசனை போன பின் இறக்கிவிடவும்.

**புவனம் தர்மரட்ணம்**






# குழந்தைகள் பாலியல் கொடுமை தடுப்பது எப்படி?



**Dr. புஷ்பா கனகரட்ணம்**
Ph.D., C. Psych.Clinical Psychologist

குழந்தைகளுக்கு துன்பம் விளைவிப்பதை பலராலும் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை. நம் குழந்தைகள் எமக்கு கிடைத்த மிகப்பெரும் கொடை. அத்தோடுஇ அவர்கள் நம் பொறுப்பு அல்லவா? பாலியல் துஷ்பிரயோகத்திற்கு அவர்கள் ஆளாவது என்பது எம்மால் ஜீரணிக்க முடியாத ஒன்று. இருந்தும் இந்த கொடுமை நடந்துகொண்டு தான் இருக்கிறது. எம் சமூகம் இதற்கு விதிவிலக்கே அல்ல என்பதும் கண்கூடு.
சிறார் பாலியல் துஷ்பிரயோகம் என்பது, வயதில் கூடிய அல்லது கூடுதல் பலம், அதிகாரம் உள்ள ஒருவர் பாலியல் விருப்பத்திற்காக சிறுவரை பயன் படுத்திக்கொள்வதாகும். பாலியல் துஷ்பிரயோகம் நீண்ட கால வடுவாக எம் வருங்கால சந்ததியை தாக்குகிறது. இது ஒரு பாரிய சமூக பிரச்சனை. இதனை எப்படி அடையாளம் காணலாம்? எப்படி தடுக்கலாம்?
78%மான சந்தர்ப்பங்களில் குழந்தையை பாலியல் துஷ்பிரயோகம் செய்த நபர் குடும்பத்திற்கு தெரிந்தவராகவே இருக்கிறார். வயதுவந்தவர்கள் எப்படி எல்லாம் பிள்ளைகளை தம் பாலியல்வலைக்குள் விழுத்துகிறார்கள் என்று எமக்கு தெரிந்திருந்தால், இந்த பெரும் கொடுமையை தடுக்க இந்த அறிவு உதவலாம்.
துஷ்பிரயோகம் செய்பவர் அணுகுமுறை மூன்று காரணிகள் சார்ந்து அமைகிறது. துஷ்பிரயோகம் செய்பவர் குணாதிசயம், பிள்ளைகள் குணாதிசயம், மற்றும் தந்திரமாக தன் இடவமைப்பை ஏற்படுத்தி கொள்வது.

துஷ்பிரயோகம் செய்பவர், குழந்தையின் நம்பிக்கைக்கு பாத்திரமாக வேண்டும். முதன்முதலில் அந்த நம்பிக்கையை வளர்ப்பது தான், பாலியல் ரீதியான தொடர்பாடலுக்கு அனுகூலமானதாக இருக்கும். ஆய்வுகளின்படி, துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்கள் பொதுவாக தன்னம்பிக்கை குறைந்தவர களாகவும், தொடர்பாடல் குறைபாடுகள் உள்ளவர்களாகவும், உறவுகளை அமைத்துக்கொள்வதில் பிரச்சனையுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

ஆனாலும் இவர்களால் பிள்ளைகள் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய ஒரு போலி முகத்தை அணியமுடிகிறது. இதில் பிள்ளைகள் மயங்கிவிடுகிறார்கள். பிள்ளைகள் இவர்களை நம்பிக்கையானவர்களாக, மற்றும் குதூகலமா னவர்களாக கருதுவதால், அவர்கள் குடும்பம் ஏமாந்துவிடுகிறது. ஒரு துஷ்பிரயோகி சொன்னது போல், ”மரியாதைக்குரிய ஒரு நபராக நீங்கள் தோற்றமளித்தால், உங்களை ஒரு அபாயமான வேற்றாளாக அவர்கள் (பாதிக்கப்பட்டவர்கள்) கருதுவதில்லை.” அத்தோடு, துஷ்பிரயோகம் செய்யும் இளமையான நபர்களில் 75% மானவர்கள் தம் பெற்றோரோடு உறவுமுறை பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். உடல்ரீதியான மற்றும் பாலியல்ரீதி யான வன்முறைக்கு இவர்களே ஆளாகியிருக்கிறார்கள்.

துரதிருஷ்டவசமாக, துஷ்பிரயோகம் செய்பவர்கள் வாக்குமூலப்படி, எந்த பிள்ளைகள் “நல்ல இலக்கு” என கண்டுபிடிப்பது இவர்களுக்கு மிகவும் இலகுவாக இருக்கிறது. மூன்று விதமாக இந்த பிள்ளைகளை அடையாளம் காண்கிறார்கள்: ஆளுமை மற்றும் உணர்வுநிலை காரணிகள், பழக்கவழக்கங்கள், அத்தோடு சீரற்று இயங்கும் குடும்பங்களில் இருந்து வரும் பிள்ளைகள். தம்மை பற்றிய நல்லபிப்பிராயம் இல்லாத மற்றும் தன்னம்பிக்கை குறைந்த பிள்ளைகளை, இலகுவாக தனிமைப்படுத்த முடிகிறது.

உணர்வுரீதியாக நம்பிக்கை குறைந்தவர்களாகவும், தேவை மிகுந்தவர் களாகவும், ஆதரவு குறைந்தவர்களாகவும் இருக்கும் பிள்ளைகள், கூடுதலாக குடும்ப பிணைப்பு, நண்பர்கள் என்ற வட்டம் என்பன இல்லாதவர்களாக இருப்பதால், இவர்களை தனிமைப்படுத்துவது இலகுவாக இருக்கிறது. அன்புக்கு ஏங்கும் இப்படியான பிள்ளைகள் துஷ்பிரயோகிகள் விரிக்கும் ”அன்பு வலையில்” இலகுவில் விழுந்துவிடுகிறார்கள். தமக்கு தெரியாமலேயே, இந்த பிள்ளைகள், துஷ்பிரயோகிகளை கவரும் விதத்தில் நடந்து கொள்கிறார்கள். மற்ற பிள்ளைகளை விட துஷ்பிரயோகிகளுடன் அதீத நட்பு பாராட்டுகிறார்கள்.
வெகுளித்தன்மை இன்னொரு குணாதிசயமாகும். தம்மை பாலியல் துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்பது இவர்களுக்கு புரியாமலேயே போய்விடுகிறது. பாலியல் நோக்கத்தில் அணுகும் ஒரு அந்நிய மனிதரை தடுக்கும் தன்மை இந்த பிள்ளைகளுக்கு இருந்தாலும், அதிகார நிலையில் இருக்கும் தெரிந்த நபர் செய்யும் துஷ்பிரயோக முயற்சிகளை கேள்வி கேட்காமலேயே விட்டுவிடுவார்கள். ஏனென்றால், அந்நியர்களோடு சேராதே என நாம் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுத்திருக்கிறோம். அதே நேரம், நம்பிக்கைக்குரிய பெரியவர்களோடு கீழ்படிவாக மரியாதையாக இருக்கத் தானே நாம் சொல்லிக்கொடுக்கிறோம்.
சீரற்று இயங்கும் குடும்பங்களில் உளநல பிரச்சனைகள், வன்முறை, பெற்றோருக்கிடையில் பிணக்கம், மது மற்றும் போதைபொருள் பாவனை என பல சிக்கல்கள் நிலவுகின்றன. பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் உணர்வுரீதியான இடைவெளி இருக்கும் இந்த குடும்பங்கள், பாலியல் துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு ஒரு இலக்காக அமைகிறது.

பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இருக்கும் பிளவுகளை தமக்கு சாதாகமாக துஷ்பிரயோகிகள் பாவித்து கொள்கிறார்கள். அதீத அழுத்தங்களில் இருக்கும் பெற்றோர்கள் துஷ்பிரயோகி என்று தெரியாமல், பிள்ளையை துஷ்பிர யோகியின் கண்காணிப்பில் விட்டுவிடுவதை பாரம் குறைந்தது போல் உணரலாம். பிள்ளையில் பெற்றோருக்கு இருக்கும் கவனக்குறைவு, நிச்சய மாக துஷ்பிரயோகிக்கு சாதகமானதே.

தந்திரமாக தம்மை நிலைப்படுத்திக்கொள்வது என்பது இரண்டுவிதமாக அமையலாம். ஒன்று உடனடி தேவையை பூர்த்தி செய்வது. இது பிள்ளைகள் போய்வரும் விளையாட்டு திடல்கள், mall, ஒய்வு அறைகள் (restrooms) போன்ற இடங்களில் நேரத்தை செலவழிக்கும் துஷ்பிரயோகிகள். தொலை நோக்கோடு செயல்படுபவர்கள், அதற்கு பொருத்தமான வேலைகளை தேர்ந்தெடுக்கலாம்.



உதாரணமாக, ஆசிரியர்கள், விளையாட்டு குழு பயிற்சியாளர்கள், பாடசாலை பேருந்து ஓட்டுனர்கள். மற்றும் மதிப்பிற்குரிய மதத் தலைவர்கள் போன்ற தொழில்களாகும். சமய நிர்வாகங்கள், குழந்தைகள் பாலியல் துஷ்பிரயோகத்தில் ”பேர்போனவை”. குழந்தைகளின் அருகாமையையும், நம்பிக்கையையும் நீண்ட காலம் வளர்த்து தம் இரையை பெற ஒரு ஆழமான அத்திவாரத்தை துஷ்பிரயோகிகள் தம் தொழில் மூலம் அமைத்துக் கொள் கிறார்கள்.

பிள்ளையை பாலியல் நோக்கில் தயார் செய்தல் என்பது அடுத்த கட்டம். இது பிள்ளையை பாலியல் ரீதியான தொடர்பாடலுக்கு பழக்கப்படுத்தும். உதார ணமாக, குழந்தை ஆடை மாற்றும்போது கட்டிலில் இருந்து பார்ப்பது, தற்செயலாக நடப்பது போல் தகாத முறையில் தொடுவது, குழந்தைகளின் நிர்வாண படங்களை காட்டுவது, அல்லது பாலியல் தன்மையான விடயங்களை இணைத்து விளையாட்டுகளில் ஈடுபடுவது போன்றனவாக இருக்கலாம். தயார்படுத்தலில் இன்னொரு வழிமுறை, பாலியல் உறவின் விளக்கத்தையே மாற்றுவது தான்.

தொடர்ச்சி 26ம் பக்கம்







# பிரபலங்களின் இறுதி வசனங்கள்!

**காந்தி:** இறக்கும்போது " ஹே ராம் ! " என்றார்

**ஜூலியஸ் சீஸர்** " யூ டு புருட்டஸ் ? " என்றார் .

**கலிகுலா** (ரோம் ராஜ்ஜியத்தின் கொடுங் கோலன் ) :தன்னைக் கத்தியால் குத்திய பாதுகாவலர் களிடம் சொன்னான், " நான் இன்னும் இறக்க வில்லை ! "

**தாமஸ் ஆல்வா எடிசன்** : " விளக்கை எரிய விடுங்கள் . என் ஆவி பிரியும்போது வெளிச்சம் இருக்கட்டும் ! "

**பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்** : " இறக்கும் மனிதனால் எதையும் எளிதாகச் செய்ய முடியாது ! "

**பாபர்** ( மொகலாயப் பேரரசர் ) : தன் மகன் "ஹுமாயூனிடம் .... " இந்தியாவில் உள்ள இந்துக் களைத் துன்புறுத்தாதே ! "

**ஜுல்ஃபிகர் அலி புட்டோ** ( பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ): இறைவா .....நான் ஒரு குற்றமும் செய்யாதவன் ! "

**டயானா**: கடவுளே ! என்ன நடந்தது எனக்கு? "

**ஜொன் ஆஃப் ஆர்க்** ( பிரெஞ்சுப் புரட்சியாளர் ): தீயில் எரிந்துகொண்டு இருந்த சமயத்தில் சொன்னது . " ஜீஸஸ் ! "

**வால்டேர்** : தூக்கு தண்டனைக்கு முன் " சாத்தானை உன்னிடம் இருந்து துரத்திவிடு " என்று சொன்ன பாதிரியாரிடம் , "எதிரிகளை உருவாக்கிக் கொள்வதற்கான நேரம் இது அல்ல ! "

**கிளியோபாட்ரா** : பூ நாகத்தைக் கையில் பிடித்துக் கொண்டு , ஆஹா... இதோ ... என் முடிவு இங்கே இருக்கிறது ! "

**பீத்தோவன்** : நண்பர்களே கை தட்டுங்கள்... இந்த நகைச்சுவை நாடகம் இன்றோடு முடியப்போகிறது !

**ஆன்** ( இங்கிலாந்து ராணி )' தன் உதவியாளரிடம் ," மக்களின் நன்மைக்காக கருவூலப் பணத்தை பயன்படுத்துங்கள் ! "

**நெப்போலியன்:** .ஃபிரான்ஸ் ஆர்மி... ஜோஸ.ஃபின் !

**மேரி க்யூரி** : " என்னைத் தனிமையில் இருக்க விடுங்கள் ! "


**எழுத்தாளர் ஜேன் ஆஸ்டஸ்** : " வேறு எதுவும் வேண்டுமா " என்று கேட்ட தங்கையிடம் , " இறப்பைத் தவிர எதுவும்

**வின்ஸ்டன் சர்ச்சில்** : " எனக்கு எல்லாமே போர் அடிக்குது ! " இந்த வார்த்தைகளுக்குப் பின் கோமா வுக்குச் சென்று , ஒன்பது நாட்களுக்குப் பின் மரணத்தைத் தழுவினார் .

**பெருந்தலைவர் காமராஜர்** : தன் உதவி யாளரிடம்,வைரவா ! விளக்கை அணைத் துவிடு !

25ம் பக்கத் தொடர்ச்சி

## குழந்தைகள் பாலியல் கொடுமை...



இந்த உறவு அவர்கள் வளர்ந்ததும் பாலியல் அறிவில் முதிர்ச்சியும் தேர்ச்சியும் பெற உதவும் என துஷ்பிரயோகிகள் பிள்ளைகளிடம் சொல்லகூடும். அல்லது குழந்தையிலேயே உறவு கொள்வதால், அவர்கள் உடல் சீக்கிரமாகவே பருவத் திற்கு வரும் என்று விளக்கம் கொடுப்பார்கள்.

பாலியல் உறவு என்பது தவறானதல்ல, ஒரு வினோதமான விடயம், விளை யாட்டான விடயம் எனவெல்லாம் விளக்கம் கொடுக்கலாம். இந்த விளக்கங்களை பிள்ளைகள் நம்பிவிடுவார்கள்.

குழந்தைகளை தனிமைப்படுத்துதல் அடுத்த கட்டம். இப்படி தயார்படுத்தும் வேளை, குழந்தைகளை புறத்திலும், மனரீதியாகவும், தம் குடும்பம் மற்றும் நண்பர்களிடம் இருந்து வேறுபடுத்தி தனிமைப்படுத்துவது இன்னொரு உத்தியாகும். பிள்ளையை பராமரிக்க துஷ்பிரயோகி முன்வரலாம். வாகனத்தில் ஏற்றிக்கொண்டுபோய் விடுவதாக சொல்லலாம். குடும்பம், நண்பர்கள் என்று இறுக்கமான பிணைப்பு இல்லாத பிள்ளைகளை இந்த காரணத்தை பாவித்தே தனிமைப்படுத்தலாம். இப்படியான தனிமைப் படுத்தல், பிள்ளையை மேலும் மேலும் துஷ்பிரயோகம் செய்பவரில் தங்கியிருக்கும் தன்மையை ஏற்படுத்தும்.

மூன்றாவது உத்தி தான் முதல் முதல் ஏற்படுத்தும் பேச்சு அல்லது உடல்ரீதியான தொடர்பு. உதாரணமாக, பாலியல் ரீதியான விளையாட்டுகளில் ஈடுபடலாம் என யோசனை கூறுவதுஇ குழந்தைக்கு உடல் தேய்த்து குளிப்பாட்டுவது அல்லது உடைமாற்றி விடுவது, உடல்தொடர்பு அதிகமான விளையாட்டுகளில் ஈடுபடுவது.

தொடர்பு ஏற்பட்டுவிட்டாலோஇ அதை துண்டித்துகொள்வது குழந்தைகளுக்கு முடியாத காரணமாகிவிடுகிறது. ஆய்வுகளின்படி பார்க்கையில், குழந்தைகள் காட்டும் எதிர்ப்பு பலனளிக்காமல் போய்விடுகிறது. உதாரணமாக, மதத் தலைவர்கள் என்று பார்த்தால், சமய நம்பிக்கை, சாமி குற்றம் என பல காரணங்கள் துஷ்பிரயோகிகளால் பாவிக்கப்படுகிறது. அல்லதுஇ வெளியில் சொன்னால் அவர்களை யாரும் நம்ப மாட்டார்கள் என்ற அபிப்பிராயத்தை துஷ்பிரயோகி பிள்ளைகளில் ஏற்படுத்துவார். சொன்னால், அவர்கள் அன்புக் குரியவர்களை கொன்றுவிடுவதாகவோ, பாதிப்புக் குள்ளாக்குவதாகவோ சொல்லி பயமுறுத்தி வைத்திருப்பார்கள். உண்மையை சொன்னால் அவர்கள் குடும்பம் பிளவு பட்டுவிடும் என சொல்லி தடுக்க முயற்சி செய்வார்கள், அல்லது நடந்த பிழைக்கு அவர்கள் தான் காரணம் என பிள்ளையின் மனதில் பிழையான குற்ற உணர்வை உருவாக்கிவிடுவார்கள். பிள்ளைகள் எதிர்ப்பு தெரிவிக்க ஆரம்பிக்கும் போது, துஷ்பிரயோகி கடுமையாக மாறி, பிள்ளைகளுக்கு இன்னும் அழுத்தமும் உயிராபத்தும் விளைவிக்க முயற்சி செய்யலாம்.

படிப்படியான நீண்ட கால திட்டத்தோடு துஷ்பிரயோகியால் நடத்தப்படும் இந்த வன்முறைஇ மற்றும் அதிகார சமமின்மை, அதாவது, குழந்தையைவிட பலத்திலும், அதிகாரத்திலும், வயதிலும் கூடியவராக இருக்கும் துஷ்பிரயோகிஇ என்ற காரணங்களால், பாலியல் துஷ்பிரயோக வலையில் விழுந்துவிட்டால், குழந்தைகளால் மீள்வது என்பது மகா கடினம் தான்.



# சிந்துவெளியில் இன்றும் உள்ள தமிழ் ஊர்ப் பெயர்கள்!

**(ஆர்.பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்.)**

1980களில், ஒரிசாவில் நான் பார்த்த ஒரு ஊரின் பெயர்ப் பலகை என்னை தடுத்து நிறுத்தியது. அந்த பெயர் 'தமிழி'. குவி என்கிற திராவிட மொழி பேசும் பழங்குடிகள் வசிக்கும் அந்த ஊருக்குள் என் கால்கள் என்னையும் அறியாமல் சென்றன.

அதிலிருந்து ஊர்ப் பெயர்கள் மீது காதல் கொண்டேன். எங்கு மாறுதலாகிச் சென்றாலும் ஊர்ப் பெயர்கள் அடங்கிய மக்கள்தொகை கணக்கெடுப்புப் புத்தகங்களைத் தூக்கிச் சென்றேன்.மானுட வரலாறு என்பது பயணங்களால், இடப் பெயர்வுகளால் ஆனது. மனிதன் ஒரு ஊரை விட்டு இடம்பெயரும்போது, அவனது நினைவுகளைச் சுமந்து செல்கிறான். புதிய இடத்தில் குடியேறும்போது, பழைமையுடன் தொடர்புகொள்ளும் விதத்தில் தன் ஊர்ப் பெயரை அங்கே வைக்கிறான்.

இது ஒரு பாதுகாப்பு உணர்வைத் தருகிற சமூக உளவியல். அப்படி அவன் விட்டுச் சென்ற ஊர்ப்பெயர்களும், சுமந்து சென்ற ஊர்ப் பெயர்களும் சொல்வது மனித குலத்தின் வரலாறு.ஈரானில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள ஏராளமான ஊர்ப் பெயர்கள், அப்படியே ஒரிசாவில் கொனார்க்கில் உள்ள சூரியக்கோயிலைச் சுற்றியுள்ள ஊர்களில் இருப்பதைக் கண்டேன். இதன் சாத்தியம் என்னை ஆச்சரியப்படுத்தியது.பின்னர், தமிழ்நாடு கேரள எல்லையில் உள்ள இடுக்கி, பழனி, குமுளி, தேனி, தேக்கடி, கம்பம், போடி போன்ற ஊர்ப் பெயர்கள், மத்தியப்பிரதேசம் மற்றும் வடமாநிலங்களில் இருப்பதைக் கண்டேன்.இன்னொரு ஆச்சரியமான விஷயம் .

ஒரிசாவுக்கும் நைஜீரியாவுக்கும் உள்ள ஒற்றுமை. ஒரிசா ஆந்திர எல்லையில் உள்ள கொராபுட் மாவட்டத்தில் உள்ள சுமார் 463 ஊர்களின் பெயர்கள் அப்படியே நைஜீரியாவில் உள்ளன.

ஆதிமனிதன் முதன்முதலில் ஆப்பிரிக்காவில் தோன்றினான் என்றும், பின்னர் அங்கிருந்து பிற பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தான் என்றும் இன்றைக்கு நவீன மரபியல் ஆய்வுகள் சொல்வது, இந்த இடப் பெயர்வுடன் பெரிதும் பொருந்துகிறது. இது பற்றிய எனது கட்டுரை உலக அளவில் பலராலும் எடுத்தாளப்படுகிறது.

சுமார் 9ஆண்டுகளுக்கு முன், ஒரு நாள் இரவு. சிந்து சமவெளி நாகரிகம் கண்டெடுக்கப்பட்ட பகுதியில் (தற்போதைய பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், கிழக்கு ஈரான் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதியில்) உள்ள பல்வேறு ஊர்களின் பெயர்களை கணினியில் சேமித்து, அவற்றில் தமிழகத்தின் பழங்கால ஊர்ப்பெயர்கள் ஏதேனும் இருக்குமா என்று தேடிக்கொண்டிருந்தேன்.நான் முதலில் தேடிய பெயர் 'கொற்கை'. ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் 'கொற்கை' என்ற பெயரில் ஊர்ப்பெயர் இருக்கிறது என்றது கணினி.

முதலில் இதை ஒரு விபத்து என்றே கருதினேன்.அடுத்து 'வஞ்சி' என்ற ஊர்ப்பெயரைத் தேடினேன். அதுவும் அங்கே இருந்தது. எனக்குள் சுவாரஸ்யம் பெருகிற்று.தொண்டி, முசிறி, மதிரை(மதுரை), பூம்புகார், கோவலன், கண்ணகி, உறை, நாடு, ப.்ருளி… என பழந்தமிழ் இலக்கியத்தில் வரும் பெயர்களை உள்ளிட்டுக் கொண்டே இருந்தேன்.

நூற்றுக்கும் மேற்பட்ட அத்தகைய பெயர்கள் இப்போதும் பாகிஸ்தானில், ஆப்கானிஸ்தானில் இருப்பதை கணினி காட்டிக் கொண்டே இருந்தது…4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக செழித்து விளங்கி, பின் காணாமல் போன சிந்து சமவெளி நாகரிகம், 1924-ல் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த நாகரிகம் விளங்கிய இடத்தில் வாழ்ந்த மக்கள் யார்? அவர்கள் என்ன மொழி பேசினார்கள்?
ஏன் அந்த நாகரிகம் மண்ணோடு மண்ணானது?
யாருக்கும் தெரியாது.




ஆனால், அந்த நாகரிகம் விளங்கிய பகுதிகளில் இருக்கும் ஊர்கள் இன்றும் தமிழ்ப் பெயர்களை தாங்கி நிற்கின்றன.எனில், சிந்துவெளி நாகரிகம் விட்ட இடமும், சங்கத் தமிழ்ப் பண்பாடு தொட்ட இடமும் ஒன்றுதான்.

சுமார் 4ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சிந்துவெளிப் பண்பாடு அழிந்தது. தமிழகத்தில் கிடைத்துள்ள அகழாராய்வு முடிவில் கி.மு.800 வரையிலான சான்றுகள் கிடைத்துள்ளன. அதற்கு முந்தைய ஒரு 1000 ஆண்டுகள் இடைவெளியை பின்னோக்கி ஆய்வுகள் மூலம் சென்று நிரப்பினால் சிந்துவெளிப் புதிரை அவிழ்த்து விடலாம்.பழந்தமிழர் வாழ்வுடன் தொடர்புடைய அவர்களின் தொன்மங்களுடன் தொடர்புடைய பெயர்கள் இன்று சிந்துவெளியில் கிடைத்திருப்பது ஏதோ விபத்தால் நிகழ்ந்தது அல்ல என்றே கருதுகிறேன். கிடைத்திருப்பது ஓர் ஊர்ப்பெயர் மட்டுமல்ல் சங்க இலக்கியத்தில் உள்ள அவ்வளவு பெயர்களும் அங்கு இருக்கின்றன. (வரைபடத்தைக் காண்க.) இடப்பெயர்வு நடந்திருக்கலாம். அங்கிருந்து இங்கு மனிதர்கள் புலம்பெயர்ந்து வந்திருக்கலாம். கொஞ்சம் பேர் அங்கிருந்து புலம் பெயர்ந்த பின், மிச்சம் இருந்தவர்கள் அங்கே வந்தவர்களுடன் கலந்து தங்கள் மொழியை, தனி அடையாளங்களை இழந்திருக்கலாம். ஆனாலும் இன்னமும் அந்த ஊர்ப்பெயர்கள் மட்டும் தப்பிப் பிழைத்திருப்பதாக வைத்துக் கொள்ளலாம். அங்கிருந்து கிளம்பி வந்தவர்கள் புதிதாக குடியேறிய இடத்தில் பழைய நினைவுகளை தங்கள் ஊர்ப்பெயர்களாக வைத்திருக்கலாம்.

கொற்கை, வஞ்சி, தொண்டி, காஞ்சி எல்லாமே இப்படி இருக்கலாம்.சங்ககாலப் புலவர்கள் சமகால நிகழ்வுகளை மட்டும் இலக்கியத்தில் பதிவு செய்யவில்லை. அவர்களது காலத்திற்கு முற்பட்ட காலத்து பழைய நிகழ்வுகளையும் வாய்மொழி மரபுகளையும் தங்களது பாடல்களில் பதிவு செய்துள்ளார்கள். அவை வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ்கூறும் நல்லுலகம் என்கிற பரப்புக்குள் தமிழர் இருப்பைச் சொல்கிறவை மட்டுமல்ல. அவை சொல்லும் தொன்மங்கள் இந்த எல்லையைக் கடந்தவை.

சங்க இலக்கியத்தில் "வான் தோய் இமயத்து கவரி" என்று வரும். கவரி என்பது இமயத்தின் உச்சியில் திபெத் பக்கமாக வாழும் யாக் என்கிற விலங்கு. இந்த கவரி ஒரு வகை வாசனை மிகுந்த புற்களைத் தேடித்தேடி உண்ணும் என்றும் சங்க இலக்கியம் சொல்கிறது. இன்று இந்த யாக் விலங்கின் பால், ஒரு வகைப் புல்லை உண்பதால் மிகுந்த வாசனையுடன் இருப்பதாகவும், அதை 'யாக் தேநீர்' என்று விளம்பரப்படுத்தி திபெத்தில் விற்கிறார்கள் என்றும் அறிகிறோம். எங்கோ குளிர் பிரதேசத்தில் இருக்கும் யாக் விலங்கு பற்றி சங்ககால கவிஞனுக்கு எப்படித் தெரிந்தது?

தொடர்ச்சி 28ம் பக்கம்



ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்



துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304/ 16721
Tel: 02304- 910 9445
0177 20 16 941

தினசரி மாலை
6.00 மணிக்குப்
பூஜை உண்டு

Robert koch Str.5
58239 Schwerte


## சிந்துவெளியில்.... 

27 பக்கத் தொடர்ச்சி...

பழைய நினைவுகள், கதைகள், தொன்மங்களின் எச்சங்கள் அவனுக்கு இதை சாத்தியமாக்கி இருக்கலாம்.(வள்ளுவர் “மயிர் நீப்பின் உயிர்வாழா கவரிமான்” என எழுதியிருப்பதாக பரவலாக ஒரு கருத்து இருக்கிறது. ஆனால் அவர் “கவரிமான்” என்று சொல்லவில்லை. “கவரிமா” என்றுதான் சொல்கிறார். மா என்பது விலங்குகளைக் குறிக்கும் பொதுச் சொல். கி.பி.535 வாக்கில் இந்தியா, இலங்கை உள்ளிட்ட ஆசியாவின் பல பகுதிகளில் பயணம் செய்த காஸ்மாஸ் இண்டிகோப்லுஸ்டெஸ் என்ற ஐரோப்பியப் பயணி, “வால்முடியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தனது உயிரையே விடத் தயாராக இருக்கும் விலங்கான கவரி” பற்றி தனது நூலில் குறிப்பிடுகிறார்.)

தமிழர்களின் ஐந்திணைகளில் பாலையும் ஒன்று. நம்மிடம் அந்த நிலப்பரப்பு இல்லை. ஆனால் அகநானூற்றில் மருதன் இளநாகனார், “உணவுக்கே வழியில்லாத பாலையில் ஒட்டகம் எலும்பைத் தின்னும்” எனக் குறிப்பிடுகிறார். இது ஒட்டகம் வளர்க்கும் தார் பாலைவனத்தில் உள்ளவர்களுக்கே தெரிந்த செய்தி. தொல்காப்பியர், ஒட்டகத்தின் குட்டியை கன்று என்று சொல்ல வேண்டும் என இலக்கணம் வகுக்கிறார். உறையூர் மணல்மாரியால் மூடியதால் சோழர்கள் இடம் பெயர்ந்ததாக பழந்தமிழ் மரபுகள் சொல்கின்றன. மணல்மழை பாலைவனத்தில் தான் சாத்தியம்.

இன்னொரு உதாரணம் சொல்கிறேன். “பொன்படு கொங்கானம்” என்ற வரி. கொங்கணம் அதாவது கோவா, மகாராஷ்டிரப் பகுதி. இப்போதைய கொங்கண் பகுதியில் உள்ள டைமாபாத் என்ற இடத்தில் சிந்துவெளி நாகரிகக் கூறுகள் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.ஆக, சிந்துவெளி நாகரிகம் விட்ட இடமும் தமிழ்ச் சங்க இலக்கியம் தொட்ட இடமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாக இருக்கக் கூடும் என்றே கருதுகிறேன்.தமிழனின் பழைய வரலாறு என்ன என்கிற கேள்வியும், சிந்துவெளியில் வாழ்ந்தவர்கள் யார் என்கிற கேள்வியும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.ஊர்ப் பெயர்கள் சாகா வரம் பெற்றவை. அவை புலம்பெயரும் மனிதனின் நினைவோடு சென்று உயிர் பெறுகின்றன. பிறதுறை ஆய்வுகளின் உதவியுடன் செய்யப்படுகிற அறிவுப்பூர்வமான ஆய்வுகள், இந்திய வரலாற்றை உண்மையின் ஒளி கொண்டு மீட்டெடுக்க வழி செய்யும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை.

(ஒரிசா மாநில ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆர்.பாலகிருஷ்ணன். கல்லூரியில் தமிழ் இலக்கியம் பயின்றவர். இவரது வீடு சென்னை பெருங்குடியில் இருக்கிறது. இடப் பெயர்களின் ஆய்வில் 20 ஆண்டுகளாக ஈடுபட்டிருக்கும் இவர், சிந்துவெளி ஆய்வு பற்றிய தன் கட்டுரையை முதலில் கோவையில் நடந்த செம்மொழி மாநாட்டில் ஐராவதம் மகாதேவன்,

அஸ்கோ பர்ப்போலா போன்ற அறிஞர்கள் முன்னிலையில் சமர்பித்தார். தனது ஆய்வுகளை முடிப்பதற்காக தன் அரசுப் பணிக்கு 2ஆண்டுகள் விடுமுறை சொல்லிவிட்டு வந்திருக்கிறார்.)


HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
உங்கள் தாய் மொழியில்....
ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.
பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள்
கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும்
சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.



தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
ASP
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

லூட்ஸ் மாதா கோவில் புனிதப் பயணம்
April june july Aug மாதங்களில்



உணவு, தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பஸ் கட்டணம் அனைத்தும் உட்பட ஒரு வருக்கு 200 யூரோ மட்டுமே! பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.
எம் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க யேர்மனி Dortmund நகரில் இருந்தும்.Frankfurt நகரில் இருந்தும்,பல தடவைகள் லூட்ஸ் மாதா கோவிலுக்கு பஸ் மூலம் செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
தொடர்புகள்: இத்தாலிக்கும் செல்லலாம்.
யேர்மனி:K.முருகா : 02972 7754 Handy: 0175 850 14 89
லண்டன்: எஸ். கேதிஸ்வரன். Handy: 078 90 52 68 85

Bielefeld நகரில்....
Sahanan Video



Video& Foto
Full HD& Blu-ray
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளையும்
மிகத் துல்லியமாகவும்
அழகாகவும் படம்பிடித்து தருகின்றோம்.
K.Ravi
Tel:0521 42 86 528
Möbil:0177-191 21 28
e-mail:sahananvideo@hotmail.de

முக்கிய கவனத்திற்கு!
வெற்றிமணியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் மாதத்தில் இறுதிவாரம் வரை காத்திராது முடிந்தவரை, முதல் 2 வாரங்களில் புதிய விளம்பரங்களை தந்து உதவவும்!
வெற்றிமணி
யேர்மனி-லண்டன்

பிருந்தா
Pirruntha Silk House
Textile & Jewellery



தங்க நகைகள் நீங்கள் விரும்பும் இரகங்களில் பெற்றுக் கொள்ளலாம். திருமண பட்டுப் புடவைகள் மற்றும் ஆடவர் மங்கயர் உடைகளுக்கும் நாடுங்கள்.
Tel : 0711/ 61 58 976 Fax: 0711-61 42 663
Ludwig str. 92
70197 Stuttgart
Handy :01703344059

வியாபாரிகளே! ஓர் அரியசந்தர்ப்பம்
மலிந்த விலையில் தரமான kasse



Tippen Sie auf dem Bildschirm & Scannen von Barcodes kasse System & Überwachungskamera
தமிழ் கடை / உணவகம் / மொத்த வியாபாரம்
Pizza கடை / Kiosk & Mehr...
EU-gültigen Maßstab verbunden mit Kasse



Wir haben zufriedene Kunde in Deutschland , Frankreich und ganz Europa
SAT Solutions
Available on the App Store
www.theSAT.co.uk | info@theSAT.co.uk | Mohan - 0049 176 47917438 | Raam - 0044 7877898725
LIMITIERTES ANGEBOT

MÖNCHENGLADBACH நகரில் மங்கலகரமான
NEUERÖFFNUNG திறப்புவிழா! வெள்ளிக்கிழமை 27/06/2014
PRABA SUPERMARKT
Asiatische & Afrikanische Lebensmitteln



ஆரம்ப நாளை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
பசுமையான மரக்கறிகள் கடலுணவுப் பொருட்கள்
மற்றும் மளிகைப் பொருட்கள் அனைத்தும் சிறப்புவிலையில்
E-MAIL. praba_shop@hotmail.de
TEL. 02161 2946428
HANDY. 01774036454
FAX. 02161 2473832
HINDENBURGSTRASSE 212
41061 MÖNCHENGLADBACH
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



# இதில் எது ஆயிரம் காலத்துப் பயிர் சொல்லுங்கள் பார்ப்போம்!

சப்பாத்து வடிவமைப்பவர் ஒருவர் ஆயிரம் காலத்திற்கு அழியாது இருக்கும் அழகிய ஒரு சப்பத்தினை வடிவமைத்துள்ளார். இது பெண்கள் அணிவதற்கான (high heels) கீல்ஸ். 48 வயது நிரம்பிய Chris Shellis என்பவர் இங்கிலாந்தில் Birmingham வசிப்பவர்.
இவர் உணவுக்கரண்டி செய்யும் ஊலோகத்தை (everlasting stilettos) உபயோகித்து அழகிய வேலைப்பாடுடன் அமைத்துள்ளார். இந்த கீல்ஸ் ஆயிரம்வருடம் உத்தராவதம் (guarantee) உண்டாம். உலகிலேயே மிகவும் சௌகரியமான கீல்ஸ் இது என்கிறார் அதன் வடிவமைப்பாளர். தினம் ஒரு கீல்ஸ் ஆடைக்கு ஆடை மாற்றும் பெண்கள் ஆயிரம் காலம் உத்தரவாதம் உள்ளது என்பதற்காக அணியவா போகிறார்கள். வைபவங்களுக்கு போகும் போது ஒரு கீல்ஸ் வரும் போது ஒரு கீல்ஸ் என்றாகிவிட்டகாலத்தில் வந்துள்ளது இந்த ஆயிரம்காலத்துப்பயிர். அது தான் இடம் இருந்த வலம் **கறுப்புச் சட்டத்துக்குள்** உள்ள கடைசிப் படம்.



## அசட்டுத் துணிச்சல்!!!

சாதனை படைக்கவேண்டும் என்ற வெறியில் சிலசமயம் எவருக்கும் ஒரு அசட்டுத் தைரியம் வருவது சகஜயமே. இளம் கண்டு பயம் அறியாது என்பார்கள்.
கடந்த மாதம் (English Channel) கடலைக் கடக்க முயன்னற இளைஞனை கடற்கரைப் பாதுகாப்பு வலயத்தினர் தடுத்துநிறுத்தினர்.

23 வயது நிரம்பிய அப்கான் என்ற இளைஞன், தனாக வடிவமைத்த ஒரு சிறு படகில் கடலை கடக்க முயன்றபோதே தடுத்து நிறுத்தப்பட்டார். அவரது கப்பல் ஒரு முக்கோண வடிவில் ஒரு சில பலகையாலும், பாய்மரம் வீட்டில் பாவித்த ஒரு கட்டில் (bedsheet) பெட்சீட்டாலும் அமைக்கப்பட்டிருந்து.

தடுக்கப்பட்டபோது முதலில் அமைதி இழந்த இளைஞன், பின்னர் தான் செய்த்துணிந்த காரியத்தை நினைத்து வருந்தியதாகவும் (Calais) கடற்கரைப் பாதுகாப்பு வலய பாதுகாப்பு உயர் அதிகாரி Bernard Barron தெரிவித்தார்.

## மோடியும் தமிழ்மக்களும்! 3ம் பக்கத் தொடர்ச்சி

இதேவேளை புலிகள் மீதான தடையை ஐந்து ஆண்டுகளுக்கு காங்கிரஸ் கூட்டணி அரசாங்கம் கடந்த வாரம் நீடித்தது. ஆட்சி மாற்றம் வரும் என்று தெரிந்தும் அவசர அவசரமாக தடை நீடிக்கப்பட்டுள்ளது. அதுவும் வழமைக்கு மாறாக ஐந்து ஆண்டுகள் நீடிக்கப்பட்டுள்ளது. இதனை நரேந்திரமோடி தலைமையிலான அரசாங்கம் ஒருபோதும் குறைக்கவோ அல்லது நீக்கவோ முடியாது

### ப.ஜ.கவுக்கு இலகுவானது

ஏனெனில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்டது என்பதுடன் நீதித்துறை தொடர்பாக விடயங்கள் அதுவும் அரசியலமைப்பு ஏற்பாட்டுக்கு உட்பட்ட விடயங்களில் அறுதிப் பெரும்பான்மையுள்ள எந்த அரசாங்கமும் நினைத்தபடி கை கைவைக்க முடியாது. ஆகவே இந்த தடை நீடிப்பு நரேந்திரமோடி அரசாங்கத்துக்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. குறிப்பாக ஆட்சியமைத்ததும் தமிழ் நாட்டு மக்களை சமாளிக்க ஏதாவது செய்தாக வேண்டிய ஒரு நிலை இருந்தது. குறிப்பாக புலிகள் மீதான தடயை அகற்றல் மற்றும் ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்தல் போன்ற விடயங்களில் நரேந்தரமோடி கவனம் செலுத்த வேண்டிய நிலை இருந்தது.
ஆனால் புலிகள் மீதான தடை மேலும் ஐந்து ஆண்டுகள் நீடிக்கப்பட்டமை நரேந்திரமோடிக்கு சாக்குப்போக்கு சொல்ல வசதியாக அமைந்துவிட்டது. அதாவது சட்டத்தை காண்பித்து தனது அரசாங்கத்தால் எதுவும் செய்ய முடியாது என்பதை தமிழ் நாட்டு அரசியல்வாதிகளுக்கு கூற அவருக்கு வசதியாக அந்த தடை அமைந்துள்ளது. ஆகவே இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் எனபது வெறுமனே ஒரு அரசியல் நகர்வுகளே தவிர கொள்கை ரீதியாகவும் செயற்பாட்டு முறையிலும் பாரிய மாற்றங்களை கொண்டுவராது என்பது மட்டும் கண்கூடு.






“



## இந்த ராமச்சந்திரன் என்ன பண்ணுவான் என்பதை கேளுங்கள். நான் கொடுக்கிறேன்!

பணத்தோட்டம்“தான், எம்.ஜி.ஆர். நடிக்க நான் டைரக்ட் செய்த முதல் படம். முதல் நாள் படப்பிடிப்பில் எம்.ஜி.ஆர். வசனம் பேசும் ஒரு காட்சியை 7 “டேக்“ கேட்டு எடுத்தேன்.

7-வது டேக் முடிந்த பிறகு, எம்.ஜி.ஆர். எனது தோளில் கை போட்டபடி “நீங்கள் எங்கிருந்தோ வந்து, எதையோ என்னிடம் எதிர்பார்க்கிறீர்கள். ராமச்சந்திரன் என்ன பண்ணுவான் என்பதை கேளுங்கள். நான் கொடுக்கிறேன்“ என்றார்.

நான் சிவாஜி படத்தை டைரக்ட் செய்துவிட்டு, அதே நடிப்பை எதிர்பார்த்ததைத்தான், அவர் அப்படி கூறினார்.“

இவ்வாறு சங்கர் கூறினார்.

# அந்தநாள்....நினைவுகள்....

எம்.ஜி.ஆர். சொந்தமாகத் தயாரித்த படங்கள் மூன்றுதான். அவற்றில் “நாடோடி மன்னன்“, “உலகம் சுற்றும் வாலிபன்“ ஆகிய படங்களை அவரே டைரக்ட் செய்தார். மற்றொரு படமான “அடிமைப்பெண்“ணை டைரக்ட் செய்யும் வாய்ப்பை கே.சங்கருக்குக் கொடுத்தார்.

இதில் எம்.ஜி.ஆர். கூனனாக வருவார். உடலை வருத்திக் கொண்டு, சிறப்பாக நடித்தார். சிங்கத்துடன் அவர் மோதும் காட்சியும் நன்கு அமைந்தது. பல காட்சிகள் ஜெய்பூர் அரண்மனையிலும், பாலைவனத்திலும் படமாக்கப்பட்டன.

“அடிமைப்பெண்“ அனுபவங்கள் பற்றி சங்கர் கூறியதாவது:-



“பாலைவனக்காட்சிகளை எடுக்க, 1,000 ஒட்டகங்களைப் பயன்படுத் தினோம். “எல்லா ஒட்டகங்களும் படத்தில் தெரியுமா?“ என்று எம்.ஜி.ஆர். கேட்டார். “தெரியும“ என்றேன்.

ஆயிரம் ஒட்டகங் களையும், வளைந்து வளைந்து போகச் செய்து, படம் பிடித்தோம். அக்காட்சி சிறப்பாக அமைந்தது.

எம்.ஜி.ஆர், மிகவும் மகிழ்ந்து பாராட்டினார். அரண்மனையின் சுற்றுசுவரை இடித்து, “கிரேன்“ மூலமாக “ஆயிரம் நிலவே வா“ பாடல் காட்சியைப் படமாக்கினேன்.

எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் நடுவில் நிற்க சுற்றிலும் மேல் சுவரில் பதிக்கப்பட்டு இருந்த வைரங்கள் தெரியும்படி படம் எடுத்தோம். என் மேல் எம்.ஜி.ஆருக்கு மிகுந்த நம்பிக்கை இருந்ததால், அவரது சொந்தப் படத்தை டைரக்ட் செய்யும் வாய்ப்பை அளித்தார்.“

இவ்வாறு சங்கர் கூறினார்.



# திரை உலகம்



## கோச்சடையான் விமர்சனம்

நடிப்புப் பதிவாக்கத் தொழில்நுட்பம் என அழகு தமிழில் அழைக்கப்படும் மோஷன் கேப்சரிங் டெக்னாலஜியில் வெளியாகும் முதல் இந்தியப் படம் எனும் ஒரு மைல் கல்லுடன் இந்தத் திரைப்படம் அறிமுகமாகிறது !
அதென்ன நடிப்புப் பதிவாக்கத் தொழில்நுட்பம் ? ஹாலிவுட்டில் பல காலமாக பயன்படுத்தப்பட்டு வரும் தொழில் நுட்பம் தான். திரைப்படம் முழுவதுமோ, அல்லது தேவைப்படும் காட்சிகளிலோ அதை இயக்குனர்கள் பயன்படுத்துகின்றனர். ஃபேன்டஸி வகை திரைப்படங்கள், அறிவியல் புனைவுகள், கற்பனை உலகங்கள் இவற்றையெல்லாம் திரையில் கொண்டு வர ஹாலிவுட் நம்பியிருப்பது இந்த பெர்ஃபாமன்ஸ் கேப்சரிங், அல்லது மோஷன் கேப்சரிங் தொழில் நுட்பத்தைத் தான். போலார் எக்ஸ்பிரஸ், லார்ட் ஆஃப் த ரிங்க்ஸ், டின் டின், பியோல்ஃப், அவதார், ஹாபிட் போன்றவையெல்லாம் நமக்குப் பரிச்சயமான உதாரணங்கள்.

அந்த நுட்பத்தை நம்பிக்கையுடன் தமிழ்த் திரையுலகிற்கு இழுத்து வந்திருப்பதற்காகவே சவுந்தர்யா குழுவினருக்கு பாராட்டுகளை வழங்கலாம். காலம் காலமாக திரைப்படங்கள் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்து வந்திருக்கின்றன, அந்த வகையில் இப்போதைய இந்த தொழில் நுட்பமும் பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் யாரும் நிராகரித்து விட முடியாது எனும் இடத்தை இப்போது எட்டிப் பிடித்திருக்கிறது.

சரி, கோச்சடையான் எப்படி ?
இல்லாத ஒன்றைப் பிரமாண்டமாகக் காட்டுவதில் தான் இந்த தொழிநுட்பம் தனது கைவரிசையைக் காட்டும். ஒரு அவதார் போல பண்டோராவை உருவாக்க வேறு என்ன வழி ? அந்த சிந்தனையை மனதில் கொண்டு தான் இப்படி ஒரு வரலாற்றுக் கதையை தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். மாபெரும் கோட்டை கொத்தளங்கள், மிகப்பெரிய படைக்களங்கள், சாகசங்கள், மின்னல் வேக செயல்பாடுகள் என புகுந்து விளையாடத் தோதான ஒரு கட்சிதமான கதைக் களம்.

கதையொன்றும் புதிதில்லை. தந்தையின் கடைசி ஆசையை நிறைவேற்றி, தந்தையைக் கொன்றவனைப் பழிவாங்கும் ஒரு மகனின் கதை தான். அதை கே.எஸ். ரவிக்குமார் தனக்கே உரிய மசாலாக்களுடன், திருப்பங்களுடன் சுவாரஸ்யமாக்கியிருக்கிறார்.

இந்தப் படத்தை தனது குரலினால் தாங்கியிருக்கிறார் ரஜினிகாந்த். தனது டிஜிடல் உருவத்துக்கு துடிக்கும் குரலினால் உயிர் கொடுத்து ரசிகர்களை படத்தோடு ஒன்றிப் போக வைத்திருக்கிறார். முடிந்த வரை ரஜினியின் மேனரிசங்கள், ஸ்டைல், அசையும் தலைமுடி என ரசிகர்களின் எதிர்பார்ப்புகளை பார்த்துப் பார்த்து பூர்த்தி செய்திருக்கிறார்கள். படம் பார்த்துக் கொண்டிருக்கையில் ஒரு மாய உலகம் என்பதை மறந்து அதனுள் நுழைந்து பயணிக்க இவையெல்லாம் ரொம்பவே உதவுகிறது.

ரஜினி, நாசர், ஷோபனா, நாசர் தவிர மற்ற கதாபாத்திரங்களின் உருவங்கள் முழுமையடையாமல் இருப்பது படத்தின் முக்கியமான குறைகளில் ஒன்றாகச் சொல்லலாம். சரத்குமார், ரஜினியின் தங்கையாக வரும் ருக்மணி இவர்களையெல்லாம் அடையாளம் கண்டு கொள்ளவே மாமாங்கம் ஆகிவிடுகிறது. நினைவில் வாழும் நாகேஷைதிரையில் உலவ விட்டிருப்பதும், அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் குரலும் அருமை ! தீபிகா படுகோன் பார்பி டால் மாதிரி அங்கும் இங்கும் அசைந்து திரிகிறார். அதிரடியாய் ஒரு சண்டையும் இடுகிறார்.

ரஜினிக்கு அடுத்தபடியாக, படத்தைத் தூக்கி நிறுத்தும் மிக முக்கியமான இன்னொரு விஷயம் ஏ.ஆர்.ரஹ்மானின் இசை. போர்களிலும், பாடல்களிலும், கடல்பயணங்களிலும், மழையிலும், பஞ்ச் வசனங்களிலும் ரஹ்மானின் இசை நம்மை கட்டிப் போட்டு விடுகிறது.
பளிச் பளிச்சென வருகின்ற வசனங்கள் படத்துக்கு வலுசேர்க்கின்றன. கே.எஸ்.ரவிகுமாரிடம் கதை- திரைகதை வசனம் பொறுப்பை ஒப்படைத்தது இந்தப் படத்துக்கு ஒரு நல்ல தேர்வு என்பதை நிரூபித்து விடுகிறார். வேகமான முதல் பாதியும், படு வேகமான முதல் பாதியும் என அவருடைய டிரேட்மார்க் பாணியில் கதை சொல்லியிருக்கிறார்.
தொழில்நுட்பம் ? ம்ம்.... 100 ஆண்டு கால இந்தியத் திரைப்படத்திற்கு புது வரவு என்பதால் வரவேற்கலாம். ஆனால் பதினைந்து ரூபாய்க்கு லேட்டஸ்ட் ஹாலிவுட் திரைப்படங்கள் கிடைக்கும் இன்றைய சூழலில் சர்வதேச ஒப்பீடுகளையே சாமானிய ரசிகனும் செய்கிறான். அந்த வகையில் கோச்சடையான் இன்னும் பல ஆண்டுகள் தொழில்நுட்பத்தில் பின் தங்கியிருப்பது போல ஒரு உணர்வு. முப்பரிமாண தெளிவு பல இடங்களில் குறைவுபடுகிறது.
ஆனாலும் தைரியமாக எடுத்து வைக்கப்பட்ட முதல் சுவடு இது என்பதையும், பலருடைய கேலி கிண்டலையும் தாண்டி இது வசீகரிக்கிறது என்பதையும் சொல்லித் தான் ஆகவேண்டும். கோச்சடையான், வீச்சுடையான் !


ஓம் சக்தி ஜோதிடம்
உலகப் புகழ்பெற்ற இந்திய ஜோதிடர்
பண்டித் ரவி சங்கர்




அனைத்து மதத்தினரும் வரலாம்
தலைமுறை தலைமுறையாக
ஜோதிடக்கலை
பயின்றவரும் ஜோதிட வித்துவான்

வியாபாரம் - எதிரிகள் - உடல்நிலை வேலை குழந்தையின்மை
திருமணம் - பணம் - குடிபோதை காதல் - விசா விவாகரத்து
வழக்குகள் - கண்திருஷ்டி குடும்ப ஒற்றுமை படிப்பு
வாகனப்பொருத்தம் - லாட்டறி மற்றும் பல

0152 106 203 76 // 0152 187 244 10

Gartenstr. 185
41236 Monchengladbach. Germany

T.J.B Brothers ஸ்தாபனத்தின் இரண்டாவது கிளை ஸ்தாபனம்
Mönchengladbach நகரில் மனங்கவர்ந்த சேவையில்....




Asiatischer super markt
ஆசியா சமுத்திரம்
பசுமையான மரக்கறிகள்- கடல் உணவுப் பொருட்கள் - வீட்டுக்குத்தேயையான மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.
Vijay tv agent

ஆசியா சமுத்திரம்
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
Handy:0178 60 68 780

Sun TV நீண்ட நாள் பிரதிநிதிகள்

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

தமிழ்க்கடை
Parkhofstraße-97
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281

Ria Money Transfer
துரித பணமாற்றுச் சேவை
Money Transfer



SUN TV
Vijay TV
மலிவு விலையில்
சந்தா அட்டைகள்
கம் காமாட்சி அம்பாள் தேரடியில்
எம் நிலையத்தில் கிடைக்கும்
06.07.2014

19 வருட சேவையில் தங்கமாய்
ஜொலிக்கும் நம்பிக்கை ஸ்தாபனம்

LITTLE INDIA
Textile & Jewellery

அழகான ஆடைகளுக்கும்
பஞ்சாபி வகைகளுக்கும்
தங்க நகைகளுக்கும்
பெயர் பெற்ற ஸ்தாபனம்

LITTLE INDIA
02131 273692



Ria Money Transfer MoneyGram துரித பண மாற்றுச் சேவை!

EurAsian - Tours



info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy

அனைத்து விமானச் சீட்டுக்களையும், குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள். India Visa பெறவும் உதவி செய்வோம். அத்துடன் தங்குமிட வசதி, Tour Bus ஒழுங்குகள் செய்து தரப்படும். முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொண்டு ஆசனங்களைப் பதிவு செய்யலாம்.

Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Rishi 0174 96 44 965

Eurasian Tours
Adolf - flecken -Str.11
41460 Neuss



ASIA BAZAR

Ria Money Transfer MoneyGram

உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்ப வேண்டுமா! இதோ!!!
துரித பண மாற்றுச் சேவை!

ஆசிய, ஆபிரிக்க உணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும் இலங்கை,
இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள். இன்னும் பல...

உரிமையாளர்: பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

யேர்மனியில் டோட்மூட் நகரில் சுவையான உணவிற்கு

தரமும் சுவையும் தரும்...



Tel:0231- 7252859

CEYLON IMBISS
இலங்கை உணவகம்

இலங்கை, இந்திய, உணவுகள், தரம் குன்றாத சுவையுடன் கிடைக்கும்!
திங்கள் முதல் சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில்
16.00 -22.00 மணி வரை

Annen Str.1
44137 Dortmund



HP:0173 1937 325
T.Mohanadas

Jasmine Silk House

என்றும் புதியன, அழகுக்கு அழகுசேர்க்கும் அற்புதமான டிசைன்களில் அழகிய சேலைகள். மங்கையர் மனம் நாடும் பஞ்சாபிகள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள்அனைத்தும் நிறைவான தெரிவுக்கு நம்மை நாடுங்கள்

ஜஸ்மின் சில்க் ஹவுஸ்

Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen

புது டிசைன்களுடன்
புதிய வரவுகள்



Tel:02102 844744

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!

StaR - Impex
StaR-Impex

தரம்
அதுவே
நிரந்தரம்

Asia & Afro Großhandel & Einzelhandel

6 வது ஆண்டில் உங்கள் அபிமான ஸ்தாபனம்

கடல் உணவு வகைகள் மற்றும்
பசுமையான மரக்கறிகள்
வாராவாரம் உடனுக்குடன்
இறக்குமதி செய்கின்றோம்!



மாதம்தோறும் எமது மலிவுவிற்பனையை பார்வையிட
Web.Star-impex.net



Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00

Kipper str.Tor.3
44147 Dortmund
Germany

StaR Impex : Inh :K.Sivasubramaniam
Mobil: 0172/2183703 - E-Mail: star-impex@live.de

Tel:0231 860 26 96 Fax: 0231/8602698